Registered as a Newspaper

பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்

TAMILALAI

ஞாயிற்றுக்கிழமை, 18-01-2004 ஓசை -41

## உலக நாடுகள் அபாய சமிஞ்சை

## சிந்திக்க தவறிய சார்க்

## இந்திய பயணத்தில் சந்தேகம்



## தென் தமிழீழ அபிவிருத்திபற்றி ஆய்வு



தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

வாரமலர் தமிழ் அலை Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
18.01.2004

## பொங்கு தமிழில் பொங்கட்டும் உணர்வுகள்

ஜனாதிபதியும் பிரதமரும் அரசியல் நெருக்கடியில் இழுபறிப் பட்டுக் கொண்டிருக்கும் இத்தகய ஒரு சூழலில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் பொங்கு தமிழாய் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

எதிர்வரும் 21ம் திகதி வந்தாறுமூலை கிழக்குப்பல்கலைக்கழக முன்றலில் நடைபெறவுள்ள இப் பொங்கு தமிழ் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் அழைத்து தமிழ்மக்களின் உணர்வுகளை நேரடியாகக் கண்டுணர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது.

சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும். புரிந்துணர்வுடன் படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தீர்க்கப்படவில்லை, விடுதலைப்புலிகள் சமாதான முன்னெடுப்பில் கொண்டுள்ள பற்றுறுதியை சிறிலங்கா அரசாங்கமும் இதர சக்திகளும் சமர்தான முரண் செயற்பாடுகளுக்கு பாவிப்பதை கண்டித்தல். இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கில் அரச பயங்கரவாதத்தாலும் அடிவருடிகளாலும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் விடுதலைப்போராட்ட காலத்தில் கொன்றழிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு நேர்ந்த கதிபற்றி அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும். போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழினத்தின் உரிமைகளை சர்வதேச ராஜதந்திர அணுகுமுறைகளுக்கு ஏற்ப அரசியல் பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக் கொள்வதற்கு விடுதலைப்புலிகள் தொடர்ந்து பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக புரிந்துணர்வுடன் படிக்கையின் பிரகாரம் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்கின்றனர் அரசாங்க தரப்பினால் நம்பிக்கையீனமான நிகழ்வுகள் இடம் பெற்றபோதும் சமாதானத்தில் காட்டும் ஆர்வத்தை பற்றுறுதியை அனைத்து தமிழ் மக்களும் இணைந்து பொங்கு தமிழ் உணர்வுகளாக சொரிய வேண்டும்.

எதிர் வரும் 21ம் திகதி நடைபெறும் பொங்கு தமிழ் நிகழ்வில் ஒவ்வொரு தமிழ் உணர்வாளர்களும் பார்வையாளராக ஓரம் நின்று பார்க்காது எமது தேச விடுதலைக்காக நாம் செய்யும் கடமை என்று உணர்ந்து நிகழ்வில் கலந்து கொள்ள வலியுறுத்தப்படுகிறீர்கள்

உங்கள் உணர்வுகள் வீரம் விளை நிலத்தில் நிகழவிருக்கும் பொங்கு தமிழிலில் பொங்கி வழியட்டும்.

# உலக நாடுகள் அபாய சமிஞ்சை

**ஜி.நடேசன்**

சிங்கள அரசியல் வரலாற்று நாடகத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் அண்மையில் புதியகட்சியை அரங்கேற்றியிருக்கிறார். கடந்த வருடம் நவம்பர் மாதம் 2ம் திகதி திடீர் நடவடிக்கையாக ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள பாதுகாப்பு, உள்துறை, தொடர்பு சாதனத் துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் திருப்பித்தந்தால் புலிகளின் தலைவருடன் தான் கைச்சாத்திட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் சமாதான நடவடிக்கைகளை தொடர்வேன் இல்லையேல் ஜனாதிபதி புலிகளுடன் புதிய ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளட்டும். சமாதான முயற்சிகளை கையளிக்கத் தயாரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



அறிவித்திருக்கிறார்.

குருநாகல் பண்டுவஸ்த்து பகர கொல்ல என்ற இடத்தில் மின்சார திட்டமொன்றை ஆரம்பித்து வைத்த பின்னர் ஜனாதிபதிக்கு மின்சார அதிர்ச்சியைக் கொடுக்க வேண்டுமென்ற பேரார்வத்துடனேயே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தான் பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி தொடர்ந்து தன்வசம் வைத்திருக்க விரும்புவாரேயானால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் பொறுப்பேற்று தொடர வேண்டும் என்று பிரதமர் தனது நிலைப்பாட்டை இறுக்கமாக வலியுறுத்தியிருக்கிறார்.

உடனடியாக ஒரு பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டாமென்று அமெரிக்கா ஜப்பானியத் தூதுவர்கள் பிரதமரையும் ஜனாதிபதியையும் சந்தித்து வலியுறுத்தியதுடன் இருவரும் அரசியல் இழுபறியைக் கைவிட்டு அரசியல் குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் உதவிகளை நிறுத்தப் போவதாக அபாயச் சங்கை ஊதியதையடுத்து புதிய காட்சிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இருவாரங்களுக்கு முன்னர் உள்துறை அமைச்சின் கீழிருந்து பாதுகாப்பு அமைச்சிக்கு மாற்றப்பட்ட பல பொறுப்புக்களைக் கடந்த செவ்வாய் நள்ளிரவு வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலம் மீண்டும் ஜனாதிபதி உள்துறை அமைச்சிடம் ஒப்படைத்தது வெளிநாட்டு தூதுவர்களின் அழுத்தங்களுக்கு தான் செவிசாய்த்ததாகக் காட்டுவதற்கே.

பிரதமரும் மறுநாள் பொறுப்பேற்ற அமைச்சுக்களைத் தாருங்கள். இல்லையேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் புதுப்பித்து சமாதான நடவடிக்கைகளைத் தொடருங்கள் எனக் கூறியதும் சர்வதேச அழுத்தங்களால் ஏற்பட்ட உற்சாகத்தின் எதிர்வினையே.

பிரதமருடைய புதிய கருத்து வெளிப்பாடு குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்த பிரதிபலிப்பில் ''நடைமுறைச் சாத்தியமற்ற கருத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மட்டுமல்ல நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவரே. எனவே ஜனாதிபதியின் பங்களிப்புடனும் சமாதான நடவடிக்கையே தேவை. யதார்த்தமானதும் கூட. பிரதமர் குறுகிய அடிப்படையில் சமாதான நடவடிக்கையைத் தொடர்ந்ததாலேயே பிரச்சினைகள் எழுந்தன ஜனாதிபதியின் அமைச்சு பொறுப்பேற்ற நடவடிக்கை அரசியலமைப்பிற்கு அமைவானதே" எனத் தெளிவுபடுத்தியுள்ளது.

மக்கள்விடுதலை முன்னணியோ பாதுகாப்பு அதிகாரங்கள் இல்லாது எதுவும் செய்ய முடியாது என்று கூறும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

தற்போதய அரசியல் நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்படாவிட்டால் அல்லது பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் இலங்கைக்கான உதவிகள் உடனடியாக நிறுத்தப்படுமென ஜப்பானிய அமெரிக்கத் தூதுவர்கள் ஜனாதிபதியையும், பிரதமரையும் நேரடியாகச் சந்தித்து வலியுறுத்திய நிலையிலும் அதிகார இழுபறிப்போட்டி குறைந்து வருவதாகத் தெரியவில்லை. இது நாட்டின் நலன்களுக்கும் அப்பால் சொந்த சுயலாப அரசியலைக் கருத்தில் கொண்டதாகவே போட்டி அமைவதாகச் சுட்டிக் காட்டுகிறது.

அதிகார இழுபறி காரணமாக தடைப்பட்டது சமாதான முயற்சிகள் மட்டுமல்ல நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பொருளாதார உதவியுமாகும். டோக்கியோ மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிதியில் ஆயிரம் மில்லியன் ரூபா இவ்வாரம் வரவிருந்தது. அத்தோடு மேலதிகமாக யப்பான் 400மில்லியன்களைக் கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்காக வழங்கவிருந்ததும் தடைப்பட்டுள்ளது. அத்தோடு இருதரப்பு இழுபறி முடிவுக்கு வராவிட்டால் யப்பான் அரசாங்கம் வழங்க ஒப்புக் கொண்ட ஏனைய நிதி உதவிகளையும் நிறுத்தும் நிலையிலிருந்து சிந்திக்க வேண்டி ஏற்படுமென்றும் யப்பானியத் தூதுவர் அபாய அறிவிப்புச் செய்திருக்கிறார்.

அதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொட அமைச்சர் கே.என்.சொக்ஷி ஆகியோர் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அதிகாரிகளைச் சந்தித்து வரவு செலவுத்திட்ட துண்டு விழும் தொகை மற்றும் சிபாரிகளுக்கு அமைவாக இம்மாத நடுப்பகுதிக்குள் நிதிஉதவி வழங்குமாறு கேட்டபோது குறைந்தபட்சம் பிரமருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் பொது இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் என்ற நிபந்தனைகளையே அவர்களும் விடுத்துள்ளனர்.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான இழுபறி தொடருமானால் எந்தவித நிதிஒதுக்கீடும் வெளிநாடுகளிலிருந்து கிடைப்பதற்கான சாத்தியங்கள் அருகி வருவதையே சர்வதேச நாடுகளதும் நிதி நிறுவனங்களதும் நிலைப்பாடு தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

ஜனாதிபதி அகச்சூழலுக்குள் பிரதமருக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலம் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தலாமென மனப்பால் குடித்தார். ஆனால் சர்வதேச நிதி நிறுவனங்களின் அபாயச் சங்கு ஒலியும் அமெரிக்காவின் பிரத்தியேகமான எச்சரிக்கையுடன் கூடிய அழுத்தமும் ஜனாதிபதிக்கு உறுத்தலாகவே உள்ளன. எனினும் நிதிநெருக்கடியை ரணில் அரசாங்கம் எதிர் நோக்குவதை தான் சாதகமாகப் பயன்படுத்தலாமென்ற நம்பிக்கையுடன் இருப்பதாகவும் தெரிகிறது.

தற்போதய அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதாயின் ஜனாதிபதி தான் பொறுப்பேற்றமூன்று அமைச்சுக்களையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்க வேண்டும். அது சாத்தியமானதாக தென்படவில்லை. தற்போதைய அரசியலமைப்பு உள்ளவரை ஜனாதிபதி இவ்விடயத்தில் மசிந்து கொடுக்கக் கூடிய சாத்தியமில்லை.

அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று அமைச்சுக்களையும் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்ற தனது நிலைப்பாட்டைக் கைவிட்டு ஜனாதிபதியுடன் இணங்கி செல்ல வேண்டும். இதனை நிராகரிக்கும் வகையில் கடந்த புதனன்று பிரதமர் தனது நிலைப்பாட்டை அறுதியாகவும் இறுதியாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

மூன்றாவதாக இரண்டு பிரதான கட்சிகளும் தேவையெனில் ஏனைய கட்சிகளையும் இணைத்து தேசிய அரசாங்கம் அமைத்தல். இதனை ஐக்கிய தேசிய கட்சி மட்டுமல்ல ஏனைய சிறிய கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் சாத்தியமில்லை.

பொதுத் தேர்தலை நடாத்துவதன் மூலம் தீர்வு காண்பதாயின் அதற்காக 800 மில்லியன்களைச் செலவிடக் கூட திறைசேரியில் நிதிஇல்லை. மேலும் யப்பான், அமெரிக்க தூதுவர்கள் இதற்குக் கடுமையான எதிர் வினையை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளார்.

ஆக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்குமிடையிலான கால் நூற்றாண்டு போரில் உயிர் உடமை அழிவுகளையும், பொருளாதார சறுக்கல்களையும் நாடு எதிர் கொண்டது. இப்போது போர் ஓய்ந்துள்ள நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தர அரசியல் தீர்வு காண்பதைத் தவற விட்டு சிங்கள தேசத்து கட்சிகள் அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரம் சமாதானச் சூழலில் அதிகார போட்டியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. போர்ச் சூழலிலும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நாடு வெளிநாட்டு உதவிகள் கிட்டாத நிலையில் அதிகார இழுபறி போட்டியை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறது என்பதே பூதாகரமாக எழுந்துள்ள கேள்வி.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் மக்கள் ஆணையைப் பெற்று கைச்சாதிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதன் மூலம் சிங்கள தேசம் மீண்டும் ஒரு முறை சமாதான வழிமுறை மூலம் தீர்வு காணும் முயற்சியைக் கைநழுவ விடப்போகிறதா? கைநழுவினால் முதல் பொறுப்பை ஜனாதிபதியே மீண்டும் ஏற்கும் நிலை ஏற்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னைய சமாதான முயற்சிகளின் போது இருந்ததைவிட இப்போது பலம் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள். அதேவேளை பொறுமையைக் கடைப்பிடித்து சமாதான நடைமுறையில் உள்ள அக்கறையையும் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தி வருகிறார்கள். புலிகள் காட்டிவரும் சமாதானத்தின் மீதான பற்றுறுதி சர்வதேச அரங்கில் அவர்கள் தொடர்பான அபிப்பிராயத்தையும் சாதகமாக கட்டியெழுப்பியிருக்கிறது.

1983ம் ஆண்டு கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து சர்வதேச அரங்கில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இழந்துவிட்ட நன்மதிப்பை மிகுந்த பிராயத்தனங்களுக்கு மத்தியில் படிப்படியாகக் கட்டியெழுப்பியது. ஆனால் 2004ம் ஆண்டு



சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் ஜனாதிபதியும் பிரதமரும் அதிகார இழுபறியில் ஈடுபட்டிருப்பது மீண்டும் ஸ்ரீலங்கா பற்றிய அபிப்பிராயம் சர்வதேச அரங்கில் சரிந்து வருகிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் எத்தனை நாளைக்குத் தான் சித்தரிக்க முடியும்.

சிங்கள தேசத்தின் சாயம் வெளுத்து வருகின்றது.

## ஆனந்தசங்கரி சம்பந்தன் இந்தியாவுக்கு திடீர்ப்பயணம்


# கூட்டணி ஆதரவாளர்கள் சந்தேகம்

சார்க் மாநாட்டை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் அரசியல் மாற்றங்கள் இடம்பெறலாம் என்பது உறுதியான நிலையில் தென்னிலங்கை அரசியல் கட்சிகள்மட்டுமல்ல, தமிழ் அரசியல் கட்சிகளும் உஷாரடைந்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு ஒப்பந்தம் இன்னும் இருவாரங்களில் கைச்சாத்திடப்பட உள்ளது. அதில் முக்கியமான உடன்பாடுகளில் ஒன்று பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிட வேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் ஏப்ரல் மாதமளவில் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

பொதுத்தேர்தலுக்குத் தயாராகுமாறு சகல ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருக்கிறார். இருவருடங்களுக்குள் மீண்டும் ஒரு தேர்தலை இந்த நாடு சந்திக்கப் போகிறது. இந்நிலையில் குழப்பங்களையும் மோதல்களையும் எதிர்நோக்கியிருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு போட்டியிடுவது சாத்தியமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அடுத்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனித்தே போட்டியிடும் என அக்கட்சியின் தலைவராக இன்னமும் தானே இருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஆனந்தசங்கரி கூறியிருக்கிறார். கடந்த வாரம் கொழும்பிலிருந்து வெளியான தமிழ் தினசரி ஒன்று யாழ். குடாநாட்டு மக்களிடையே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு தொடர்பாகக் கருத்துக்களைப் பெற்று பிரசுரித்திருந்தது. அதில் கருத்துக் கூறிய அனைவரும் ஆனந்தசங்கரியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் கடந்த தேர்தலில் அவருக்கல்ல தமிழர் விடுதலைக்கூட்டணிக்கே வாக்களித்தோம் எனக் கூறியிருக்கிறார்கள். மக்களின் செல்வாக்கை இழந்த நிலையிலும் அரசியலில் இருந்தோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்தோ ஒதுங்கப்போவதில்லை என ஆனந்தசங்கரி கூறிவருதன் மூலம் அவரின் பின்னால் ஒரு சக்தி செயற்படுகிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அரசியல் களநிலவரத்தை அறியாதவர்களாக அல்லது அறிய மறுப்பவர்களாகத்தான் இருக்க முடியும்.




கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வெற்றியும் அதன் அரசியல் நிலைப்பாடும் வெளிப்படையாகச் சொல்லப்போனால் இந்தியாவுக்கு அறவே பிடிக்கவில்லை. தனது செல்லப்பிள்ளைகளாக இருக்கும் ஈ.பி.டி.பி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகியன மக்களின் செல்வாக்கில்லாதவை என்பதும் இந்தியாவுக்குத் தெரிந்த விடயம்தான். இதனால்தான் தமிழ் தேசியக்கூட்டமை ப்பிற்குள் பிளவை ஏற்படுத்துவதற்குச் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்புடன் ஒட்டுறவு இன்றி இருந்து வந்த ஆனந்தசங்கரி தமிழ் தேசியக்கூட்டமைப்பில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும்கூறிவந்தார். புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பை விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் சந்தித்தது. அந்த முதலாவது சந்திப்பில் மட்டும் ஆனந்தசங்கரி கலந்துகொண்டார். அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடனான சந்திப்பைத் தவிர்த்து வந்தார். ஆனால் கடந்த டிசம்பர் 2ம் திகதி நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆனந்தசங்கரிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்ததையடுத்து அவர் வெளிப்படையாகவே கூட்டணியில் உள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும், தமிழ் தேசியக்கூட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சிகளையும் விடுதலைப் புலிகளையும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரே ஒரு மனிதன் நானேதான் எனக் கூறிவரும் ஆனந்தசங்கரி அக்கட்சி இனிமேல் வடகிழக்கில் எந்த ஒரு கட்சியுடனும் சேர்ந்து போட்டியிடாது என அறிவித்திருக்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றுள்ளதால் அத்தீர்ப்பு வரும்வரை அக்கட்சியின் சின்னத்தில் தேர்தலில் போட்டி யிடுவது சாத்திய மில்லாத ஒன்று.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ் சுரேஷ் அணி ஆகியன தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்று இணைந்து தமது பலத்தைக் காட்டின. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் பக்கபலமாகச் செயற்பட்டன. இதை விரும்பாத சக்திகள் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சித்தன.

அந்த சக்திகளால் உள்வாங்கப்பட்ட ஆனந்தசங்கரி அன்றிலிருந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பை விமர்சித்து வந்ததுடன் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் எனக் கூறி சர்ச்சையை கிளப்பத் தொடங்கினார். இந்த சர்ச்சைகளின் உச்சக்கட்டமாகவே ஆனந்தசங்கரி மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.



ஆனந்தசங்கரி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆரம்பத்திலேயே கொண்டுவந்து அவரை தலைமைப் பதவியிலிருந்து நீக்கியிருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி நெருக்கடிகளைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்வதற்குச் செயலாளர் சம்பந்தன் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறியதும் ஒரு காரணம் எனக் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் குற்றம் சாட்டுகின்றனர். கடந்த டிசம்பர் மாதம் 2ம் திகதி மத்திய செயற்குழுக் கூட்டம் குழப்பத்தில்முடிவடைந்ததை யடுத்து அம்பா றையில் மத்திய குழுவைக் கூட்டுவதென முடிவெடுக்கப்பட்டு மத்திய செயற்குழு உறுப்பினர் களுக்கு செயலாளர் சம்பந்த னும், நிர்வாக செயலாளர் ரவிராஜும் கடிதங்களை அனுப்பிய பின்னர் ஆனந்த சங்கரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து தடை உத்தரவைப் பெற்றுக் கொண்டதால் அக்கூட்டம் மத்திய செயற் குழுக் கூட்டமாக அன்றி பிரசாரக்கூட்டமாக மாற்றப்பட்டது. அக்கூட்ட த்தில் ஜோசப் பரராசசிங்கம், மாவை சேனாதிராசா, ரவிராஜ், துரைராசசிங்கம், சந்திரநேரு உட்பட கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஆனால் செயலாளர் ஆர்.சம்பந்தன் கலந்து கொள்ளவில்லை.

**இரா.துரைரத்தினம்**

இது மத்தியசெயற்குழுவில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல கூட்டணியின் ஆதரவாளர்கள் இடையே பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கிறது. முக்கியமாக அம்பாறையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் பலத்த கிசுகிசுவையும் ஏற்படுத்தியிருந்தது.

கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்த பின்னர் ஒரு சில தினங்களில் இந்தியத் தூதரகத்திற்கு சம்பந்தன் அழைக்கப்பட்டு இவ்விடயம் பற்றி அவருடன் பேசப்பட்டது. இச்சந்திப்பின் போது ஆனந்தசங்கரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தமைபற்றி இந்தியத் அதிகாரி சம்பந்தனிடம் அதிருப்தியை வெளியிட்டதாகவும் தகவல்கள் வெளியா கியுள்ளன.

அம்பாறைக் கூட்டத்திற்கு அழைப்பை விடுத்த செயலாளர் சம்பந்தன் இந்திய தூதரக அதிகாரியுடனான சந்திப்பையடுத்து அக்கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொண்டார்.

ஆனந்தசங்கரியைக் கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து நீக்கும் நடவடிக்கையிலிருந்து மெல்ல நழுவும் போக்கை சம்பந்தன் கடைப்பிடிக்க ஆரம்பித்திருக்கிறார். விடுதலைப்புலிகளால் ஆனந்தசங்க ரியின் உயிருக்கு ஆபத்து அவரை காப்பாற்றுங்கள் என உலகெங்கும் உள்ள மனிதாபிமான அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு மின்னஞ்சல் பிரசாரம் ஒன்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியாவின் ஆதரவுடன் இயங்கும் தமிழ் இயக்கம் ஒன்றினால் நடத்தப்படும் இணையத்தளம் மூலமே இந்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவை ஆனந்தசங்கரி மீது அனுதாபம் கொண்டு செய்யப்படுகிறது என யாராவது நினைத்தால் அவர்களின் அரசியல் அறிவைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அடுத்த பொதுத்தேர்தலின் போது விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்படும் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுமாறு இந்திய தரப்பில் ஆனந்த சங்கரிக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்நிலையிலேயே 5ம் திகதி திங்கட்கிழமை ஆனந்தசங்கரியும் சம்பந்தனும் இந்தியாவுக்கு சென்றிருக்கின்றனர். தாங்கள் தனித்தனியாவே சென்றிருப்பதாகவும், தனிப்பட்ட காரணங்களுக்காக சென்றதாகவும் இருவரும் கூறினாலும் இவர்கள் அங்கு தனிப்பட்ட காரணத்திற்காக சென்றார்களா இந்தியாவின் அழைப்பின் பேரில் சென்றார்களா என்ற சந்தேகம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்தியசெயற்குழுவில் உள்ள ஏனையவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனந்தசங்கரியை தன்கைக்குள் போட்டுக்கொண்ட இந்தியா சம்பந்தனையும் தன்வலைக்குள் சிக்கவைத்துவிட்டதா என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளது.

### போடியார் பொறிவெடி

மீண்டும் யுத்தம் வெடிக்க ஜனாதிபதி வித்திடக் கூடாது.

~அமைச்சர் சந்திரசேகரன்

வித்த நாட்டித்தாவு. இப்ப முளைக்கிறதத்தான் பாத்திருக்காவு......



# முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி தமிழ் முஸ்லிம் உறவினை மேலும் சீரழிக்கும்

அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் அட்டாளைச்சேனை, பொத்துவில் போன்ற இடங்களில் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்றைய சமாதான சூழலில் இவ்வாறானதொரு பயிற்சி நடைபெற்று வருவது தமிழ் மக்கள் மனதில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளதெனலாம்.

மீண்டும் யுத்தம் ஒன்று வருமோ எனத் தமிழ் மக்கள் கலக்கமடைந்துள்ளனர். யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஆயுதம் ஏந்திய முஸ்லிம் குழுக்கள், ஊர் காவல் படையினர் மேற்கொண்ட அத்துமீறல்கள், இனப் படுகொலைகள் ஆகியனவற்றை அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் மறக்கவில்லை. இராணுவத்தினரின் உதவியுடன் தமிழர்கள் மீது இவர்கள் மேற்கொண்ட வன்முறை மிக ஏராளம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இளைஞர்கள் அரசபயங்கர வாதத்திற்கெதிராகப் போராடி வந்த காலத்தில், அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சந்தித்த பாரிய உயிர் அழிவுகள், சொத்தழிவுகள், வாழ்க்கை அவலங்கள் பற்றி, முஸ்லிம் சமுகம் நன்கறிவர்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டமானது, வடக்குக் கிழக்கு மாகாணங்களில், பூர்வீகக் குடிகளான தமிழர்களது வாழ்வியலை மட்டுமன்றி அவர்களது புராதன வாழ்விடங்களையும் சிதைக்க வழிகோலியதும் தெளிவு.

இதேவேளை, தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமைக்கு நியாயமான காரணிகள் உள்ளன. அவர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைத்தீவானது அந்நியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு தமிழர்கள் அரசியல் ரீதியில் ஏமாற்றப்பட்டு வந்தனர். தமிழர்களது நியாயமான உரிமைகள் பேரினவாத அரசுகளால் மறுக்கப்பட்டு வந்தன. குறிப்பாக இலங்கை அரசியலில் ஏற்பட்டு வந்த மாற்றங்களின் பெறுபேறுகளின் விளைவே ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்த பிரதான காரணிகள்.



01. தனித் தேசிய இனமான தமிழர்களது நியாபூர்வமான அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமை.
02. வடக்கு, கிழக்கில் (தமிழர் தாயகம்) மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள்.
03. தமிழர்கள் பொருளாதாரத்தை அழிக்க எண்ணித் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்த இனக்கலவரங்கள் (1956.77.83)
04. தமிழர்கள் மேற்கொண்டு வந்த சாத்வீகமான உரிமைப் போராட்டங்கள். இராணுவ பலத்தால் அடக்கப்பட்டமை, நசுக்கப்பட்டமை.
05. தமிழர்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு இனப் படுகொலைகள் மேற் கொள்ளப்பட்டமை.

இந்நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை நினைக்கத் தலைப்பட்டனர். தமிழ் சமூகமானது சிங்களப் பேரின வாதத்திடம் இழந்த உரிமைகளைப் பெற்றுக்

**உதயன்**

கொள்ளவும், இழந்த தமது தாயகப் பிரதேசங்களை மீட்கவும் தமிழ் மக்களின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்கவும் வேறு மார்க்கம் இன்றியே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குள்ளாயினர்.

இதேவேளை யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப புலிகளுக்கும், அரசுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுச் சமாதானம் நிலவி வரும் சூழலில், முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அவசியம் என்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சமாதான விரும்பிகள் எவரும் இதனை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெறவேண்டும். தமிழர் தரப்பினால் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்பதெல்லாம் வெறும் போலியான காரணங்கள் எனலாம். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பில்லை என்று கூறமுடியாது. கடந்த இருபது வருடங்களாக முஸ்லிம்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் சுமூகமான உறவு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செந்தமிழும் செம்மை செய்யப்பட்ட சமஸ்கிரதமும்

அவரின் கருத்தை தேவவாக்கெனக் கொண்டு அதைப் பரப்பினார்கள். ஆனால் மார்க்ஸ் மில்லர் தன் கடைசி காலத்தில் மொழி சம்பந்தமாகப் பல உண்மைகளைக் கண்டறிந்தார். அதை அவர் தன் டயரில் வரைந்து வைத்தார். ''நான் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த போது பல அதிர்ச்சியூட்டும் பல செய்திகள் கிடைத்தன. அவை அனைத்தும் உண்மையானவை எனவும் புரிந்து கொண்டேன். அதாவது சமஸ்கிரதம் ஒரு செய்யப்பட்ட மொழி என்றும், அவற்றிலும் மிகப் பழைய மொழி தமிழ் மொழி என்றும், அம்மொழியே இந்திய மொழிகளில் தாய் மொழி என்றும், தனது டயறியில் எழுதி வைத்தா.

அது மட்டுமின்றி தன் பிற்காலத்தில் ஆரிய இனம் என்ற பதம் பற்றி ஐயம் கொண்டிருந்தார். அதை அவர் 1883ம் ஆண்டு எழுதி வெளியிட்ட ''Biography of Words'' என்ற நூலில் ''ஆரிய இனம்- ஆரிய இரத்தம்- ஆரியர்களது கண்கள்- தலைமுடி பற்றிப் பேசுகிற இனயியளாளர்கள் என்னைப் பொறுத்தவரையில் டொலிக்கோ செயலிக் அகராதி பற்றியோ பிறாச்சி செபலிக் இலக்கணம் பற்றிப் பேசும் மொழியியல் ஆளன் போன்று ஒரு குற்றவாளியாகக் கணிக்கப்படுவான். ''ஆரியர் என்றொரு இனமில்லை'' என்கிறார் பேராசிரியர் சேனக்க பண்டாரநாயக்க.

ஆரிய இனமே இல்லை என அதைத்தூக்கி நாவிலும் தோளிலும் காவியவர்களே கீழே வீசி சிதறி அடித்தழிக்கும் போது- ஆரிய மொழி எம்மாத்திரம்- அதுவும் ஒரு கட்டுக் கதையேயாகும்.

வட இந்தியாவில் அன்று வழக்கில் இருந்த தமிழ் மொழியும்- தென்னிந்தியாவில் வழங்கி வந்த தமிழுக்கு மிடையிருந்த வேறுபாட்டை மாற்றுவதற்காக இரு பகுதித் தமிழையும் தொடர்புபடுத்த ஒரு தொடர்பு மொழியை அன்று வடநாட்டை ஆண்ட குப்த மன்னர்களும் பல்லவ மன்னர்களும் தென்னாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களும் சேர்ந்து செய்தார்கள். அதுதான் சமஸ்கிரதமாகும். செய்யப்பட்ட மொழி என்பது அதன் பொருள்- ஆரம்பத்தில் தமிழாகவே இருந்தது- இடையில் வரருசி என்பவர் சில மாற்றங்களைச் செய்து இலக்கணம் செய்தார்- இவரைத் தொடர்ந்து பாணினி காலத்தில் வட இந்தியாவைக் கிரேக்கர்கள் படையெடுத்து வெற்றி கொண்டார்கள். கிரேக்கர் ஆட்சிக் காலத்தில் சொல்லமைப்பில் தமிழாக இருந்த சமஸ்கிரதத்தைப் பாணினி கிரேக்க சாயலில் இலக்கணம் அமைத்தார். இதுவே சமஸ்கிரதம் ஆரிய மொழியான வரலாறாகும்.

## சமஸ்கிரத மொழியை ஆக்கியவர்கள்

வட இந்தியாவிலும்- இலங்கையின் வடபகுதியான மாதோட்ட மாந்தையில் வாழ்ந்தவர்கள் தேவநாகர் என்ற தெய்வீகக் கம்மியர்களாகும். அவர்களே சமஸ்கிரதமொழியைச் செப்பமிட்டு தங்கள் தொழில் சார்மறை மொழியாகப் பாவித்து வந்தார்கள். இதனால் இம்மொழி தேவநாகரி எனப்பட்டது. காரணம் தேவநாகர்களால் உருவாக்கப்பட்டதால் தேவநாகரி எனப்பட்டது. அவர்கள் பாவித்த மறைமொழி என்ற பதமே பிற்காலத்தில் வேதமொழி என்ற பொருளைத் தந்து நிற்கின்றது. இதைத்தான் தென்னாட்டு போர் என்ற நூலெழுதிய பன்மொழிப் புலவர் திரு.க. அப்பாத்துரை அவர்கள் ''நாகர்களே சமஸ்கிரத மொழிக்கு எழுத்து வடிவம் செய்தவர்கள் என்று சுட்டிக் காட்டியுள்ளார். தேவநாகர்களின் கலைப்படைப்புகள் அனைத்தும் அவர்களின் தொழில் சார் மறை மொழியான சமஸ்கிரத மொழியில் இன்றுமிருக்கிறது. இவ்வாறு கட்டிடக்கலை, சிற்பம், சித்திரம், ஓவியம், வானயியல் வைத்தியம் போன்ற துறைகளைச் சேர்ந்த 32நூல்கள் இன்றும் சமஸ்கிரதத்தில் உண்டு.

01. விஸ்வகர்மியம், விஸ்வம், விஸ்வசாரம், பிரபோதம், வருத்தம், மயமதம், துவட்டா, தந்திரம், மனுசாரம், நளம், மானவிதி, மானகல்பம், மானசாரம், பகுச்ருதம், சிருஷ்டமமான போதம், விஸ்வபோதம், ஆதிசாரம், விஸாலாக்ஷம், விஸ்வகாஸ்பயம், வஷ்துபோதம் மகாதந்திரம் , வாஸ்துவித்தியாபதி, பாராசரீயம், காலயூபம, சைத்தியம், சித்ரம், ஆவர்யம் சாதகசாரசம்ஹிதா, பானுமதம், ஐந்த்ரமதம்-



லோகக்னம- சௌரம்.

இவற்றை விடுத்து மனுசாரம் என்னும் நூல் இன்னும் பல நூல்களின் பட்டியலைத் தருகிறது. ஈஸானம், சித்திரகாஸ்யபம், பிரயோகமஞ்சரி, பெருஹிதம், பௌத்தமதம், கௌதமம், குலாலம், வாசிடம், மனோகல்பம், பார்கவம், மார்கண்டம், கோபாலம், நாரதீயம், நாராயணியம், காஸ்யபம், சித்திரயாமளம், சித்திராபாகுள்யம், தேஸியம்.

இந்நூல் பண்டு தொட்டு தென்னாட்டில் அதுவும் தமிழ் சிற்பிகளிடமும் ஸ்தபதிகளிடமும் இருந்து வருகின்றன. இந்நூல்களுக்கும் ஆரியர் என்ற வர்க்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவை ஆசாரிமார்களின் அனுபவமூலம் கிடைத்த அருங்கலைப் பொக்கிசங்கள்.

'''இந்துமதம் ஆரியர் மதமல்ல. அது இந்திய மதம்- திராவிடசமயம் எனக் கூறுவது மிகப் பொருத்தம். பக்கம் சாராமல் நடுநின்று பார்க்கில் இந்த உண்மை விளங்கும். ஆரியர்கள் வாழும் கிரக்கத்திலோ அல்ல பாரசீகத்திலோ இந்துமத நெறி கிடையாது. எனவே திராவிட மதத்தைக் கற்றுத் தமதாக்கிக் கொண்டார்கள் என சார்லஸ் எலியட் கூறியதை திரு- சடாஜியும், கலாநிதி ராதகிருஷ்ணனும் ஏற்றுள்ளார்கள்.

இந்துமதம் சம்பந்தமான தத்துவங்கள் சமய நெறிகள் அனைத்தும் சமஸ்கிரதமொழியில் இருக்கிறது. அது எப்படி என்ற கேள்வி எழலாம். எழ வேண்டிய அவசியம் ஆதியில் தேவநாகர்களான கம்மாளரே கைத்தொழில், கட்டிடம், சிற்பம், சித்திரம் ஆகிய துறைகளில் முன்னின்றவர்கள்- அவர்களின் ரிசிகளும் சித்தர்களே ஆலயங்களையும் விக்கிரகங்களையும் ஆக்கியதோடு- அவற்றை நடைமுறைப்படுத்தும் விதிகளையும், கட்டமைப்புகளையும் கையாண்டார்கள். அவற்றைத் தம் தொழில்சார் மறை மொழியான சமஸ்கிரதத்திலே எழுத

**பூ.ம.செல்லத்துரை**

வந்தார்கள்- ஆக்கியவர்கள் பெயர் அனைத்தும் ஆச்சாரி என்றிருந்தது.

ஆரியர்கள் முதல் தாக்கத் தொடங்கியது. ஆசாரிமாரையும் ஆலயங்களையும் தான். அதன் பின் சேர- சோழ- பாண்டியரை வசப்படுத்தி, அவர்களூடாக ஆசாரிமார் வகுத்துவந்த இராசகுரு பதவியைத் தமதாக்கி- ஆசாரிமாருக்கு அரசர்கள் ஊடாகவும்- தங்களை அண்டிய தமிழர் ஊடாகவும் அடிக்கடி தொல்லையும்- துயரும் கொடுக்க- சித்தர்களும் அறிஞர்களுமான ஆசாரிமார் நாட்டை விட்டகன்றன. சமஸ்கிரதத்தை மறை மொழியாகப் பாவித்த விற்பன்னர்கள் வெளியேற- அம்மொழியைக் காப்பாற்றவும் வளர்க்கவும் அவ்விதைத்தவர்கள் முன்வராததால்- ஆரியர் அம் மொழியைத் தமதாக்கினார்- தங்கள் விருப்பத்திற்கு வேதங்களை மாற்றினார்கள். கதைகளை மாற்றினார்கள், தட்டிக்கேட்க சமஸ்கிரதமொழி தெரிந்த விற்பன்னர்களில்லாததால் எல்லாம் தாங்களே என்றாக்கிக் கொண்டார்கள். இரண்டு மூன்று தலைமுறையின் பின் சமஸ்கிரதம்- அவர்களின் , தாய் மொழியாகிவிட்டது. சில நூல்களின் ஆரியரின் பெயர்கள் ஆச்சாரி என வருவதால் ஆரியர்கள் தங்கள் பெயரையும் ஆச்சாரிகள் என்று வைக்க முனைந்தார்கள்- இதைக் சென்னை நீதிமன்றம் கண்டித்து- ஆசாரி அல்லது ஆச்சாரி என்பது விஸ்வகர்ம மக்களின் குலப் பெயர் எனக் கூறியுள்ளார்கள். எனவே சமஸ்கிரதம்- தமிழரின் கிளை மொழி கால கட்டத்தில் ஆரியர் வசமாகி- வடமொழி ஆக்கியதேயொழிய- தமிழ்மொழிக்கு முந்தியதல்ல.

# ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையை

# சிந்திக்கத் தவறும் சார்க்

தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் கூடிய சார்க் உச்சிமாநாடு இஸ்லாமாபாத்தில் மூன்று நாட்கள் வெகு கோலாகலமாக நடைபெற்றது.

இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழுநாடுகளின் தலைவர்களுக்கு செங்கம்பளவரவேற்பு, விருந்தோம்பல், மகிழ்ச்சி ஆரவாரம், மனதில் கிழுகிழுப்பு நிகழ்ச்சிகள் இத்தனையும் நடைபெற்ற சார்க் மாநாடு ஏனோ ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி கடுகளவேனும் சிந்தியாது சீர்தூக்காது வாய்மூடி மௌனிகளாக நோக்குவது வருந்தத்தக்கது.

ஈழத்தமிழர் விடயத்தில் மேற்குலக நாடுகள் ஐரோப்பிய நாடுகள் காட்டும் கரிசினை, அக்கறை அண்டைய நாடுகளான தெற்காசிய நாடுகள் காட்டாது இருப்பது ஒருபக்கம் வியப்பில் ஆழ்த்துகிறது.

1985ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி டாக்கா நகரில் சார்க் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

* தெற்காசிய மக்களிடையே நலன்களை மேன்படுத்தல், வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்தல்.
* பிராந்திய பொருளாதார நலன்களை மேம்படுத்துதல், கலாசார அபிவிருத்தியை துரிதப்படுத்துதல்
* பொது அக்கறை உடைய விடயங்களை ,கூட்டுறவைப் பலப்படுத்துதல்.

போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய சார்க் மாநாடு தெற்காசியாவில் ஒரு சிறுபான்மையினம் பெரும் பான்மை சிங்களச் சமூகத்தால் அரசியல் ரீதியாக அடிமைப்பட்டு அரசியல் சுதந்திர உரிமைகள் இன்றி வாழ்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 1985ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி முதலாவது சார்க் மாநாடு ஆரம்பமானது. இற்றைவரை 19 வருடங்கள் நிறைவாகிவிட்டது. ஈழவிடுதலைக்காக தமிழினம் தமது சுயநிர்ணயத்தை தனியரசை அமைத்துக் கொள்வதற்கான விடுதலைப் போராட்டம் தொடக்கப்பட்டு அரும்பு விட்ட காலகட்டம் சார்க் மாநாட்டின் ஜனன காலம் என்று குறிப்பிடலாம்.


இக்கால கட்டத்தில் சிறிலங்கா அரசியலில் தலைமை வகித்தவர் காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இவரது ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் இன்று பலம் மிக்க தமிழீழத்தின் தேசிய ராணுவமாக விடுதலைப் புலிகள் பரிணமித்து நிற்கின்ற அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா, விஜயதுங்கா, சந்திரிகா இவ்வாறு சிறிலங்கா தேசத்தை ஆட்சி செய்த தலைவர்கள் சார்க் மாநாடுகளில் கலந்து கொண்ட தெற்காசிய நாடுகள் வட்டத்தில் தமது செல்வாக்கைக் காட்டியதுடன் ஈழத்தமிழினத்தின் பிரச்சினைகளை மூடி மறைத்தனர். தமிழர் தரப்பால் விடப்பட்ட கோரிக்கைகள் குப்பைக் கூடைக்குள் கசக்கி எறிந்த காகிதத் துண்டங்களாகப் போனதுதான் மிச்சம்.

தெற்காசிய பிராந்திய நாடுகளில் அணுவாயுத வல்லமை கொண்ட நாடுகளாக ஏட்டிக்குப் போட்டியாக இருக்கும் பாகிஸ்தான், இந்தியா பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய ஒரு அடித்தளத்தை நடந்து முடிந்த சார்க் மாநாடு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக உலகநாடுகளின் தலைவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

போர்ப்பதற்றம் நிலவிய இந்திய பாகிஸ்தான் உறவில் இப்படி ஒரு நல்லிணக்க சூழ்நிலை ஏற்படுவதென்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயம்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் - இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் கைலாகு கொடுத்து நேரடியாகப் பேசியிருப்பது பகைமை உணர்வை களைந்துள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலைக்கு வழிவகுத்த சார்க் நாடுகளின் கூட்டத்தொடர் என எடுத்துக் கொள்ளும் போது சிறிலங்கா தேசத்தில் இருபது வருடத்திற்கு மேலாக தமிழின விடுதலைக்காக தற்கொடை ஈர்ந்து, குருதி சிந்தி அரசுக்கு இணையான இராணுவ சமபலத்துடன் விளங்கும் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் செய்து கொண்ட புரிந்துணர்வுடன்படிக்கையைப் புறம் கூறும் சந்திரிகா இனவாதக் கட்சிகளின் கூச்சல் கோரிக்கைக்கு ஆட்பட்டு ஐ.தே.கட்சி அரசிடம் இருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்துக் கொண்டது.



இப்போது சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியாது எனக் கூறி சந்திரிகாவின் தலையில் ரணில் பழிபோட்டு நிற்கிறார். இத்தனைக்கும் ஜனாதிபதிதான் காரணம். சார்க் நாடுகள் கூட்டத் தொடரில் இந்த அம்மணி கலந்து கொண்ட போது தெற்காசியத் தலைவர்கள் தமிழினத்திற்குத் தயவாய் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடந்த மாநாடுகள் போகட்டும். இப்போது தமிழினத்தின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் அதிக கரிசனைகாட்டுகின்றன. உலக



வல்லரசான அமெரிக்கா கூட சமாதானப் பேச்சுக்கள் தொடரப்பட வேண்டும் என்பதை ஆணித்தரமாக ஒரு அழுத்தமாகப் பிரயோகித்திருக்கிறது.

அண்மையில் அமெரிக்கா ராஜாங்க அமைச்சர், பிரதி ராஜாங்க அமைச்சர் ஆகியோர் இந்த எச்சரிக்கை கலந்த அறிவிப்பினை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் விடுத்திருந்தனர். இவற்றைத் தட்டிக் கழிக்க முடியாது தடுமாறி நிற்கிறார் ஜனாதிபதி. இவ்வாறான ஒரு

**வேணிதன்**

நிலையில் துன்பியல் நிகழ்வுகளால் ஈழத் தமிழர் பிரச்சினையை ஏனோ தானோ என புறம் தள்ளி வரும் இந்தியா தெற்காசிய நாடுகளில் ஒரு வல்லரசாகத் திகழ்கிறது. தெற்காசிய நாடுகளில் மாலைதீவு, பூட்டான், நேபாளம் போன்ற நாடுகளுக்கு இராணுவ உதவி வழங்கக் கூடிய நாடாக விளங்கும் இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினையில் பாராமுகமாக நோக்கும் நிலையில் அதனை எதிர்த்தோ அல்லது பகைமை கொண்டோ இதர சார்க் நாடுகள் ஈழத் தமிழர் விவகாரத்தில் மௌனம் காப்பது தெற்காசிய வட்டத்தின் ஜனநாயகப் பண்பற்ற செயலாகும். இந்தியா எப்படி எமது பிரச்சினையை நோக்கினாலும் யதார்த்தம் எது என்பது தெற்காசிய நாடுகளுக்குத் தெரிந்த விடயம் இப்படியான சூழ்நிலையில் இந்தியாவைக் கூட ஈழத்தமிழர்கள் விடயத்தில் ஒரு சாதகமான போக்கை கடைப்பிடிக்க தெற்காசியர்கள் நினைத்தால் முயற்சி செய்யலாம். இருந்தும் அவ்வாறான ஒரு நிலை உருவாக்கப்படாமல் இருப்பது துரதிஷ்ரமான ஒரு வரலாற்றுத் தவறு. எதிர் காலத்தில் பாகிஸ்தான்- இந்திய போர்ப் பதற்றம் தணிந்து இரு நாடுகளும் இன ஐக்கியம் ஏற்படுமானால் அது சார்க் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஒரு பாரிய வெற்றியாக கணிக்கப்படும்.

அது போன்று சிறுபாண்மைச் சமூகங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் குரல் கொடுப்பதற்கும் சார்க் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தெற்காசிய நாடுகளில் அரசியல் தலைமைகளின் அராஜகப் போக்கினால் குருதியாய் பாய்தோடும் நிலையில் ஆண்டுக்கொரு முறை உச்சி மாநாடுகூடி உணவருந்தி குசலம் விசாரித்து கூடிக் கலைவதனால் பயன் எதுவும் இல்லை. எதிர் காலத்திலாவது தெற்காசிய நாடுகள் சிந்தித்து செயற்படுவது சிறந்தது.

## சொன்னாலும் குற்றம்



தேனாட்டில் மத்தியில தண்ணீர் பாச்சும் (காட்டும்) மாவட்டக்கந்தோர் ஒன்றில் கடமை புரியும் 'காத்தான்' ஊரைச் சேர்ந்த "தண்ணீர் பொறியாளர்" ஒருவர் அந்த அலுவலகத்திற்கே தண்ணீர் காட்டுகிறாராம், மாதத்திற்கு ஒருதடவை கரடி பிறை காண்பதைப் போன்று தலையைக் காட்டிப் போட்டு தலை மறைவாகிடுவாராம்.

தார்ப்பீப்பாவின் நாமத்தை உடைய இந்த மனிசனுக்கு அங்கு கடமை புரியும் பெரிய ஐயா நல்ல சப்போட்டாம். நோன்பு கஞ்சியும், பெருநாள் பலகாரமும்கொடுத்து அந்த "பாஸ் கொடுக்கும் தாஸ்" ஐயாவை கைக்குள போட்டுத்தாராம்.

இதனால அந்தப் பெரிய ஐயா அவசரதேவையெண்டால் தொலை பேசிமூலமாக காத்தான் ஊர் ஐயாவுடன் காதோடு பேசி காரியத்தை முடிக்கிறாராம்.

அது மட்டுமல்ல அரசியல் செல்வாக்குள்ளவர் என்டதாலயும், பெரிய வர்த்தகரின் புள்ளி என்றதாலயும் பாஸ் கொடுக்கும் ஐயாவிற்கு பாரிய உதவிகளையும் செய்துள்ளதாகவும் கேள்வி,

மாவட்டத்திற்கு மத்தியில தண்ணீர் பாச்சும் இவர்கள் காரியாலத்திற்கு தண்ணீர் காட்டுவதையிட்டு அங்கு கடமை புரியும் ஏனைய ஊழியர்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

# வறுமை நிவாரணத்திலும் வயிற்றில் அடிக்கும் அரசு

## வவுனியா மக்களின் அவல நிலை....

சமுர்த்தி முத்திரை வழங்கல் ஏன் வவுனியா மாவட்டத்தில் பாகுபாட்டுடன் வழங்கப்படுகின்றது? இலங்கையில் வவுனியா மாவட்டம் தமிழரின் புறக்கணிப்புக்களைப் பரீட்சித்துப் பார்க்கும் மாவட்டமா?

வவுனியா மாவட்டத்தில் சுமார் பதினாறாயிரம் குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கத் தகுதியாக உள்ளன. இதில் உடனடியாக பதினொராயிரம் குடும்பங்களிற்கு சமுர்த்தி முத்திரை வழங்க வேண்டியுள்ளது. வறுமை நிவாரணத் திணைக்களமோ ஒன்பதாயிரத்தி எழுநூற்றி இருபத்தியிரண்டு பேருக்கு மட்டுமே முத்திரை வழங்கியுள்ளது. இதிலும் வவுனியா மாவட்ட மக்களிற்கு துரோக மிழைத்துள்ளதாகவே தெரிகின்றது. ஏனைய மாவட்ட மக்களிற்கு அறுநூறுரூபா, ஆயிரம் ரூபா. பெறுமதியான முத்திரைகள் வழங்கப்படுகின்றன. இத்தொகையான முத்திரைகள் வவுனியா மாவட்டத்தில் வழங்கப்படவில்லை. ஏன் இப்படியான பாகுபாட்டினை வவுனியாவை நோக்கிச் செலுத்துகின்றீர்கள்?

கடந்த கால் நூற்றாண்டு போரினால் வவுனியா மாவட்ட அபிவிருத்தி மிகவும் குறைந்துள்ளது. (ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது வீதி புனரமைப்பு, கோவில்களை இடித்து மீண்டும் கட்டுவது, சேதமடைந்த பாலங்களைத் திருத்தி அமைப்பது போன்றவற்றில் இல்லையென்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்) வன்னி மண்ணின் வளங்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் கணிசமானவை சிக்கியுள்ளன. இங்கு தொழில் வாய்ப்பு மிகவும் குறைந்து போயுள்ளது. மக்கள் ஏக்கத்துடனான இலக்குத் தெரியாத வாழ்விற்குள் சிக்குப்பட்டுள்ளனர். இது தொடர்பாக சில அதிகாரிகள் கூறுவார்கள் மக்கள் சும்மாயிருந்து சாப்பிடுவதற்கு கற்றுக் கொண்டு விட்டனர். நிவாரணங்களிற்கு கையேந்துவதே தொழிலென எண்ணுகின்றனர். உண்மை தான் இது ஒடுக்குமுறையாளர்களின் வெற்றி... உண்மை நிலையினை ஆய்வு ரீதியான சிந்தனை மூலம் புரிந்து கொள்ளுங்கள். மக்கள் நிவாரணத்திற்குக் கையேந்தும் நிலை எமது மண்ணில் இருப்பதற்கு ஆதரவான கருத்து தொடர்வது அனுமதிக்க முடியாததே. அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் எந்தவிதமான வேறுபாடுமின்றி அதற்காகப் பாடுபட வேண்டும்.

*. சமுத்தி திட்டம் பற்றி இன்னும் சில தகவல்கள் வேதனை தருவனவாகவே உள்ளன. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்ளைச் சேர்ந்த மக்களிற்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்படுவதில்லை. திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களிற்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்படுகிறது. ஆனால் நூற்றி நாற்பது ரூபாய், இருநூற்றி ஐம்பது ரூபாய், முன்நூற்றிஐம்பது ரூபாய், நாநூறு ரூபாய், ஆகிய பெறுமதியுடைய முத்திரைகளே வழங்கப்படுகின்றன. ஆயிரம் ரூபாய், அறுநூறு ரூபாய் பெறுமதியான முத்திரைகள் வழங்கப்படுவதில்லை. ஏன் இந்தப் பாகுபாடு. முன்பொருதடவை வவுனியாவில் சமுர்த்தி முத்திரை பெறும் மக்கள் போராட்டமொன்றைச் செய்தனர். அந்த மக்களுடையபோராட்டம் மதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை, வவுனியா கச்சேரியில் கூட்டமொன்று நடந்தது. அதிலும் இது விடயமாக ஆராயப்பட்டது. பயன் எதுவும் இல்லை. இப்பொழுது இந்தப் பாகுபாடு ஏனென்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியுள்ளார். இதிலாவது பயன் கிட்டுமா, மக்கள் கூறுகின்றனர் ஏனிப்படி பாகுபாடு செய்கின்றீர்கள்? இப்படிச் செய்வதிலும் பார்க்க தராமல் விடலாமே... எமக்கு எலும்புத் துண்டு போடுவது போல கொஞ்சத்தை எறிந்து விட்டு.... வடக்குக் கிழக்கையும் நாம் கைவிடவில்லை என்று அறிக்கையிடப் போகிறீர்களா? இந்தக் கேள்வி யாரிற்கு என்று யாராவது சிந்திக்கலாம். தொப்பி மேலே எறியப்பட்டுள்ளது. அளவானவர் தலையை கொடுங்கள்.

இந்த முத்திரை வழங்கல் பாகுபாடு தொடர்பாக அந்தந்த மாவட்டங்களில் பொறுப்பாக பணிபுரியும் அலுவலர்கள் ஏன் இது விடயமாக மேலதிகாரிகளிற்கு அறிக்கை அனுப்பக் கூடாது. சில வேளை நீங்கள் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருப்பீர்கள். தகுந்த பயன் கிடைக்க வில்லையென்றால் மீண்டும் என்ன செய்தீர்கள்?

மக்களே நீங்களும் இது தொடர்பான கேள்விகளை அமைதியாக உறுதியாக எழுப்புங்கள். உங்களிற்குள்ள உரிமை என்ன என்பது பற்றி உங்களிடமே கேள்வி எழுப்பிப் பாருங்கள். நீங்கள் குடிக்கும் தேனீருக்கும் இந்த அரசிற்கு வரி செலுத்துகின்றீர்கள். சாதாரண அரச ஊழியன் தொடக்கம் நாட்டில் உயர் பதவி வகிக்கும் ஜனாதிபதிவரை அனைவரும் கூலி பெறுவது எங்கள் வரிப்பணத்திலிருந்து என மக்களே மனதிலிருத்திக் கொள்ளுங்கள். உங்களிற்குள்ள உரிமைகளை எந்த மேற்தட்டுவர்க்க போக்காளரிற்கும் விட்டுக் கொடுக்காதீர்கள் சில அதிகாரிகள் என்று சொல்லப்படுபவர்கள்... மக்கள் அவர்களை சந்திக்க வரும் போது..எஜமானிய தோரணையில் நடப்பார்கள். அவர்களிற்கு

**கனகரவி**

வாயும் கையும் கட்டி நிற்கும் மக்களை தமது வேலையாள் போல நோக்கும் ஒரு நோக்கம் உள்ளது. மெய்யான விடயம் என்னவென்றால் மக்களின் ஒவ்வொருவனும் துளிதுளியாய் கொடுக்கும் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் அவர்கள் மக்களின் வேலையாட்கள் இதனை இல்லையென்று எவராவது சொல்ல முடியுமா, (சிலர் நீதியாக பணியாற்றுகின்றனர். அவர்களை மதிக்கிறோம் இங்கு குறிப்பிடுவது அவர்களிற்கானதல்ல என்பதனையும் தெரிவித்து செல்வது முக்கியமென்றே எனக்குத் தென்படுகின்றது.)

ஒரே. நாடு ஒரே மக்கள், வடக்கு தெற்கு உறவுப் பாலம் என்றெல்லாம் குரல் கொடுப்பவர்கள் என்ன மாயமோ மர்மமோ தெரியவில்லை... மக்கள் மீதான பாகுபாட்டு நடவடிக்கைகளைக் கண்டு கொள்வதில்லை. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள் என்பதும் தெரியும். ஆனால்... அவர்களின் உண்மையான முகம் எதுவென்பதைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது சொல்லி வைப்பது மக்களிற்கு விழிப்புணர்வொன்றை ஏற்படுத்துமல்லவா? மக்களைத் தொடராக ஏமாற்ற முடியாது என்பதை அனைவரும் புரிவது அவசியமாகும்.

பிழைப்புவாத அரசியல்வாதி






மக்களுடைய இது போன்ற பிரச்சினைகளை தீர்த்து வைப்பது கிடையாது. தமக்கு நாட்டில் பெரும் அரசியல் பிரச்சினை தீர்த்து வைக்க வேண்டிய கட்டுப்பாடுடையவர்கள் என்று போக்கு காட்டுவார்கள். எதற்கும் சாயும் மக்கள் கூட்டமொன்று சேற்றில் நட்ட தடி போல எந்தப் பக்கம் சாய்ந்தாலும் சாயும் நிலையுள்ளவரை இவர்கள் தப்பிப் பிழைப்பார்கள். உண்மை உரைக்கப்படும் போது தான் என்ன நடந்து முடிந்துள்ளதென்று தெரியும். பட்ட காயத்திற்கு மருந்து தடவ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது.. இதனாலென்பது ஆணித்தரமாகக் கூறக்கூடியதாகும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்.....



## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்:- சமாதான நடவடிக்கையில இருந்து தாம் முழுமையாக விலகப்போறதாக ரணில் சொல்லிப் போட்டாரே...

கலந்தர்:- சந்திரிக்கா அம்மாட்ட பாதுகாப்பு அமைச்சர் பதவி இருக்கும் மட்டும் சரிவராது எண்டத்தில உறுதியாக இருக்காரு....

கந்தர்:- குரங்கு அப்பம் புறிச்ச கதை மாதிரி எலுவா இவங்கட கூத்து...

கலந்தர்:- அம்மா சமாதானத்தக் கொண்டு இழுக்க வேண்டியது தானே...

கந்தர்:- அவங்க கயிறு இழுக்கும் மட்டும் இது சரிவராது...

கலந்தர்:- அப்ப இப்படியே காலத்தக் கடத்தினாச் சரியா...

கந்தர்:- கொஞ்சம் பொறன் காலம் பதில் சொல்லும்...

# இந்தியாவின் துரோகத்திற்கு பலியான போராளிகள்

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 41**

**இந்தியாவும் ஈழத்தமிழரும்**

**"நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் விழும்போதில் எல்லாம் எனது இதயம் வெடிக்கும்; ஆயினும் சோகத்தினால் நான் சோர்ந்துபோவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டி இருக்கின்றன."**

*- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.*

- நிராஜ் டேவிட் -

கைது செய்யப்பட்டிருந்த 17 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் இந்தியப்படையினர் . அதுவரை வழங்கிவந்த பாதுகாப்பை உடனடியாக விலக்கிகொள்ளுமாறு புதுடில்லி உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இந்தியப் படை ஜவான்கள் அவ்விடத்தை விட்டு



அகன்றிருந்தார்கள்.

புலி உறுப்பினர்களின் பாதுகாப்பைப் பொறுப்பேற்ற ஸ்ரீலங்காப் படையினர், அவர்களை உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லும் முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

விமானத்தைத் தயார் நிலையில் வைத்துவிட்டு, புலி உறுப்பினர்களை அழைத்துச் செல்ல விரைந்த ஸ்ரீலங்காப் படை உயரதிகாரி பிரிகேடியர் ஜயரெட்ன விற்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. கைதுசெய்யப்பட்டிருந்த 17 புலி உறுப்பினர்களும் தமது கைகளில் 'சயனைட்' குப்பிகளை வைத்திருந்தார் கள். தாம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டால், தாம் 'சயனைட்டை' உட்கொள்ளப போவதாக அவர்கள் தெரி வித்தார்கள். பிரிகேடியருக்கு இது பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

'புலிகளின் கைகளில் திடீரென்று எங்கிருந்து 'சயனைட்' குப்பிகள் முளைத்தன என்பது பிரிகேடியருக்குப் புரியாமல் இருந்தது.

புலி உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்ட போது அவர்களிடம் இருந்த ஆயுதங்கள், 'சயனைட்டுக்கள்' என்பன படையினரால் அகற்றப்பட்டிருந்தன. அப்படி இருக்க தற்பொழுது புலிகள் எங்கிருந்து இந்தச் சயனைட்டுக்களைப் பெற்றிருந்தார்கள் என்பது, இலங்கைப் படை அதிகாரிக்கு விடை காண முடியாத கேள்வியாகவே இருந்தது.

## பிரபாகரன் கொடுத்த சயனைட்

இந்தப் போராளிகளுக்கான 'சயனைட்' குப்பிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களே அனுப்பிவைத்திருந்தார்.

தாம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, எதிரியினால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவதை விட, புலிகளின் மரபுப்படி தமது உயிரை தாமே மாய்த்துக் கொள்ள அனுமதிக்குமாறு, கைதுசெய்யப்பட்ட நிலையில் இருந்த 17 விடுதலைப் புலி உறுப்பிர்களும் புலிகளின் தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். தமது விருப்பத்தைக் கடிதங்கள் மூலம் பிரபாகரன் அவர்களிடம் அனுப்பிவைத்திருந்தார்கள். அன்டன் பாலசிங்கம் கொண்டுவந்திருந்த அவர்களது கடிதங்களைப் படித்த புலிகளின் தலைவர் பெரும் சினம் கொண்டார்.

தடுப்புக் காவலில் உள்ள தமது



போராளிகளின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவது தனது கடமை என்று அவர் உணர்ந்தார். முக்கிய தளபதிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு ஒரு முடிவிற்கு வந்தார்.

தனது கழுத்தில் இருந்த 'சயனைட்' குப்பியை மாத்தையா விடம் கொடுத்தார். அவரைத் தொடர்ந்து அங்கு மாத்தையாவும், அன்டன் பாலசிங்கமும் தமது கழுத்துக்களில் மாட்டிக்கொண்டு, கைதுசெய்யப்பட்டிருந்த 17 விடுதலைப் புலி உறுப்பினர்களையும் சந்திக்கப் புறப்பட்டார்கள். தயக்கத்தோடும், மனமின்றியும் அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். கைது செய்யப்பட்ட நிலையில் இருந்த புலி உறுப்பினர்களைச் சந்தித்த அவர்கள் 'சயனைட்டுக்களை' இரகசியமாக ஒப்படைத்தார்கள்.

குமரப்பா தனது மனைவிக்குக் கூறும்படி சில செய்திகளைத் தெரிவித்தார். குமரப்பா திருமணம் முடித்த ஒரு மாதமே ஆகியிருந்தது. புலேந்திரனும் தனது மனைவிக்குச் சில செய்திகளைத் தெரிவிக்கும்படி கூறியிருந்தார்.

திருமணமாகி இரண்டு சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தந்தையாகி இருந்த கரன், தனது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய ஆவலை வெளியிட்டார்.

அன்டன் பாலசிங்கமும், மாத்தையாவும் அந்த 17 போராளிகளையும் விட்டுப் பிரிய மனமில்லாது, அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள்.

## தற்கொடையை தடுக்க நினைத்த அதிகாரி:

1987ம் ஆண்டு அக்டோபர் 5ம் திகதி, ஸ்ரீலங்காப் படை அதிகாரி பிரிகேடியர் ஜெயரெட்ன, பலாலி தளத்தில் இருந்த தனது படைவீரர்களைத் திரட்டினார். அவர்களுள் நல்ல திடகாத்திரமாக இருந்த 34 படைவீரர்களை அவர் தேர்ந்தெடுத்தார்.

புலிகள் 'சயனைட்' உட்கொள்வதைத் தடுப்பதே அவரது நோக்கமாக இருந்தது. தேர்ந்தெடுத்த 34 படைவீரர்களுக்கும் கடுமையான உத்தரவுகளை வழங்கினார். இரண்டு இராணுவ வீரர்கள் ஒரு புலிப் போராளியைச் சமாளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்களை வகுத்தார்.

'சயனைட்' பற்றியும், அதனை எவ்வாறு புலிகள் உட்கொள்வார்கள் என்றும், அதனை எப்படித் தடுப்பது என்பது பற்றியும் விளக்கம் அளித்தார். புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையினுள், எந்த வாசல் வழியாக உள்நுழைவது, யார்யார் எவ்வாறு நடந்து கொள்வது, ஒவ்வொரு படைவீரரும் எந்தெந்த புலி உறுப்பினரைக் கைப்பற்றுவது என்றெல்லாம் திட்டம் தீட்டப்பட்டது. ஓரிரு முறை ஒத்திகையும் பார்க்கப்பட்டது.

புலிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு அருகே சகல வசதிகளுடனும் கூடிய மூன்று முதலுதவிக் கூடங்கள் அவசர அவசரமாக அமைக்கப்பட்டன. திறமையான வைத்திய நிபுணர்கள் அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டார்கள். அம்புலன்ஸ் வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. உட்கொண்ட நஞ்சை வயிற்றில் இருந்து வெளியேற்றத் தேவையான பம்புக்கள், உபகரணங்கள், மருந்துகள் சகலதும் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

கடைசியில் படையினர் நடவடிக்கையில் இறங்கினார்கள்.

## சோகமயமான ஆக்டோபர் 5:

திடீரென்று புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையினுள் பல முனைகளில் இருந்தும் பாய்ச்சல் நடத்தினார்கள். ஆனால் அதேவேளை புலி உறுப்பினர்கள் 17 பேரும் சயனைட்டை உட்கொண்டு விட்டிருந்தார்கள்.

புலேந்திரன், குமரப்பா உட்பட ஒன்பது போரளிகள் அந்த இடத்திலேயே மரணம் அடைந்திருந்தார்கள். நான்கு போராளிகள் வைத்திய முகாமில் மரணம் அடைந்தார்கள். மிகுந்த போராட்டத்தின் பின்னர் நால்வரை மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது.

விடுதலைப் புலிகளின் சரித்திரத்தில் மட்டுமல்ல, ஸ்ரீலங்காவின் சரித்திரத்திலும், ஏன் இந்தியாவின் சரித்திரத்திலும் கூட மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்திய ஒரு சம்பவமாக இந்தச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியா ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் என்பதில் தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இந்தச் சம்பவம் சிதறடித்தது.

எந்த ஒரு நிர்ப்பந்தங்களுக்கும் இனிப் பணிந்து பயனில்லை என்று, இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகளை எண்ண வைத்தது. தமிழ் மக்களுக்கு இப்படி ஒரு சோகத்தைத் தந்த ஸ்ரீலங்காவிற்கும், அதற்கு ஆசீர்வாதம் வழங்கியிருந்த இந்தியாவிற்கும் ஒரு பாடத்தைப் படிப்பிக்கவேண்டும் என்று புலிகளை நினைக்கவைத்தது.

ஸ்ரீலங்கையின் வரலாற்றிலும், இந்தியாவின் வரலாற்றிலும், தமிழ் மக்களின் வரலாற்றிலும் என்றுமே மறக்கமுடியாத நிகழ்வுகள் அடுத்த சில நாட்களில் இடம்பெற ஆரம்பித்தன.

துரோகம் தொடரும்



சயனைட் குப்பிகள்

# உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ்மக்களின் வாழ்விடங்களை யாழில் இராணுவம் அபகரித்துள்ளது

பயணத்தொடர் - 03

**தென்தமிழீழத்தில் இருந்து வட தமிழீழம் நோக்கிச் சென்ற ஊடகவியலாளர்களின் களப்பயணம்.**

அந்தப் பட்டாசுகளைக் கொழுத்தியது எம்மை வரவேற்பதற்காகவே என்றது பின்னர்தான் புரிந்தது.

வீரசிங்கம் மண்டபத்திற்கு முன் எம்மை வரவேற்பதற்காக கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தலைவர் இரா.துரைரெத்தினமும், உபதலைவர் இரா.உதயகுமாரும் காத்துநின்றனர்.

எம்முடன் வந்திருந்த கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீம் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயலாளர் சண்.தவராஜா இருவரும் வாகனத்தை விட்டு கீழே இறங்கியதும் இரா.துரைரெட்ணமும், இரா.உதயகுமாரும் கைலாகு கொடுத்து அவர்களை வரவேற்று எம்மை உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றனர். உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு அன்றிரவு 7.30 மணிக்கு சென்றடைத்தோம். உதயன் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் உள்ளவர்களும் ஏனையவர்களும் உளப் பூர்வமாக வரவேற்றனர்.

உதயன் பத்திரிகை நிறுவன சந்திப்பு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இக்கலந்துரையாடலின் போது உதயன் ஆசிரியர் கான.மயில்நாதன் உதயன் பத்திரிகையின் தோற்றம், வளர்ச்சி, செயற்பாடுகள் பற்றியும் 18 வருடங்களைக் கடந்து வாசகர்கள் மத்தியில் தனியிடம் பிடித்து யாழ்மண்ணில் உறுதியுடன் உழைக்கும் ஒரு பத்திரிகையாக உதயன் விளங்குவதாகக் குறிப்பிட்டகான மயில்நாதன் தற்போது யுத்தம் ஓய்ந்த இவ் வேளையில் யாழ்மண் வர்த்தக நிறுவனங்களின் மையமாக விளங்குவதைக்



காணக்கூடியதாக இருப்பதாகவும் மக்கள் மகிழ்சியுடன் வாழ்வதாகவும் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ்மண்ணிற்கு அடிக்கடி எதுவித தடைகளும் இன்றி சுதந்திரமாக வந்து போவதாகவும் குறிப்பிட்டார்.

கான.மயில்நாதன் உதயன்பத்திரிகையில் ஆசிரியராகக் கடமை புரிந்து இரண்டு வருடங்கள் புலம் பெயர்ந்து சர்வதேச நாடொன்றில் வாழ்ந்து விட்டு ஒரு வாரத்திற்கும் பின்தான் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து உதயன் பத்திரிகையில் இணைந்து கொண்டதாகவும் கூறினார். மொத்தத்தில் தற்போதைய நிலைமை தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென ஆதங்கத்தைத் தெரியப்படுத்தியதுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் ஊடகவியாலாளர்கள் தமது உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு வந்ததை வெகுவாகப் பாராட்டினார். கான.மயில்நாதனுடன் குகநாதன், குமாரதாசன் ஆகியோரும் கூட இருந்தனர்.



இக் கலந்துரையாடலின் போது தற் போதைய யாழ்ப்பாணம் பற்றி கருத்துக் கூறிய உதயன் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த குமாரதாசன் யாழ் குடாநாடு எங்கு பார்த்தாலும் மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டும் பல மின் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டும் ஏதோ ஒரு மாயை காணப்படுகின்றது. சிலர் கடந்த காலங்களை மறந்து இதுதான் சமாதா னம் என்ற நிலையிலும் வாழ்கின்றனர்.

உண்மையிலேயே யாழ்பாணத்தில் முப்பத்திஐயாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் முற்றுகையிட்டுள்ளனர். இங்கு மின்சாரம் மின்னியந்திரம் மூலமே வழங்கப்படுகின்றது. மின் இயந்திரத்திற்கான எரிபொருள் வராவிட்டால் யாழ்குடாநாடு இருட்டில் மூழ்கும் இதை பலர் உணர்வாதாகத் தெரியவில்லை.

சமாதானம் நிலைபெற வேண்டுமானால் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. கொழும்புடனும் ஏனைய இடங்களிலும் உள்ள பொருட்களைக் கொண்டு யாழ்பாணத்தை நிரப்புவதால் மட்டும் சமாதானம் ஏற்படாது. ஆக்கிரமிப்புக்கள் இல்லாத சமாதானம் இன்றும் ஏற்படவில்லை என்பதை அவரின் வார்த்தைகள் உணர்த்தின.

இந்தக்கலந்துரையாடலில் எம்முடன் வந்த ஊடகவியாளாளர்கள் பல கருத்துக்களை வெளியிட்டனர். உதயன் பத்திரிகை நிறுவனம் குட்டி ''லேக்கவுஸ்''நிறுவனம் போன்று காட்சியளிப்பதாகவும் வாய் விட்டுக் கூறினார்.

இந்தக் கலந்தரையாடல் முடிந்த பின் உதயன் நிறுவனத்தினரால் இராப் போசனம் வழங்கப்பட்டதுடன். அன்றிரவு உதயன் விடுதிகளில் மூன்று இடங்களில் நாம் அனைவரும் இராப் பொழுதைக் கழித்தோம்.

மறுநாள் டிசம்பர் 18ம் திகதி காலையில் யாழ் நல்லை ஆதினத்தை நோக்கி எமது பயணம் சென்றது. அங்கு நல்லூர் கந்தன் ஆலயத்தை எம்முடன் சென்ற சிலர் தரிசித்து வந்தனர்.

நல்லை ஆதீன மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பிரமச்சாரியார் சுவாமிகளும் நல்லை ஆதீனத்தை சேர்ந்த கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரும் எம்மை வரவேற்றனர். எமது பிரயாண நோக்கம் பற்றிய விடயங்களையும் அறிமுக உரையினையும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தலைவர் இரா.துரைரெத்தினம் கூறினார்.இதன் பின்னர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிஞானசம்பந்த பரமாச்சாரி சுவாமிகள் நல்லை ஆதீனம் தொடர்பாகவும் மதமாற்றம் சம்மந்தமாகவும் பல வியாக்கியானங்களை தந்தார். அவரின் உரையினைத் தொடர்ந்து கவிஞர் சோ.பத்மநாதன் கடந்த கால போராட்ட வாழ்க்கை தற்போதைய போராட்டமற்ற வாழ்கை என்பது பற்றி அவரின் தனிப்பட்ட கருத்து க்களை கூறினார்.

இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தொடர்பாக மன வேதனைகளைத் தொட்டுச்சென்ற சோ.பத்மநாதன் தற்போது முஸ்லிம் மக்கள் மீளக்குடியமருவதையிட்டும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் பிரதிபலிப்பையிட்டும் ஆழமான கருத்துக்களை தொட்டுச் சென்றார்.

எம்முடன் சென்ற ஊடகவிலாளர்கள் சமயம் சமுகம் சம்மந்தமான கேள்விகளைக் கேட்டனர். அதில் ஊடகவிலாளர் பாக்கியராசா இரண்டு பஞ்சாங்கங்கள் நடைமுறையில் இருப்பதால் இந்து மக்களுக்கு பல அசௌகரியங்கள் தோன்றுகின்றன. இதனை மாற்ற நல்லை ஆதீனம் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது. எனக் கேட்டபோது அந்த நல்லை ஆதீன சுவாமி அதுபற்றிய தெளிவை சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் எடுத்துக் கூறினார். இந்தக் கேள்வி இந்த இடத்தில் பொருத்தமானதா? என்று அங்குள்ள பல ஊடகவியலாளர்கள் புறுபுறுத்தது காதில் விழுந்தது. தமிழ் முஸ்லிம் மக்களின் புரிந்துணர்வு ஒற்றுமையை மேம்படுத்த சென்ற களப் பயணத்தில் பஞ்சாங்கம் எதற்கு என்று பலர் கதைத்ததிலும் தப்பில்லைத்தானே

பாக்கியராசாவின் வினாவை தொடர்ந்து பல முஸ்லிம் ஊடகவியலாளர்கள் 1990ம்ஆண்டு முஸ்லிம் மக்கள் யாழ் குடாநாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டமை தொடர்பான பழைய பல்லவிகள் கேட்டு தெரிந்து கொண்டனர். நல்லை ஆதீனத்தில் எமக்கு வழங்கப்பட்டகாலை தேனீர் விருந்துபசாரத்தை முடித்துக் கொண்டு யாழ் ஆயர் இல்லத்திற்கு விரைந்தோம்.

யாழ் ஆயர் இல்லத்தில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் அடிகளார் எம்மை வரவேற்றார். இங்கு இடம் பெற்ற கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாணத்தின் ஊடகவியலாளர்களை தாம் சந்திப்பதையிட்டு மிகவும் மனச்சந்தோஷம் அடைவதாக யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் குறிப்பிட்டதுடன் இன்றைய அரசியல் நிலைமை தொடர்பாகவும் மனம் விட்டுக்கூறினார்.

முழுமையான சமாதானம் ஏற்பட இன்றும் பல தூரம் போக வேண்டியுள்ளது. தற்போது யாழ்பாணம் ஒரு முற்றுகைக்குள் இருப்பதைப் போன்றுள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது எனவும் யாழ் ஆயர்கூறினார். யாழ்பாணத்தில் மத மாற்றம் இடம் பெறுவது சம்பந்தமாக முஸ்லிம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறிய யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் கத்தோலிக்க மதம் 500வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்த மதம் நாம் எவரையும் மதமாற்றம் செய்யும்படி நிர்ப்பந்திக்கவில்லை. ஆனால் இன்று பல கிறிஸ்தவ மதங்கள் வேறு வேறு பெயர்களில் இயங்குகின்றன. அவ்வாறான மதவாதிகள் தான் மத மாற்றத்தில் ஈடுபடுகின்றார்கள் எமது கத்தோலிக்க மதம் எப்போதும் மத மாற்றத்திற்கு எதிரானது என்ற உண்மைக்கருத்தையும் யாழ் ஆயர் எடுத்தியம்பினார்.

தொடரும்....

**- பாத்திரன் -**

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## பேரினவாதக் கூத்துக்கு தாளம் போட வேண்டாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு

அம்மணிக்கும் உங்களுக்கும் நடந்த அதிகாரப் போட்டி இழுபறிப்பட்டு இப்போது உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

அம்மணி மீது நீங்களும் உங்கள் மீது அம்மணியும் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் இன்னும் தீராத பகமை உணர்வு கொழுந்து விட்டெரியும் நிலையில் திடீரென புயல் அடித்தமாதிரி ஒரு போடு.

ஐயா புரிந்துணர்வுடன்படிக்கையை விட்டு விலகிவிட்டதாக சர்வதேசத்திற்கு ஒரு அறிவிப்பு. கைப்பிடித்து தாலி கட்டிய மனைவியை உதறி எறிவது போன்று புரிந்துணர்வுடன்படிக்கையில் கையொப்பமிட்ட நீங்கள் அதைத் தூக்கி எறிகிறீர்கள் என்றால் நாங்கள் சும்மா பார்த்துக் கொண்டு குருடர்கள் போல் இருந்து விடுவதா?

நீங்கள் அம்மணியுடன் தகராறு. எல்லாப் பழியையும் அந்தப் பெண் மணி மீது சுமத்திவிட்டு சும்மா இருந்து விட முடியாது. போர்நிறுத்தம் செய்வேன், புலிகளுடன் பேசுவேன், சமாதானப் பேச்சை ஆரம்பிப்பேன், சிங்கள மக்களிடம் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகக் கொடுத்த வாக்குறுதிகள் இவை. இப்போது அதில் இருந்து விலகி எல்லாம் அம்மா பொறுப்புத்தான் என்று கூறினால் ஏற்கக்கூடிய பேச்சா இது..

நீங்கள் புரிந்துணர்வுடன் படிக்கையிலிருந்து விலகிய மாதிரி எங்கள் தரப்பில் எங்கள் தமிழினத்தின் தேசியத் தலைவர் விலகியிருந்தால் நீங்கள் சும்மாயிருந்திருப்பீர்களா? உலக நாடுகள் விமர்சனம் செய்யாது மௌனம் சாதித்திருக்குமா?

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை மீறி விட்டார்கள். போருக்கு தயாராகிவிட்டார்கள் என்ற பிரசாரப் பீரங்கியை முழு அளவில் பயன்படுத்தியிருப்பீர்கள்.

அந்தளவிற்கு எங்கள் தரப்பு போரை விரும்பவில்லை. புரிந்துணர்வுடன்படிக்கைக்கு முரணாக பல தடவைகளில் படைத்தரப்பு மோசமான முறையில் ஆத்திரமூட்டக்கூடிய வகையில் செயற்பட்ட போதெல்லாம் விடுதலைப்புலிகள் பொறுமை காத்தார்கள். இப்போது பொறுமைகாக்கிறார்கள்.

ஆனால் சிங்கள தேசத்து படைகளைப் பலப்படுத்துவதிலும், அதிகாரத்தையும், ஆசனத்தையும் திடப்படுத்துவதிலும் தான் சிங்களத் தலைமைகள் குறியாய் இருக்கின்றன என்பதைத் தமிழ்மக்கள் நன்குணந்து விட்டனர். இன்னுமின்னும் சப்பித் துப்பும் கரும்புச் சக்கையில் மொய்க்கும் எறும்புக் கூட்டங்களாக எங்கள் இனத்தை எண்ணிவிட வேண்டாம். அது எப்பவோ முடிந்த காரியம், சித்தமிருந்தால், திடமிருந்தால் எம்மினத்தின் உரிமைகளை வழங்குவதில் நீங்களும் உறுதியாய் முடிவு எடுங்கள்.

பேரினவாத எதிர்க் கட்சிகள் போடும் பேரினவாதக் கூத்துக்குத் தாளம் போடாமல் தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நற்காரியங்களில் ஈடுபடுங்கள். அல்லாது விட்டால் உங்கள் இனம் தான் வடு சுமக்கும்.

*இங்ஙனம், அலைமகன்*


# அன்பு



பெண்ணே!
கோபம் பொறுமையை,
அழித்துவிடும்.
சந்தேகம் நட்பினை,
அழித்துவிடும்.
பேராசையோ
இருப்பதையும்
இழக்கச் செய்திடும்.
பொறாமை உறவுகளை
பாதித்து விடும்.
அன்போ அனைத்தையும்
வென்றிடும்.

எஸ். மேரிகிறிஸ்ரி
கல்லடி.

# அநீதி



வாழ்க்கைத் துணையான
வஞ்சியிடம் வரதட்சனை
வாங்குவது வெட்கக்கேடு!
சூடான் நாட்டினில்
ஆடைகள் அணியாத
நூபர்இன காட்டுவாசி- அவன்
பெண் கொள்ள, பெண்ணுக்குப்
பொருள்கள் கொடுப்பதை
ஆடை அணியும் நீ, யோசி!
ஆணின்றிப் பெண்ணில்லை?
பெண்ணின்றி ஆணில்லை!
இருவருமே பாதி பாதி- இதில்
பாதியை மறுபாதி
வாழ்க்கைக்கு அழைத்திட
பொன் - பொருள் கேட்பது அநீதி!

சு.விஜயலக்சுமி
விஷ்ணு ஆலயவீதி
கிரான்.

# அரிவையர்அலை

## நெய்த்தோசை

### தேவையான பொருட்கள்:~



| | |
|---|---|
| உழுத்தம் பருப்பு~ | 1சுண்டு |
| அரிசி (பச்சை அரிசி/ சம்பா)~ | 1/2சுண்டு |
| வெந்தயம்~ | 1தேக்கரண்டி |
| கோதுமைமா~ | 2சுண்டு |
| வெங்காயம்~ | 5 |
| செத்தல் மிளகாய்~ | 3 |
| கறிவேப்பிலை~ | சிறிதளவு |
| கடுகு~ | 1தே.கரண்டி |
| பெருஞ்சீரகம்~ | 1/2தே.கரண்டி |
| மஞ்சள்தூள்~ | அளவாக |
| நெய் அல்லது பட்டர்~ | 3மே. கரண்டி |
| உப்பு~ | அளவாக |
| பொரிக்கும் எண்ணெய்~ | 1மே.கரண்டி |

### செய்முறை:~

❖.உழுத்தம் பருப்பு, அரிசி, வெந்தயம் என்பவற்றை 5அல்லது 6மணி நேரம் ஊறவைத்து மிருதுவாக அரைத்துக் கொள்ளவும்.

❖.கோதுமைமாவை நன்றாக அவித்து அரித்து ஆறவிடவும்.

❖.அரைத்த உழுத்தம் பருப்புக் கலவையுடன் கோதுமை மாவைக் கலந்து பிசைந்து பத்துமணி நேரம் வரை புளிக்க வைக்கவும்.


❖.குறிப்பிட்ட நேரம் புளித்த தோசை மாவுடன் மஞ்சள்தூள், உப்பைச் சேர்த்து அளவாக நீர்சேர்த்து ஓரளவு இறுக்கமாகக் கரைத்துக் கொள்ளவும்.

❖.எண்ணெயைக் கொதிக்க வைத்து குறுணலாக வெட்டிய வெங்காயம், மிளகாயைச் சேர்த்துத் தாளித்து பின்பு கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலையைச் சேர்த்துத் தாளித்துத் தோசை மாவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

❖.சூடேறிய தோசைக் கல்லில் எண்ணெயைப் பூசி அளவாக அழுத்தமாக்கி வேக விடலாம்.

❖.மேற்பகுதி வெந்ததும் ஒரு தேக்கரண்டி அளவு நெய்யை விட்டு சிறிது நேரத்தின் பின் தோசையைச் சரிபாதியாக மடித்து இருபக்கமும் பொன்நிறமாகும் வரை விட்டுச் சுட்டெடுக்கலாம்.

## பெண்களின் இலட்சணங்களைக் கொண்டு அவர்களின் குணத்தை அறியலாம்.



01. கூந்தல்:- பெண்களுக்கு கூந்தல் அளவுக்கு அதிகமாக நீண்டு முழங்காலுக்குக் கீழ்வரை இருந்தால் அந்தப் பெண் அற்ப ஆயுளும் அதிக ஆசையும் கொடூர குணமும் கொண்டவளாக இருப்பாள்.

02. புருவம்:- ஒரு பெண் அடிக்கடி புருவத்தை நெழித்துக் கொண்டும் சுழித்துக் கொண்டும் இருந்தால் அப் பெண் வறுமையிலும் வாட நேரிடும்.

03. பற்கள்:- பற்களில் அதிக இடைவெளி இருந்தால் அப்பெண்ணுக்கு நல்ல குணம் அமையாது.

04. வயிறு:- பெண்ணிற்கு வயிற்றில் இரண்டு மூன்று மடிப்புகள் இருந்தால் புதையலோ அல்லது வேறு ஏதாவது நிதியோ கிடைக்கும்.

05. கண்:- பெண்ணின் கடைக்கண் எந்நேரமும் சிவந்திருந்தால் அந்தப் பெண், பெரும் பணக்காரியாக வாழ்வாள்.

ஏ.கீதா



## இழந்த சிவப்பு நிறத்தை திரும்பப் பெற..!



"சிறுவயதில் நல்ல நிறம் உள்ளவர்கள் போகப் போகக் கறுப்பாக மாறக் காரணம் வெயில். வெயிலில் போகாது காரில் போகிறவர்கள் கூட காரின் மேல்ப்பாகம் சூடாவதால் அந்த வெப்பத்தால் பாதிக்கப்பட்டு நிறமாற்றம் அடைகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் தினசரி எலுமிச்சம்பழச்சாறு, வெள்ளரிக்காய்ச் சாறு ஆகியவற்றைக் கலந்து, முகத்தில் தேய்த்து, 20நிமிடம் ஊறவைத்து, முகம் கழுவ வேண்டும். மாதம் ஒரு முறை முகத்தை அழகு நிலையங்களில் பிளீச்சிங் செய்து கொள்வதன் மூலம் நிறத்தைத் திரும்பப் பெறலாம்.

சிவப்பாக ஆகவேண்டுமா?

25வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால், முட்டையின் மஞ்சள் கருவில் சற்றுத் தேன் கலந்து, முகத்தில் தடவி, 20நிமிட நேரம் ஊற வைத்து, முகத்தைக் கழுவ வேண்டும்.

பெண்கள், காலை வேளையில், சிறிது பாலோடு, கடலை மாவு, சிறிது கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைக் கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்தபின் தேய்த்துக் கழுவி வந்தால், சிறிது சிறிதாக இழந்த சிவப்பு நிறத்தை மீண்டும் பெறலாம்.

கூடியவரை வெயிலில் போகக் கூடாது. போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் குடையை எடுத்துக் கொண்டு போக வேண்டும். கண்களுக்குக் கூலிங் கிளாஸ்களைப் போட்டுக் கொண்டு போவது நல்லது.

## மருத்துவக் குறிப்பு

### தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கு...

பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் தங்கள் தலைமுடியைக் காப்பாற்றிக் கொள்வதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

அங்கு வெளியாகும் பல்வேறு இரசாயனப் புகைகள் தலைமுடிக்குத் தீங்கு செய்ய வல்லவை. அதனால் தலையை அங்கு பணிபுரியும் பொழுது மூடி வைத்துக் கொள்வது நல்லது.

சில சமயங்களில் அப்படி மூடி வைத்துக் கொள்வதே தீங்காக முடிவதும் உண்டு. தலையில் ஏற்படும் வியர்வை உலர்ந்து போகாமல் ஆகிவிடுகிறதே! அதனாலும் தலைமுடிக்குத் தீங்கு ஏற்படுவதுண்டு. அதனால் தலைக்கு நன்கு காற்று புகுந்து செல்லும்படியான தொப்பியை அணிந்து கொள்ள வேண்டும்.

தொழிற்சாலையில் பணிபுரிவோருக்கு தலையில் அதிகமாக அழுக்கு சேர்ந்துவிட வாய்ப்புண்டு. அதனால் அவர்கள் நாள்தோறும் தலைக்குத் தண்ணீர் விட்டு சுத்தஞ் செய்து கொள்ள வேண்டியது தான்!

தலைக்குச் சீயாக்காய்த் தூளை உபயோகிப்பதற்கு முன், அதை நீர் விட்டுக் கரைத்து அடுப்பிலேற்றி, சூடு காட்டி, தலைக்குத் தேய்த்துக் கொள்வது நல்லது. தீயில் வெந்து போன சீயாக்காய்ப் பொடி தலைமுடியை நன்கு போஷிக்கின்றது.

## பெண்களே நீங்கள் சிந்தியுங்கள் இளவயது திருமணத்தின் பாதிப்பு

இளவயதில் திருமணம் செய்வதால் அவர்களுடைய கல்வி கலாசாரம் எல்லாம் பாதிப்படைகிறது. 25 வயதில் திருமணம் செய்கின்ற பெண்ணை 15 வயதில் திருமணம் செய்து கொடுப்பதால் கல்வி அறிவு அவர்களுக்குக் கிடையாமல் போகிறது. இதன் காரணத்தால் போதிய அறிவின்மையால் அவள் குறுகிய வாழ்க்கை வசதியைத்தான் அனுபவிக்க வேண்டியுள்ளது.

அத்தோடு சிறுவயதில் திருமணம் செய்வதால் அதிக குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகி விடுகின்றாள். இதனால் அவளது வாழ்க்கையில் கஸ்ரத்தை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

போதிய வருமானம் இன்மையால் அவள் தவறான வழிக்குச் செல்வதற்கும் ஆளாகி விடுகிறாள்.



இதனால் சமுதாயத்தில் கெட்டவள் என்ற பெயரோடு தனது வாழ்க்கைக்கு முகம் கொடுக்க இயலாத சூழ்நிலைக்கும் ஆளாகி விடுகிறாள்.

அது மட்டுமன்றி போர்ச் சூழலினாலும் பிற காரணங்களினாலும் எத்தனையோ இளம் பெண்கள் ''விதவை'' என்ற பெயரோடு சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ வேண்டியுள்ளது. எந்த ஒரு நல்ல காரியத்திலும் ஈடுபட முடியாமல் அவள் தவிக்கிறாள்.

இதைத் தவிர்த்து அவளுடைய பிள்ளைகளை வளர்ப்பதற்கு தொழில் இன்மையால் துவண்டு போகின்றாள். இதனால் தான் இன்னொரு துணையை நாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையிலேயே வெளிநாடுகளுக்குச் சென்று தங்களுடைய குழந்தைகளை வளர்க்க வேண்டும் எனும் நோக்கத்தில் தங்களை அர்ப்பணித்தும் தங்களுடைய வாழ்வில் ஒரு அவப் பெயரைக் கேட்பதற்கு இளவயதுத் திருமணமே வழிவகுத்து விடுகிறது.

பெண்களே! நீங்கள் அயல் நாடுகளுக்குச் செல்வதால் உங்களுக்கு எந்தவிதத் தாக்கமும் இல்லை. உங்கள் குழந்தைகளுக்குத் தான் பாரிய தாக்கத்தினை விளைவிக்கின்றீர்கள். நீங்கள் அயல் நாடுகளுக்குச் செல்வதால் பிள்ளைகள் தந்தையுமின்றி தாயுமின்றி தெருக்களில் திரிகின்றார்கள்.

நீங்கள் வீட்டிலிருந்து கைத்தொழிலைச் செய்து கொண்டு பிள்ளைகளைப் பார்ப்பீர்களானால் கல்வியையும் ஒழுங்காகக் கற்றுக் கொள்வார்கள். பிள்ளைகளின் மனம் பாதிப்படையா வண்ணம் எல்லாவற்றிலும் திறமையாகச் செயற்படுவார்கள்.

கல்வி அறிவால் வளர்ந்து வரும் எமது நாடு இளவயது திருமணத்தினால் நல்லதொரு இளம் சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியாமல் சீர் குலைந்து போய் கொண்டிருக்கின்றது.

எனவே, பெற்றோர்களே நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு வயதுக்கேற்ப திருமணம் செய்து கொடுங்கள். பிள்ளைகள் தான் தீய வழியில் செல்கின்றார்கள் என்றால், அவர்களுக்குப் புத்தி புகட்டுங்கள். இது உங்களுடைய கடமையும் கூட. ''நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பில் தான் உள்ளது''. இதற்கு உறுதுணையாக தந்தையும் இருந்து கொண்டால் பிள்ளைகள் நல்ல மனிதனாவது திண்ணம்.

கு.காந்தினி

# தமிழ் திரைப்படங்கள் மீதான அரசியல் தலையீடு: சில குறிப்புகள்

## திரை பிம்பங்கள்

அரசியல் அதிகாரத்துக்கும் தமிழ் சினிமாவிற்கும் இருக்கும் நேரடியான உறவு வெளிப்படையானது. தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க. நடிகர்கள் உண்டு.



காங்கிரஸ் தொடர்ந்து முயன்றாலும் கூட அப்படியான நடிகர் கூட்டம் அதற்கு இல்லை. கம்யூனிஸ்ட்டுகளைப் பொறுத்து அப்படியானதொரு நடிகர், நடிகையர் கூட்டத்தை விடவும், சமூகத்தில் தாம் விரும்புகிறவரான அடிப்படைக் கட்டமைப்பில் மாற்றத்தை வேண்டும் படைப்புகளையே எதிர் நோக்குவர். நிகழ்வில் இருக்கும் தமிழ் சினிமா என்பது நான்கு விதமான அழுத்தமான அரசியல் அழகியல் பண்புகளைக் கொண்டது.

முதலாவதாக விளிம்பு நிலை கலக எதிர்ப்பும் (Antimarginal) தேசிய அரசியலும் தொழில் நுட்ப ஊடகத் தேர்ச்சியும் கொண்ட மணிரத்தினம் அடியொற்றி படங்கள். இரண்டாவதாக திராவிட பாரம்பரியத்தினின்



நிலப்பிரபுத்துவ மாண்புகள் கொண்ட பெண் எதிர்ப்பு கொண்ட (Anti-Women) திரைப்படங்கள்

மூன்றாவதாக சங்கரை அடியொற்றிய அரசியலையும் பாலுறவையும் அமெரிக்க ஹாலிவுட் (Hollywood inspired) பாணியில் தொழில் நுட்ப சாதுரியத்துடன் பிரதி செய்யும் இளைய தலை முறை இயக்குனர்களின் படங்கள்.

நான்காவதாக நிகழும் சினிமா விற்குஉள்ளிருந்த படியே மாற்றம் வேண்டி முயற்சி செய்யும் (Changes with in) கமல்ஹாஸன், தங்கர் பச்சான், சேரன், பாலா போன்ற இயக்குனர்களின் படங்கள்... தமிழ் அரசியல் பாரம்பரியத்தில் எதிர்கலாசாரக் கூறுகளை முன் வைத்ததாகச் சொல்லப்படும் கலைஞர் கருணா நிதியிடமோ அல்லது திரை சிந்தனையமைப்பில் அவரை அடியொற்றிய ஜெயலலிதா, வைகோ போன்றவர்க ளிடமோ நிகழும் தமிழ் சினிமா சார்ந்து எந்தவிதமான எதிர்மறை விமர்சன அபிப்பிராயங்களும் இல்லை. அரசியல் அறம் சார்ந்த மதிப்பீடுகள் அரசியலில் இல்லாதது போலவே சினிமாவிலும் இல்லை. கட்சி மாறுகிற சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்தது போலவே இவர்களது நடிகர் நடிகையர் குறித்த பார்வைகளும் படமாதிரிகள்? (Film genres) குறித்த பார்வைகளும் அமைகின்றன.

தி.மு.க, காங்கிரஸ் போன்ற கட்சிகளோடு ஒப்பிட பா.ஜ.க வின் இஸ்லாமிய எதிர்ப்பு இந்துத்துவ தேசியத்தைப் பிரதிபலிப்பவர்களாக விஜயகாந்த், அர்ஜீன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். தேங்கியதொரு கலைச் சூழலில்தான் பா.கிருஸ்ணசாமி, தொல்.திருமாவளவன், டாக்டர் ராமதாஸ் போன்றவர்களின் தமிழ் சினிமாவின் பாலான அரசியல் தலையீடு, முக்கியமான அரசியல் கலாசாரப் பண்புகள் கொண்ட கலகக் குரல்களாக அமைகின்றன. தமிழ் சினிமாவில் மலிந்துள்ள சாதிய வன்முறைக்கும் பாலியல் வன்முறைக்கும், எதிரான குரல் பா.கிருஸ்ணசாமியினுடைய குரல், தொல்.திருமாளவன் தமிழ்ப்படங்களின் மொழியுணர்வு, பண்பாட்டுச் சீரழிவு மற்றும் மொழித்தூய்மை குறித்துப் பேசுகிறார். டாக்டர் ராமதாஸ் தமிழ்ப் படங்களில் ஆபாசம், புகைபிடித்தல் போன்றவற்றை நீக்குவதற்காக நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் உள்ளார்ந்து நேரடியாக (Internally and directly) ஆதிக்கம் கொண்டிருக்கும் கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் கருத்தியல்கள் நிச்சயமாக தலித் மக்களுக்கும், விளிம்பு நிலை மக்களுக்கும் சிறுபான்மை இனங்களுக்கும் பெண்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் எதிரான கருத்தியல்களாகும். தயாரிப்பாளர்கள் முதலீட்டாளர்கள் விநியோகஸ்தர்கள் நடிகர்நடிகையர் இயக்குனர் போன்ற அனைவருமே பெரும் பாலும் இந்த உணர்வு நிலவுகளைப் பிரதி பலிப்பவர்கள் அன்றி வேறில்லை. நிலவும் தமிழ் சினிமா அமைப்பில் உள்ளிருந்து மாற்றத்தைக் கொணரும் சக்திகள் கணிசமாக இல்லை என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும். இது தொடர்பான ஒரு தந்திரோபாயம் நிச்சயமாகவே இடது சாரிகளுக்கு இருக்க வேண்டும். சினிமாவில் இடையீடு செய்யக்கூடிய மக்கள் சக்தி சார்ந்த சமூக அடிப்படையை அல்லது அரசியல் அடிப்படையை அவர்கள் திரட்டிக் கொள்ளாதது அதற்கான பலவீனமாக இருக்கலாம். சினிமா எனும் கெட்டி தட்டிய ஆதிக்க அமைப்பை (Structure dominated) உருவாக்கியிருக்கும் அரசியலமைப்பை அவர்கள் சவாலுக்கு உரியதாகப் பார்க்கவில்லை.

அவ்வகையிலே நிச்சயமாகவே பா. கிருஷ்ணசாமி, தொல். திருமாவளவன் போன்றவர்களின் இடையீடு ஆக்கப் பண்புகள் கொண்டவையே. டாக்டர் ராமதாஸின் கோசங்கள் தெளிவானவை அல்ல. பண்பாடு



ஆபாசம் போன்றவற்றுக்கு அவரது வரையறைகள் என்ன என்பதைப் பொறுத்தே அவரது கருத்துக்கள் உரசிப்பார்க்கப்பட வேண்டும். மேலும் அவருடைய பா.ஜ.க. சார்பும் அவரது பண்பாட்டுக் கோசங்களின் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்புகின்றன. பா. கிருஷ்ணசாமியும் சாதிய வன்முறை, பாலியல் வன்முறை போன்றவற்றை முன்னிலைப்படுத்த, தொல். திருமாவளவன் தமிழ் தேசிய உணர்வையும் தலித் உணர்வையும் ஒன்றிணைக்க முயல்கிறார்.

இவர்களது போராட்டு முறைகள் நேரடியாகக் கதாசிரியர்கள், இயக்குனர்கள், நடிகர் நடிகையர்கள், பாடலாசிரியர்கள் போன்றவர்களை நோக்கியதாக அமைகின்றது. நம்காலத்தின் மொழியியல் சார்ந்த அடிப்படையில் சொல்வதானால், திரைப்படம் எனும் கட்டமைப்பின் மொழி



அடிப்படையையும் (Text based) பிம்ப அடிப்படையையும் (Image based) நோக்கி தமது எதிர்ப்பை அவர்கள் மையப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்சினிமாவின் கருத்துருவ ஆதிக்க அடிப்படைகளின் மீதான இவர்களது தாக்குதல் உடனடியாகவே எதிர் வினைகளை உருவாக்கியிருக்கிறது. ஏற்கனவே தணிக்கையமைப்புகள் இருக்க இவர்கள் ஏன் எங்களைக் கேள்வி கேட்கிறார்கள் எனச் சினம் கொள்கிறார் இயக்குனரான பாலச்சந்தர். இவர்களுக்கு எதிராக நாங்களும் தணிக்கை அமைப்புகள் அமைப்போம்? என்கிறார் சரத்குமார். தனது ரசிகர் பலத்தை அரசியல் பலமாக முன்வைக்கிறார் கமல்ஹாஸன். உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிற இந்த விவாதத்தில், சினிமா எனும் அமைப்பில் உள்ளார்ந்து இயங்குகின்ற ஆதிக்க நலன்கள் கொண்ட அனைவரும் இதுகுறித்து மௌனம் காக்கிறார்கள். இது மட்டுமல்ல, இயக்குனர் 'சங்கர் பாய்ஸ்'பட விசயத்தில் தமிழகத் தணிக்கையமைப்பை மோசடி செய்த பாய்ஸ் சம்பவம் குறித்து, தமிழ் சினிமா சார்ந்த எவரும் இந்த நிமிடம் வரையிலும் குறைந்த பட்ச ஆட்சேபத்தைக் கூட எழுப்பவில்லை. இருக்கிற தமிழ் சினிமாவை இப்படியே காத்துக் கொள்வதில் இவர்களுக்குள் உள்ள ஒற்றுமை எவருக்கும் வியப்பளிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் சமூகத்தின் மாறி வரும் சக்திகளுக்கு எதிரான ஒரு சுயாதீன அமைப்பாகத் தமிழ் சினிமா, தன்னை உருக்குப் போல நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. இவர்களது இந் நிலைப்பாட்டுக்கு தி.மு.க, அ.தி.மு.க., ம.தி.மு.க போன்ற திராவிடக்கட்சிகளும் ஆதரவளிக்கும் என்பதனையும் இவர்கள் அறிந்தேயிருக்கிறார்கள்.

---

என்றும் தமிழ் மக்களின்
தனித்துவக் குரலாய் ஒலிக்கும்
என் அபிமான தமிழ் அலை
என்றும் புகழுடனும்
தமிழர்களின் கைகளில் தடம்
புரள வேண்டும் என்று
பிரார்த்திக்கின்றேன்.

கே.ஜெயகாந்தன்
கல்லடி.

என்றும் என் தாயினும்
இனிய தமிழன்
தன்மானம் காக்கும் தமிழ்
அலையே, உன் பெயரும்
புகழும் இவ் உலகம்
பூராக பரவி
தமிழர்களுக்கு என்றும்
அரனாய் இருக்க என்
இனிய வாழ்த்துக்கள்.

பி.வாணி
மண்டூர்.



## வாசகர் இதயம்

### தியாகம்

அலையே! அலையே!
தமிழ் அலையே
தமிழர் மனதில் இடம் பிடித்த
தமிழ் அலையே

ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
மண்ணின் காவியமான
காவியத் தலைவர்களின்
நினைவலைகள் கூறும்
தமிழ் அலையே

இரத்தம் சிந்தி, கண்ணீர்
வடித்து
தாயக மண்ணுக்காகப்
போராடும் போராளிகளின்
தியாகங்கள் கூறும்
தமிழ் அலையே

எத்தனை பேர் பார்க்கின்றனர்
எத்தனைபேர் ரசிக்கின்றனர்
எங்கும் நீ உலாவி வருகின்றாய்
உன் சேவையே பெரும் சேவை
கடல் அலைகள் ஓயாது
இத் தமிழ் அலை இதழ்களும்
ஓயாது, ஓயாது, ஓயாது.

சரிதா
ஆர்.டீ.எஸ்.வீதி
கறுவன்கேணி- 01

### தமிழ் அலையை பாராட்டுகிறேன்.

தமிழ் அலை வார வெளியீடான 21.12.3003 அன்றைய பத்திரிகை மிகவும் நன்றாக, கவர்ச்சியான முகப்பு தோற்றத்துடன் தெளிவான தலையங்க விளக்கங்களுடன் வெளியாகி இருந்தது. மிகவும் வரவேற்கத்தக்கது. மிக்க மகிழ்ச்சி; பாராட்டுக்கள் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இருந்து இப்படியொரு பத்திரிகை வெளிவருகின்றதென்றால் மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது. நான் மட்டுமல்ல என்போல் அனேகம் தமிழ் அபிமான நெஞ்சங்கள் நெஞ்சார, உளமாக, உண்மையாக பாராட்டு தெரிவிக்கும், பெருமைப்படும் விடயமாகும். தலைமை ஆசிரியரின் மற்றும் நிர்வாக அமைப்பினரின் அபார திறமையைப் பெரிதும் மதிக்கிறேன். இதே உறுதியும் திறமையும் மேலும் மேலும் தொடரவேண்டும். இன்னும் புதுமைகள் நீங்கள் செய்ய வேண்டும் என்பது என் பணிவான விருப்பம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் திறமையின் மூலம் அழகு தமிழ் தாயைக் கௌரவிக்கிறீர்கள், அந்த அன்னையின் ஆசியைப் பெறுகிறீர்கள். அது கண்டு மகிழும் நான் உங்களுக்குப் பணிவான நன்றியறிதலை வெளிப்படுத்துகிறேன். நன்றி பாராட்டுக்கள்!

அத்திரி மஹாரிஷி
சித்தாண்டி.




# தீனக்கு வந்தால் தெரியும்

ஒரு நாள் அரசரும், தெனாலிராமனும் உலாவச் சென்றனர். இருவரும் பேசிக்கொண்டே போய்க்கொண்டிருந்ததால் தெருவின் ஓரத்தில் இருந்த அசுத்தத்தை தெனாலிராமன் மிதித்துவிட்டான்.

உடனே ஓடிப்போய் அருகில் இருந்த வாய்க்காலில் கால் கட்டை விரலை தேய்த்துக் கழுவிக் கொண்டு திரும்பினான்.

" நீ எவ்வளவுதான் கழுவினாலும் உன் காலிலுள்ள அசுத்தம் முழுவதும் போகாது. அந்த அசுத்தம் நீங்குவதற்கு ஒரே வழி அந்தக் கட்டை விரலை நீக்கி விட வேண்டியதுதான்" என்றார் அரசர்.

" நான் மண்ணில் தேய்த்து தண்ணீரில் சுத்தமாகக் கழுவி விட்டேன், பிறகு என்ன?" என்றான் தெனாலிராமன்.

" எப்படிக் கழுவிய போதிலும் துளி அளவாயினும் அசுத்தம் உள்ளே சென்றிருக்கும். அந்த அசுத்தமான விரலுடன் உயர்ந்த கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும் என் சொந்த அறைக்குள் நீ வரவே கூடாது " என்று கூறி முகத்தைச் சுழித்தார் அரசர்.

நம் உடலில் இருக்கும் அசுத்தத்தை முற்றிலும் அகற்ற முடியவில்லையே? அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்றான் தெனாலிராமன்.

" அது அவரவர் உடலோடு ஒட்டிய அசுத்தம். பிறருடைய அசுத்தத்தைப் பற்றி அல்லவா நான் சொல்கிறேன் "என்றார் அரசர்.

"அரசரே! உங்கள் கருத்து தவறானது என்பதை நீங்களே உணரக்கூடிய சந்தர்ப்பம் வரக்கூடும். அதுவரை காத்திருப்போம். "என்றான் தெனாலிராமன்.



சில மாதங்கள் கடந்தன. எனினும் அந்த நிகழ்ச்சியையும், உரையாடலையும் மறக்கவில்லை. ஆனால் அரசரோ அதை மறந்து விட்டார்.

அழகான ரோஜா மலர் கொண்ட சில செடிகளைக் கொண்டு வந்து அசுத்தம் நிறைந்த குழியில் வைத்து அதைச் சுற்றிலும் பசும் புல்லோடு கூடிய மண்ணைப் பரப்பி மேல் பகுதியை மூடி வைத்தான் தெனாலிராமன்.

ஒரு நாள் அரசரிடம் சென்று "ஒரு இடத்தில் அழகான ரோஜாச் செடிகளைக் கண்டேன். ரோஜா மலர்களோ கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. உங்களுக்கு ரோஜா மலர்களின் மீது பிரியமாயிற்றே வந்து பாருங்கள்" என்று அழைத்தான் தெனாலிராமன்.

அரசரும் தயங்காமல் உடனே அவனுடன் சென்றார்.

ரோஜா மலர்களைக் கண்டு அற்புதமான மலர்கள் என்று கூறி மகிழ்ந்தார். மலர்களைப் பறிக்க அருகில் சென்றார். அப்படியே அந்தக் குழியில் விழுந்து விட்டார். இடுப்பு அளவு குழி அரசரால் எழுந்திருக்க முடியவில்லை.

"இராமா! என்னை வெளியே தூக்கி விடு" என்றார் அரசர்.

" அரச பிரானே! சற்றுப் பொறுங்கள். கத்தி எடுத்து வருகிறேன"என்றான் தெனாலிராமன்.

"எதற்காக? " என்று கேட்டார் அரசர்.

"அசுத்தமாகி விட்ட பகுதிகளை வெட்டி விடுகிறேன். முன்பு நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, நினைவு இருக்கிறதா? " என்று கேட்டான்.

"இராமா! இப்பொழுதான் எனக்கு நினைவு ஏற்படுகிறது. தவறான என் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறேன். அசுத்தமான பகுதியைத் தேய்த்துக் கழுவி விட்டால் போதும். அதை வெட்ட வேண்டியது இல்லை. மற்றவர்கள் பார்ப்பதற்கு முன் என்னைத் தூக்கி விடு " என்று கேட்டுக் கொண்டார் அரசர்.

தெனாலிராமன் உடனே அரசரைத் தூக்கி விட்டான்.

அருகில் இருந்த தெனாலிராமனின் வீட்டிற்குச் சென்று அரசர் குளித்து உடை மாற்றிக் கொண்டிருந்தார். அதற்குள் அரண்மனையிலிருந்து ராஜ உடைகள் வந்து சேர்ந்தன. அவற்றை அணிந்து கொண்டு அரசர் புறப்பட்டுச் சென்றார்.

# விஞ்ஞான விளக்கம்.

1) யானை தனது காதை அடிக்கடி அசைத்துக் கொண்டிருக்கும். இதற்கான காரணம்.
யானையின் தோல் தடிப்பானது. தடித்த தோலினூடாக வெப்பம் இழக்கப்படுவதில்லை. யானையின் உடலிலிருந்து வெப்பம் இழுக்கப்படுவது மென்மையான தோலைக் கொண்ட காதினூடாகவே ஆகும். காதினூடாக வெப்ப இழப்பு ஏற்படும் போது வெப்பநிலை அதிகரிக்கும் இதனால் யானை காதை அசைந்து வெப்பத்தை இழுக்கிறது.

2) மண்ணெண்ணெய்ச் சுவாலை சிவப்பு நிறமாகவும் தேங்காய் எண்ணெய்ச் சுவாலை மஞ்சளாகவும் எரிதல்.
மண்ணெண்ணெயில் அதிகளவு காபன் காணப்படுகின்றது. தேங்காய் எண்ணெயில் இதனைவிடக் குறைந்தளவு காபன் எண்ணிக்கை காணப்படுகின்றது. எரியும் போது மண்ணெண்ணெய் கூடிய காபனுடன் எரிவதால் சிவப்பு நிறமும், தேங்காய் எண்ணெய் குறைந்தளவு காபனுடன் எரிவதால் மஞ்சள் நிறமும் தோன்றுகின்றது.

3) மண் குடத்தில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருத்தல்.
ஆவியாதலைப் பொறுத்தே நீரின் குளிர்ச்சி அமைகிறது. மண் குடத்திலுள்ள நுண் துளைகளினூடாக வெளியாகும் நீரை ஆவியாக்குவதற்கு நீரில் உள்ள வெப்பம் பயன்படுத்தப்படுவதால் மண் குடத்திலுள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கிறது.

தே.மதன்ராஜ், தரம் – 10
மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி.
மட்டக்களப்பு.

## தெரிந்து கொள்ளுங்கள்

*.உலகிலே மிக நீளமான சுரங்கப் பாதை எங்கே அமைந்துள்ளது?
யப்பான்

*.நத்தையின் முட்டை என்ன நிறம்?
மஞ்சள்

*.தங்கத்தாத்தா என அன்புடன் அழைக்கப்படுவது யார்?
நாவலியூர் சோமசுந்தரப் புலவர்.

*.சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
இளங்கோவடிகள்

*.எகிப்து நாட்டின் கொடை என்று அழைக்கப்படுவது எது?
நைல் நதி

*.நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு?
நோர்வே

*.சூரியன் முதல் முதலாக உதிக்கும் நாடு?
யப்பான்

*.உலகிலே வேகமாகவளரும் மரம் எது?
யூகலிப்றஸ்

## முதல் மனிதன்

அன்னையும் தந்தையும் இங்கேயடா
பொன்னுக்குச் சமன் என்றுமடா
நன்றே அவர்களைப் போற்ற வேணுமடா
நாளும் அதனால் உயர்வேயடா!

உண்மையும் நன்மையும் தானடா
உம்மை உயர்த்தும் ஏணியடா
இரண்டும் உயர்ந்த கொள்கையடா
இதனால் என்றும் நற்புகழேயடா!

அச்சமும் கூச்சமும் என்றுமடா
ஆளுமையைத் தின்றிடும் குணங்களடா
அஞ்சா நெஞ்சும் தைரியமும் தானடா
ஆளுமையை உயர்த்தும் குணங்களடா!

ஆசான் ஆன்றோர் வார்த்தையடா
அரும் பெரும் உயரிய வார்த்தையடா
அதனை அடியொற்றி நடக்க வேணுமடா
அதனால் என்றும் கூடும் நற்பெருமையடா!

அநீதியும் அநியாயங்களும் எப்போதுமடா
அழிவுக்கே வழிகாட்டும் நெறிகளடா
நீதியும் நேர்மையும் தானடா
நல்வழி காட்டும் நன்நெறிகளடா!

கற்றல் நமது கடமையடா
கல்லாமை நமது மடமையடா
நிற்றல் வேண்டும் கற்றபடியேயடா
நின்றுவிட்டாலே உலகில் முதல்
மனிதனாவாயடா!



வெல்லபதியான்,எருவில்

# சில முது மொழிகள்

1) வெற்றி ஏற்பட்டால் களைப்பு தோன்றாது.
"அரபு மொழி"

2) ஒரு தவறைச் செய்யும் மனிதன் அதை திருத்திக் கொள்ளாவிட்டால் அதுவும் ஒரு தவறாகிவிடும்.
"கன்பூஷியஸ்"

3) எப்பொழுதும் அவசரம் அதிகமானால் வேகம் குறையும்.
"சர்ச்சில்"

4) தன் குறை எது என்று கண்டுபிடிப்பதும் அதைத் திருத்திக் கொள்ளுதலும் அறிவின் சிகரங்களில் ஒன்றாகும்.
"இங்கிலாந்துப் பழமொழி "

5) வாழ்வதற்குத் தகுதியுள்ள எந்த மனிதனும் மரணத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை.
"தாமஸ் புல்லர்"

6) சோம்பறியின் மூளை பிசாசின் தொழிற்சாலை.
"ஆங்கிலப் பழமொழி"

7) வீரம் என்பது அபாயத்தை அலட்சியம் செய்வதன்று. அதை தைரியமாய் துணிந்து எதிர்பார்ப்பது ஆகும்.
"ஆவ்பரி"

8) பிறருக்கு நீ கொடுப்பது பிச்சை. ஆனால் நீ பெறுவதோ பேரின்பம்.
" இந்தியப் பழமொழி"

மகாலிங்கம் - வித்தியாஜினி
மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை.

## சிந்தனைத் துளிகள்.

*. சூதாட்டம் என்பது முட்டாளுக்கு மட்டும் இயற்கையால் விதிக்கப்பட்டது.

*. ஆவேசமான ஈடுபாடும், பரிபூரணமான பற்றின்மையும் எல்லா வெற்றிகளுக்கும் திறவு கோல்.

*. மலர்களைச் சுற்றி மணம் கமழும் அது போல்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்.

*. ஆசை பெருகப் பெருக பயமும் அதிகரிக்கும். ஆசையை விட்டொழி நிரந்தரமான இடம் கிடைக்கும்.

*. உலக மக்களுக்கு நீ தொண்டனாக மாறு. உலக மக்கள் உனக்குத் தொண்டனாவார்கள்.

*. துன்பம் வந்து விடுமே என்ற பயம் துன்பத்தை விட துயரமானது.

ஆ.கலா கன்னன்குடா.

# சந்திரனைப் பற்றி

1) பூமியின் ஒரே துணைக் கோள் எது?
சந்திரன்

2) விண்வெளியில் மனிதன் இறங்கிய சிகரம் எது?
சந்திரன்

3) சந்திரனிலிருந்து மனிதன் இறங்கிய திகதி?
யூலை21,
1996(அப்லோ)



4) சந்திரனிலிருந்து எடுக்கப்பட்ட கல்லின் கால அளவு என்ன?
4.25 பில்லியன் வருடம்

5) தொலைக் கண்சோதினி மூலம் சந்திரனைக் கண்டறிந்த விஞ்ஞானியார்?
கலிலியோ

6) சந்திரனை முதல் முதலில் நிழற் படம் எடுத்தவர் யார்?
ஜான்-டபிள்யுஸ்ரீ டிராபர்

7) சந்திரனின் விட்டம் என்ன?
34750கி.மீ

8) சந்திரனின் அளவு என்ன?
பூமியின் அளவில் 1:.5

9) சந்திரனின் அடர்த்தி
3.342

10) சந்திரனின் தவிர்ப்பு வேகம் எவ்வளவு?
8047கி.மீ மணி

க.கௌசிகன் தரம்-5
தேற்றாத்தீவு.ம.வி.

# நான்

எனது பெயர் கீர்த்திகா. எனது அப்பா பெயர் பாஸ்கரன். அம்மாவின் பெயர் குமுதா. சகோதரர்களின் பெயர் கிஷோ, நிஜேந்தன். எனது கிராமம் வினாயகபுரம். நான் வினாயகர் மகா வித்தியாலயத்தில் தரம் 03ல் கல்வி கற்கிறேன். எனக்குப் பிடித்த பாடம் ஆங்கிலம். எனக்குப் பிடித்த விளையாட்டு பந்து அடிப்பது எனக்கு எங்கள் ஆசிரியர் எல்லோரையும் பிடிக்கும். எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக வரவேண்டும் என்பதே.

பாஸ்கரன் – கீர்த்திகா
வினாயகர் மகா வித்தியாலயம்
வாழைச்சேனை.




# இலங்கையின் ஆட்சிமுறை

**1) ஒரு சட்டத்திற்கும் சட்டமூலத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு யாது?**

பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட வீதிகள் சட்டம் எனப்படும். ஆனால் இவ் நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்குவதற்கு முன்னர் அதனைச் சட்டமூலம் என அழைப்பர்.

**2) இரண்டு வகையான சட்டமூலம் எவை? அவற்றுக்கு இடையிலான வித்தியாசம் யாது?**

01. பொதுவான சட்டமூலம்
02. தனிப்பட்டசட்டமூலம்
பொதுவான சட்டமூலம் பொதுவான பிரயோகம் உடையது. ஆனால் தனிப்பட்ட சட்டமூலம் குறிப்பிட்டநபர்களின் அல்லது அதிகாரசபை போன்ற குழுக்களின் நன்மைக்கானதாக இருக்கும்.

**3) தனிப்பட்ட உறுப்பினர் (MP) சட்டமூலம் ஒன்று பொதுவானதாய் இருக்கலாம். அல்லது தனிப்பட்டதாய் இருக்கலாம் விளக்குக. ?**

அரசாங்கத்தினால் அன்றி தனிப்பட்ட உறுப்பினர்களும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வரலாம். இது பொருள் விடயத்தைப் பொறுத்த வரை பொதுவானதாய் அல்லது தனிப்பட்டதாய் இருக்கலாம். எனினும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் அன்றி சட்டமாகாது.

**4) புதிய அரசியலமைப்பில் காணப்படும் 3 பிரதான அம்சங்கள் எவை?**

விசேட நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, மக்கள் தீர்ப்பு, அடிப்படை உரிமைக்குப் பரிகாரம்.

**5) சட்ட மூலம் ஒன்று சட்டமாக நிறைவேற்றப்பட 7 படிமுறைகள் ஏன் அவதானிக்கப் படுகிறது.?**

1 மக்கள் யாவரும் குறித்த சட்டத்தை அறிந்து கொள்ளல்
2 அது முறையானதாயும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருப்பதற்கும்.
3 பொதுக்கோட்பாடு பின்பற்றப்பட வேண்டியதாலும்.
4 சொற்பிழை 1 எழுத்துப்பிழை அற்றதாக இருப்பதற்கு.
5 சட்டமூல நிலமையிலேயே திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் கொண்டு வரமுடியும்.
6 சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் எதுவும் செய்ய முடியாது.

**6) சட்டம் என்றால் என்ன?**

ஒரு சமூகத்தை ஆளும் விதிகளின் தொகுதி ஒரு சட்ட சபையால் இயற்றப்படும் போது சட்டம் எனலாம்.

**7) சட்டமானது சாதாரண விதிகளில் இருந்து தனித்துவமானது விளக்குக?**

சட்டமானது சமூகத்தில் உள்ள அனைவரையும் இது கட்டுப்படுத்துகிறது. இதற்குப் பிறம்பாய் எவரும் இருக்க முடியாது. சட்டம் ஒன்றை மீறும் போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியும். மேலும் இது மக்களின் விருப்பமே பாராளுமன்ற பிரதிநிதிகள் மூலம் சட்டமாக்கப்படுகிறது.

**8) சட்டம் ஒன்றில் காணப்படும் முக்கிய அம்சங்கள் யாவை?**

1. ஒரு சமூகத்தில் சட்டம் ஒன்று இருக்கும் போது மக்கள் அச்சட்டத்தினாலேயே ஆளப்படுவார்கள். ஆட்சியாளர்கள் தம் மனம் போனபடி நடந்து கொள்ள முடியாது. இது தனிமனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதிக்கிறது.
2. சட்ட ஆட்சி மனித ஆட்சியில் இருந்து வேறுபட்டது. மேலும் அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுக்கிறது.

**9) எமது சட்ட முறைமையின் படிமுறையில் காணப்படும் 3 உள்ளார்ந்த அம்சங்கள் யாவை?**

1. சட்ட முறைகளின் திறந்த தன்மை அதாவது பகிரங்க நீதிமன்றங்கள் காணப்படும்.
2. ஒவ்வொரு திறத்தவருக்கும் (party) தத்தமது வாதத்தை எடுத்துரைப்பதற்கு உள்ள உரிமையையும் அதற்கான நியாயமான சந்தர்பங்களும் வழங்கப்படுதல்.
3 நீதிபதி பாரபட்சம் (bias) அற்றதாய் இருத்தல். அதாவது அவர் அநீதியைவிட நீதியின் பக்கமும், தீயதைவிட நல்லதன் பக்கமும் சார்ந்து இருத்தல்.

**10) நீதிமன்றம் ஒன்றில் வழக்கு ஒன்று விசாரிக்கப்படும் இரு பெரும் முறைகள் எவை? அவற்றைத் தனித்து விளக்குக?**

1. மாற்றாள் சார் விழசாரிப்பு முறை (Acquisistorial system)
2. விசாரிப்பு சார் முறை (lnquisistorial system)
மாற்றாள் சார் விசாரிப்பு முறை இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்ரோலியா, போன்ற பொதுச்சட்ட நாடுகளில் காணப்படுகிறது. இங்கு நீதிபதி நடுநிலைமை வகிக்கும் இருபக்க சட்ட அறிஞர்களாலும் முன் வைக்கப்படும் வாதங்களின் அடிப்படையில் பிணக்கிற்கு ஒரு தீர்ப்பை நீதிபதி வழங்கல், நீதிபதித் தீர்ப்பை வழங்குவதைத் தவிர வழக்கு நடவடிக்கையில் வெகு சொற்ப அளவிலேயே கலந்து கொள்வார்.
3. விசாரிப்பு சார் முறை ஐரோப்பிய குடியில் சட்ட நாடுகளில் காணப்படுகிறது. இங்கு விசாரணை முறைமையில் நீதிபதியே முழுப்பங்கு எடுப்பார். சாட்சிகளை அழைத்து விசாரிப்பார். உண்மையிலேயே புலனாய்வை நடத்துவார்.

**11) இவ்விரு முறைகளில் எவ் விசாரிப்பு முறை சிறந்தது என நீவீர் கருதுவீர்? அபிப்பிராயத்தைத் தருக.**

01. மாற்றாள் விசாரிப்பு முறையைப் பொறுத்தவரை ஒரு திறந்தவரின் சட்டத்தரணி திறமையானவராக இருக்கும் பட்சத்தில் சில சந்தர்பங்களில் உண்மையான நீதி கிடைக்காமல் போகலாம். ஆயினும் இரண்டு திறந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதன் மூலம் உண்மையான நிகழ்வுகள் நிரூபிக்கப்பட முடியும். மேலும் முரண்பாடும். இருவேறுபட்ட வாதங்களுக்கு இடையில் சிறந்த முடிவை எடுக்கலாம்.
02. விசாரிப்பு சார் முறையில் தனித்து இயங்கும் போது முழுவிடயத்திலும் பங்கெடுப்பதன் மூலம் பிழை இடம் பெற சந்தர்பங்கள் இருக்கும். ஆனால் உண்மையில் ஒரு புலனாய்வை நடத்துவதன் மூலம் உண்மையாக நடந்தது என்ன? என்பதை நீதிபதி கண்டறிய முடிகிறது.
இவற்றை வைத்துப் பார்க்கும் போது எமது முறை சிறந்தது எனலாம்.

**12) பிரித்தானிய அரசியல் அமைப்பு எழுதப் படாதது. விளக்குக? அரசியலமைப்பு சட்டம் பல நாடுகளில் எமது இலங்கை போன்று எழுத்தில் அமைந்து காணப்படுகிறது.**

ஆனால் பிரித்தானிய அரசியலமைப்பானது எழுத்தில் காணப்படவில்லை. எனினும் இங்கு அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களான
maganacarta ஒப்பந்தம்.
bill of rights
வெஸ்மினிஸ்டர் சட்டம்
மரவுச் சட்டம் என்பனவற்றில் காணப்படுகிறது.

# ஐக்கிய அமெரிக்காவின் அரசியல்த் திட்டம்

**01. ஐக்கிய அமெரிக்க சட்டத்துறையின் காங்கிரஸ் எத்தனை சபைகளைக் கொண்டுள்ளது?**
இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது.
பொதுமக்கள் சபை(கீழ்சபை), செனட் சபை(மேல்சபை)

**02. ஐக்கிய அமெரிக்காவில் செல்வாக்குப் பெற்ற இரு கட்சிகளும் எவை?**
குடியரசு சபை
ஜனநாயக கட்சிகள்

**03. அமெரிக்காவின் 16வது ஜனாதிபதி யார்?**
ஆபிரகாம் லிங்கன்

**04. ஜனாதிபதி எத்தனை தடவைகள் பதவி வகிக்கலாம். பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?**
இரண்டு தடவை பதவி வகிக்கலாம்.
4வருடம்.

**05. ஜனாதிபதியாக இருக்கும் ஒருவருக்கு காணப்பட வேண்டிய தகமைகள் எவை?**
35 வயதைப் பூர்த்தி செய்தவராகவும், அமெரிக்காவில் இவர் 14வருடங்கள் வாழ்ந்தவராகவும் இருத்தல்.

**06. ஜனாதிபதியின் நிர்வாகத் துறை சார்ந்த அதிகாரங்கள் எவை?**
உள்நாட்டு நீர்வாகத்தறை சார்ந்த அதிகாரம், வெளிநாட்டு நிர்வாகத்தறை சார்ந்த அதிகாரம், போர்கால அதிகாரம்.

**07. ஜனாதிபதி சட்டத்துறையில் செலுத்தும் அதிகாரம் எவை?**
சட்டம் இயற்றுவதற்குக் கேள்வி விடுத்தல்
இயற்றப்பட்ட சட்டங்களுக்கு இறுதிக் கையொப்பம் இடுதல்.

**08. அமெரிக்க ஜனாதிபதி எதன் மூலம் தெரிவுசெய்யப்படுகிறார்? எத்தனை பெயர் உண்டு?**
தேர்தல் கல்லூரி மூலம் தெரிவு செய்யப்படுகிறார். 538 பேர் உண்டு.

*சி. மேகலாதேவி, கதிரவெளி*

**09. ஐக்கிய அமெரிக்க கீழ் சபை உறுப்பினர்கள் எத்தனை பேர்?**
பேர் - 432
பதவிக்காலம் -4ஆண்டு.

**10. கீழ் சபையின் மிக முக்கிய 3கடமைகள் எவை?**
யுத்தம் பிரகடனம் செய்தல், ஜனாதிபதிக்கு அனுமதி வழங்குதல், சட்டம் இயற்றதலில் கீழ் சபையானது செனட்டுடன் சம உரிமை கொண்டு காணப்படுதல்.

**11. அமெரிக்க செனட்சபையின் மொத்த உறுப்பினர்கள் எத்தனை?**
பேர் - 104
பதவிக்கால ஆண்டு - 6

**12. செனட்சபை ஒரு கலையாத சபை எனக் கூறக் காரணம் என்ன?**
செனட்சபையானது மானில மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையாகக் காணப்படுகின்றது.

**13. செனட்டின் முக்கிய அதிகாரம் என்ன?**
சட்டவாக்க கழகத்தில் செனட்சபைக்கும் சமவுரிமை உண்டு.
ஜனாதிபதி வெளிநாட்டு உறவுகளின் தொடர்பை வேண்டி செனட் அனுமதி வழங்குதல்.
நிதி மசோதாக்களை இயற்றுதல் திருத்தி அமைத்தல் அல்லது மாற்றி அமைத்தல்.

**14. அமெரிக்க செனட்சபை வலிமை பொருந்தியதாக இருக்கக் காரணம் யாது?**
52 மானிலங்களில் இருந்து மக்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

**15. அமெரிக்க உயர் நீதிமன்ற நிதியரசர்களின் வகைகள் என்ன?**
உயர் நீதியரசர்கள், பிரதம நீதியரவர்கள்

**16. அமெரிக்க நீதிமன்றத்தின் முக்கிய பணிகள் எவை?**
மத்திய அரசிற்கும் மானிலங்களும் இடையிலான பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

**17. குடியரசுக் கட்சியின் முக்கிய பணிகள்?**
ஒற்றுமையான மனதிதர்மத்திற்குப் போராடும் கட்சியாகவும் உரிமைகளைப் பேணும் கட்சியாகவும் காணப்படும்.

**18. ஜனநாயக்கக் கட்சியின் பிரதான பணிகள் எவை?**
மக்கள் நலனுக்காகக் குரல் எழுப்பும் கட்சியாகவும் ஆட்சியமைக்கம் கட்சியாகவும் தொழிற்படும்.

**19. அமெரிக்க சமஷ்ரியமைப்பின் பிரதான பண்புகள் எவை?**
அமெரிக்காவில் அதிகாரங்கள் மதிதிய மானிலங்களுக்கு சமமாகப் பிரித்து வழங்கப்பட்டுள்ளது.
மத்திய அரசின் கீழ் மானில அரசுகள் தொழிற்படுகின்றது.

## சிறுகதை

# ஓடிப்போய் கலியாணத்தைக் கட்டிக்கலாமா?

செ.குணரத்தினம்

"உலக அழகு ராணிப் போட்டிக்கு நீ போனா கண்டிப்பாக உனக்குத் தாண்டி முதலாம் இடம் கிடைக்கும்!"

இப்படி சித்திராவின் தோழிகள் பகிடி பகிடியாச் சொல்வார்கள். சித்திரா 'கிளிக்'கென்று சிரிப்பாள்.

இவளின் அழகில் ஊரிலுள்ள பல இளைஞர்கள் மாத்திரமல்ல திருமணம் செய்தவர்களும் கூட சொக்கித் தவிக்கிறார்கள் என்றால் பிறகு சொல்வானேன்.

உண்மையில் சித்திரா அழகான அழகிதான்.

தான் ஒரு அழகியாக இருப்பதில் அவளுக்கு இனியில்லை என்ற மகிழ்ச்சி.

'மேக்கப்' எதுவும் செய்யாமல் அவசரத்தில் தலையைச்சீவிக் கட்டி ஏதாவதொரு ஆடையை அணிந்து கொண்டு தெருவில் இறங்கி நடந்தாலே அது ஒரு புதிய பெஷனாக மாறிவிடும்.

தன் மகள் அழகானவள் என்பதில் சித்திராவின் தாய் கமலத்திற்குப் பெருமை யோ பெருமை. "பெரிய பெரிய இடத்துப் பையன்களெல்லாம் ஒரு சதம் சீதனமும் வாங்காமல் தன் மகளைப் பெண் கேட்டு வருவார்கள்" என்று எண்ணிப்பார்த்துப் பூரித்துப் போனாள்.

இத்தனைக்கும் சித்திரா, கமலம் என்ற ஏழைத்தாயின் வயிற்றில்தான் பிறந்தவள்.

தந்தை மாணிக்கம் தபால் அலுவலகத்தில் ஒரு சிற்றூழியர். மாணிக்கத்திற்கும், கமலத்திற்கும் இவள் ஒரேயொரு பிள்ளை. இவளுக்குப் பிறகு கமலத்தின் வயிற்றில் மாணிக்கத்தின் கரு தங்கவில்லை. மாணிக்கம் மாதாந்தம் பெறும் சம்பளம் அதிகமில்லை. என்றாலும் தட்டுப்பாடு, முட்டுப்பாடு இல்லாமல் குடும்பம் அந்தச் சிறு வருவாயிலேயே ஓடியது.

சித்திரா வளர வளர அவள் அழகும் மெருகேறிக்கொண்டே வந்தது.

கோவில் திருவிழா, கலை விழா, திருமண வீடு என்று தாயும் மகளும் போனால் எல்லோரது கண்களும் இமை வெட்டாமல் இவர்களைத்தான் பார்த்திருக்கும். வரவேற்புக் கூட இவர்களுக்கே அங்கே அதிகமாகவிருக்கும். "இவன்மாணிக்கம், கமலம் சித்திராவை உண்டாகியிருக்கும் போது குங்குமப் பூ கொள்ளை கொள்ளையாக வாங்கிக் கொடுத்தவனாமே நாமென்னத்தத் தின்ன நம்மடவனுகள் வாங்கித் தந்தானுகள்!" என்று பல பெண்கள் சொன்னதும் உண்டு.

எது எப்படியோ சித்திரா குமராகி ஓ.எல். வகுப்பிலும் சேர்ந்து கொண்டாள்.

சித்திராவிற்கு தான் பெரிய அழகி என்பதில் நிறையவே பெருமை இருந்தது.அந்தப் பெருமை நாளடைவில் கர்வம் கொண்டவளாக அவளை அறியாமலே மாற்றியது.

இதனால் அவள் எந்த ஆண்களையும் ஏன் பெண்களைக்கூட அவ்வளவாக ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. மற்றவர்களைப் பார்த்தால், சிரித்தால் அது தனக்கு இழிவாக இருக்கும் என்று நினைத்தாள்.

"எங்களைப் பார்க்கமாட்டாளா? சிரிக்க மாட்டாளா? பேச மாட்டாளா?" என்று சில இளைஞர்களும், முதியவர்களும் கூட துடியாய்த் துடித்தார்கள். தனக்குள் உருவான பருவ உணர்வுகளை இவள் பெரும்பாடு பட்டு அடக்கிக் கொண்டு எவரையும் "மைண்ட்" பண்ணாமலேயே வாழ்ந்தாள். வழக்கம் போல அவள் பாடசாலைக்குப் போனாள். வீட்டிலிருந்து பாடசாலை நடந்து போகக் கூடிய தூரத்தி லேயே இருந்தது. அன்று சித்திரா லேற். தோழிகள் எல்லோரும் நேரத்திற்கே போய்விட்டார்கள்.

பாடசாலைச் சீருடையில் அவள் வரம்பில் நடந்து செல்லும் புறாவைப் போல போனது கடைத்தெருக்களில் நின்றவர்க ளையெல்லாம் கதிகலங்கச் செய்தது.

அந்த வேளைதான் மோகன் அவளை எதிர் கொண்டு சைக்கிளில் வேகமாக வந்து 'சடுன் பிறேக்' போட்டு அவளைப்பார்த்து 'குட்மோணிங்'' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்து விட்டு எதுவும் பேசாமல் நடையைக் கட்டினாள். "ஆட்சேபனை இல்லையென்றால் வாங்க சைக்கிளில் கொண்டு போய் விடுகிறேன். வேகமாக நடந்தால் வியர்க்காதா?" என்று சைக்கிளைச் செலுத்திக் கொண்டே மோகன் கேட்டான் மீண்டும் அவனை முறைத்துப் பார்த்து விட்டுப் போய்விட்டாள்.

என்றாலும் அன்று பாடசாலை முடியும் வரை அவள் அவளாகவே இல்லை. பாடங்களில் மனம் பதியவில்லை. பார்க்கும் இடமெல்லாம் மோகன் குட்மோணிங் சொல்வது போலவே தெரிந்தது. எரிச்சலோடு புத்தகத்தை மூடினால் அட்டையில் மோகன் சைக்கிளில் வந்து அவளை அழைப்பது போல தோன்றியது. அவனை மறக்க எவ்வளவோ முயற்சித்தாள். முடியவேயில்லை.

மோகன் கலகலப்பாக இருப்பான். கவர்ச்சியான தோற்றம். தபால் அலுவலகத்தில் சித்திராவின் தந்தை யோடுதான் வேலை பார்க்கிறான். இரண்டு மூன்று தடவைகள் அவரோடு வீட்டுக்கும் வந்து போயிருக்கிறான்.

"எவரும் என்னோடு நெருங்கிப் பேசப் பயந்த நேரத்தில் இவன் மோகன் துணிச்சலோடு என்னை அணுகியிருக்கிறானே காதலுக்கு எப்போதுமே துணிச்சல் இருக்க வேண்டும் இல்லாதவர்கள்......"

இப்படிச் சித்திரா யோசித்துப் பார்த்தாள். அவள் மனம் ஒரு இருபத்தைந்து வீதம் அவன் பக்கம் சாய்ந்தாலும் எழுபத்தைந்து வீதம் கர்வத்தின் பக்கமே நின்றது.



ஆனால் மோகன் சித்திராவை பின் தொடர்வதை நிறுத்தவேயில்லை. அவளும் அவனை முகம் கொண்டு பார்க்கவுமில்லை, பேசவுமில்லை. அன்றும் சித்திரா பாடசாலைக்குப் போனாள் அதுவும் ஒரு முடிவோடுதான் போனாள்.

"இன்று இவன் குட்மோணிங் சொன்னால் காலில் கிடப்பதைக் கழற்றிக் காட்டவேண்டும்." அவள் நினைத்தது போல மோகன் வந்தான். சித்திரா தோழிகளுடன் கலகலப்பாகப் பேசியபடி நடந்து கொண்டிருந்தாள். ஆனால் சித்திரா_ எதிர்பார்த்ததைப் போல மோகன் அன்று அவள் பக்கம் திருப்பவுமில்லை. எதுவும் சொல்லவும் இல்லை.

இப்படி ஒரு ஐந்தாறு நாட்கள் கடந்து விட்டன. சித்திராவுக்குப் பலத்த ஏமாற்றம்.

பகல் இரவெல்லாம் அவனைப் பற்றியே சிந்தித்தாள். "எப்படியாவது அவனோடு பேசவேண்டும்!" என்று திடீர்முடிவெடுத்துக் கொண்டாள்.

இப்படி அவள் முடிவெடுக்க எப்படி அவள் மனம் மாற்றம் பெற்றது? அது அவளுக்கே புரியாத புதிராகவே இருந்தது.

வழமைபோல மோகன் அவளை எதிர் கொண்டு வந்தான். அவன் தூரத்தில் வருவதை அவதானித்து விட்டு கிட்டடியில் வந்தபோது திடீரென தெருவைக் குறுக்கறுத்தாள்.

மோகனும், சித்திராவும் நூலிடையில் நின்றார்கள். மோகன் திடீர் பிறேக் போடாமல் இருந்திருந்தால் அக்சிடன்டே ஏற்பட்டிருக்கும். அவள் தற்செயலாகப் பிடிப்பதைப் போல சைக்கிள் கேன்டிலைப் பிடித்தாள்.

"குட்மோணிங்" என்று சொல்லி விட்டு சிரித்தபடி நடந்து போனாள்.

மோகனின் நெஞ்சுக்குள் "திகீர்" என்றது. "உண்மையாகவா இச் சம்பவம் நடந்தது?" அவனுக்கு ஏதோவொரு சினிமாப்படம் பார்ப்பது போன்ற உணர்வே உண்டானது.

இதன் பிறகு தினமும் சித்திரா மோகனைக் காத்துக் கொண்டு நிற்பதும் அவனோடு பேசிப் பேசிப் பாடசாலைக்குப் போவதும் வழக்கமாகிவிட்டது.

எல்லாம் ஒரே ஒரு வாரந்தான். அதன் பிறகு இவர்கள் காதல் எல்லோருக்கும் தெரிய வந்த போது சித்திராவின் தாய் சீறினாள். "நான் போஸ்ற் பியோனை முடித்துக் கொண்டு படுறபாடு போதாதென்று நீயுமா அப்படியான ஒருவனைத் தேடியெடுத்திருக்கிறா? பாதகத்தி நான் உயிரோட இருக்கும் வரை உன்னை அவனோடு வாழ விடமாட்டன்."

சித்திராவின் பாடசாலை வாழ்வு நின்று போயிற்று. தனிமையிலிருந்து அவள் சிந்தித்தாள். "அம்மாவும், அப்பாவும் இப்போது இப்படித்தான் ஏசுவார்கள் பேசுவார்கள். எவருக்கும் தெரியாமல் அவரோடு ஓடிப்போய்க் கலியாணத்தைக் கட்டித்து பிள்ளை பிறந்த பின்பு வந்தால் பாசத்தோடு ஏற்றுக் கொள்வார்கள். இப்படித் தானே எங்கும் நடக்கிறது. பெற்றமனம் எப்போதுமே பித்துத்தானே.

சுவரில் தொங்கிய கலன்டரைப் பார்த்தாள் வருகிற பதினைந்தாம் திகதி தைப்பொங்கல் திருநாள். அதற்கு முன்பாகவே மோகனோடு போய் விட்டால்.... எவரும் அறியாவண்ணம் முழுவிபரத்தோடும் மோகனுக்குத் தூது விட்டாள்.

அன்றிரவு மோகனும், சித்திராவும் ஓடிப்போன செய்தி விடிந்ததும் ஊரெல்லாம் தொம்மென்று போயிற்று.

(யாவும் கற்பனை)

**இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை**

# ஆடித்தீ

8

-நாவல்-

-ஓ.கே. குணநாதன்-

தண்டபாளத்தின் 'சிலிப்பர்' கட்டைகளுக்கிடையே கிடந்ததனால் இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பி விட்டனர்.

அதற்குப் பெயர் தான் விதி!

புகையிரதம் சென்று முடிந்ததும் இருவரும் பேயறைந்தது போல ஆளை ஆள் பார்த்துக் கொண்டு நின்றனர். இருவரிலேயும் யார் முதலில் பேசுவது என்ற தன்மானப் பிரச்சினை.

''சாக வந்தால் கூட சாக வழியில்லை....நீஎன்னச் சாகவிடல்ல....''

முதலில் அந்தப் புதிய மனிதனே பேசினார்.

மகேந்திரன் சிரித்தான். அவனுடைய சிரிப்பில் ஒரு வறுமை இருந்தது.

''அது விதி''

''விதியா!''

''விதிதான் நானும் சாகத்தான் வந்தன். உன்னால தான் நானும் சாகல்ல. அதுக்கு நீதான் காரணம். அது சரி... உன் பெயர் என்ன..? நீ ஏன் சாக வந்தாய்..? ''

''என்ட பெயர் அன்பழகன். அட்வான்ஸ் லெவலில நல்ல திறமையாக பாஸ் பண்ணிருக்கன்.. ஆனா.. விகிதாசார முறையால் கம்பசுக்குப் போக இயலாமல் போயிற்று. ஒரு வேலையும் கிடைக்குதில்ல..''

''வீட்ட வேற ஒருத்தரும் இல்லையா..? ''

''ஏன் இல்ல.... வீட்ட ஒரு அண்ணன் இருக்கான். அவன் பட்டதாரி. பட்டம் பெற்றும் ஒரு வேலையும் இல்ல... வேலைக்காக உண்ணா விரதப் போராட்டம் செய்கிறான். அக்சிடன்ல அப்பாவுக்கும் ஒரு காலில்ல.... அதனால வீட்டில வறுமை... பட்டினி... பஞ்சம் ' வயது நேரத்தில அப்பா அம்மாவப் பாக்காம விட்டா இருந்தென்ன.. செத்தென்ன! இப்படியிருக்கக் குள்ள நான்

உயிர் வாழனுமா? சும்மா கிடக்கிறத விடச் செத்துப் போயிடலாம்.''

அவன் கூறி முடித்த போது அவனுடைய விழிகளினால் கண்ணீர் பொல பொலவென வழிந்து கொண்டிருந்தது.

உண்மையின் கதவுகள் திறந்தன.

அன்பழகனின் கதையைக் கேட்டதும், அவனுடைய எண்ணத்தில் புதிய பல சிந்தனைகள் மலர்ந்தன.

சாவது என்பது கோழைத் தனம்.

அவன் தற்கொலை செய்து கொள்ள நஞ்சு குடித்த எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறான். ஆத்திரத்தில்.. ஒரு வெறுப்பில் நஞ்சைக் குடித்து விடுகின்றனர். பின்பு இருக்கும் மரணத் தறுவாயில் அவர்கள் வாழ வேண்டும் என்ற அற்ப ஆசையில் ஏன் குடித்தோம்... தெரியாமல் குடித்து விட்டோம்.... ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள் என்று கண்ணீர் விட்டழும் வேதனைகள்..... வேதனைத் துடிப்புகள் சொல்ல முடியாதவை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினைகள்.

''அன்பழகன் சாவது கோழைத்தனம்... வாழ்ந்தே ஆக வேண்டும்! மனதைத் திடப் படுத்திக் கொண்டு வீட்டுக்குப்போ.. நாளைக்கு காலம்புற எட்டு மணி போல உன்னைச் சந்திக்கிறன்.''

மகேந்திரனின் வார்த்தையில் ஒரு திருப்பம் இருந்தது.

இருவரும் தண்டபாளத்தில் நடந்து நாவற்கேணி சந்தியை அடைந்தனர்.

அங்கிருந்து ஊறணி வழிப்பாதையினால வலையிறவில் இருக்கும் அவனுடைய வீட்டை நோக்கி அன்பழகன் பிரிந்து முகத்துவாரத்தை நோக்கிய பாதையால் திரும்பி வீட்டை நோக்கி நடந்தான் மகேந்திரன்.

வீட்டுக்கு வந்து சேர்ந்த போது பொழுதை இருள் கவ்வியிருந்தது. வீடெங்கும் ஒரே இருள்.

தட்டுத் தடுமாறி மேசையிலே கிடந்த நெருப்பெட்டியை எடுத்து விளக்கைப் பற்ற வைத்தான். இருள் அகன்று ஒளி பரவியது.

அப்பொழுதான் அவனுக்குத் தான் எழுதி வைத்து விட்டுச் சென்ற கடிதத்தின் நினைவு வந்தது.

அவள் அக் கடிதத்தை வாசித்திருந்தால் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள் என்பதை நினைக்கையிலே உடல் கூனிக் குறுகியது.

அவனுடைய பார்வை மேசையின் மேலே கிடந்த கடிதத்தின் மேலே பதிந்தது.

கடிதத்தைக் கண்ட பின்புதான் அவனுக்கு போன உயிரே திரும்பி வந்த மாதிரி இருந்தது.

கடிதம் கல்லுக்குக் கீழே அப்படியே குந்திக் கொண்டிருந்தது.

மெதுவாக எழுந்து சென்று மேசையின் மேலேயிருந்த கல்லை அகற்றிக் கடிதத்தை எடுத்தான். பிரித்தான்.. படித்தான்.

அங்கே அவனுக்கு



அதிர்ச்சி காத்துக் கிடந்தது.

அங்கே அவன் எழுதிய கடிதம் இருக்கவில்லை.

ஆனால்.....

அங்கே வேறொரு கடிதம்!

''நித்தியா..! நீயா இப்படிச் செய்றது? ஆறுதல் வார்த்தைகள் கூறும் நீயே இப்படிச் செய்தால்.. நான் என்னத்திற்கு வாழனும் ''

கண்ணீர் விட்டே அழுதான்.

அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு தடவை படித்தான்.

மகேந்திரனுக்கு,

நீங்கள் வாழவே கூடாது
சாவதே மேல்...
நீங்கள் ஒரு கோழை.
நீங்கள் சாகாமல் விட்டால்
சமூகத்தையே குட்டிச் சுவராக்கி
விடுவீர்கள்...
எனவே -
நீங்கள் சாகவே வேண்டும்
இப்படிக்கு உங்கள்
நித்தியா.

அந்த நேரம் பாத்தாற் போல அவனை உரசிய படி இரண்டு ''றன்பக் நஞ்சுக் குப்பிகள்' மேசையின் மீது வந்து விழுந்தன.

நிமிர்ந்தான் மகேந்திரன்.

எதிரே நித்தியா நின்று கொண்டிருந்தாள்.

கண்கள் அனலைக் கக்கிக் கொண்டிருந்தன. கொவ்வைச் செவ்விதழ்கள் துடித்துக் கொண்டிருந்தன.

இருவரிடேயும் நீண்ட நேரம் மௌனம் நிலவியது.

''நீங்க இன்னும் சாகலலையா...!''

அமைதியிடையே ஊமத்தங் கோழி முக்குவது போல நித்தியாவின் குரல் அலறியது.

மகேந்திரனோ குற்ற உணர்வினால் அவளுடைய முகத்தைப் பார்க்க நாதியற்று குனிந்த தலை நிமிராமல் நின்றான்.

தென்றலென வார்த்தைகளை ஆரம்பித்தவள், புயலென வார்த்தைகளை... சுடு சொற்களை... அள்ளி வீசினாள்.

''நீங்க ஒரு மனிசனா....! கேவலம்...சுய நலவாதி! உங்களை நீங்களே ஏமாற்றும் ஏமாற்றுக் காரன்! நீங்க பாதிக்கப்பட்டதுக்காக தற்கொலை செய்யத் துணிஞ்சீங்க உங்களுக்கு வெட்கமா இல்ல..... நீங்க நினைக்கக் கூடாது. நீங்க மட்டும்தான் பாதிக்கப் பட்டவரென்று.... நாட்டில எங்குமே தமிழன் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறான். விகிதாசார முறையில் மாணவன் பாதிக்கப் படுகிறான். வேலையில்லாத் திண்டாட்டத்தால இளைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள். திட்மிட்ட குடியேற்றத்தால மக்கள் ஒதுக்கப் படுகிறார்கள்....

இப்படியாகப் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் நஞ்சைக் குடித்துக் கொண்டு அல்லது கழுத்தைச் சுருக்கிலிட்டு, அல்லது ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள நினைத்திருப்பார்களேயானால் நாட்டில் எவருமே மிஞ்சியிருக்க மாட்டார்கள். தமிழினமே அழிந்தி ருக்கும்.

உங்களைப் போல கோழைகளும் சுயநலக்காரர்களும் இருக்கும் வரைக்கும் நாம் எல்லோரும் சுதந்திரம் பெற்ற இந்த நாட்டின் அடிமைகளே!

வீணாக இப்படிச் செத்துப் போறனீங்க... ஏன் அடிமை விலங்கொடிக்க... ஒடுக்கு முறைக்கெதிராக புரட்சியை ஏற்படுத்த முடியாது?

நாம இப்படி இருந்தால் நம்முடைய பரம்பரையும் இப்படித்தான் சீரழியும். நமக்கென்று இல்லாவிட்டாலும் நம்முடைய எதிர் காலச் சந்ததியினரை நினைத்தாவது போராடினால் என்ன!''

ஒரு குட்டிப் பிரசங்கத்தையே வைத்து விட்டு, பதிலுக்குக் காத்திராமல் வெளியேறினாள்.

அவன்

''நித்தியா கொஞ்சம் நில்லு!''

கத்தினான்.

அவள் அவனைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தாள்.

அந்தப் பார்வை ''உன்னுடன் கதைப்பதற்கு நான் தயாரில்லை. என்பது போல இருந்தது.

அவள் தொடர்ந்து நடந்தாள்.

மீண்டும் கத்தினான்.

''நீ போ ஆனால் நான் சொல்றத ஒருதரம் கேட்டுத்துப் போ....!''

அவள் நின்றாள்.

அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

''நித்தியா, நான் தற்கொலை செய்யாமல் திரும்பி வந்ததே நீ சொன்ன அதே காரணத்திற்காக.... அதுதான் விடுதலைப் போராட்டத்தில் சேருவதற்காக...''

''ஆ''

ஆச்சர்யமான அந்த வார்த்தைகளினால அவளுடைய அனல் கக்கிய கண்கள் ஆனந்த கண்ணீரைச் சிந்தின.

''இப்பொழுதான் நீங்க ஒரு ஆம்பிள....''

வார்த்தைகள் உதிர்ந்து கொண்டிருக்க அவள் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஒரு பெண்ணா? இல்லையேல் பெண்ணின் வடிவாக வநத வீர வேங்கையா?

ஒன்றுமே புரியவில்லை.

தொடரும்....

# புல்லுமலை முதல் புனாணை வரை....

## தென் தமிழீழ படுகொலைகளின் இரத்தச் சுவடுகள்

நாடுகளுக்கிடையிலான போராயினும் சரி, இனங்களுக்கிடையிலான உள்நாட்டுப் போராயினும்சரி அதில் கூடுதலான உயிரிழப்பு பொதுமக்கள் மத்தியில் தான் நடைபெறுகின்றது. பொதுமக்களின் உயிரிழப்பு ஒரு விபத்து என்று சொல்லி விட முடியாது. பொதுமக்கள் மீதான தாக்குதல் நன்கு திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. பொதுமக்களைக் குறிவைத்து தாக்கப்படுவதுதான் வழமை என்னுமளவிற்கு அது பெருகி விட்டது.

முன்னெப்போதும் இல்லாதளவு மனிதப் படுகொலைகள் இருபதாம் நூற்றாண்டில் தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் நடைபெற்றுள்ளன. இது திட்டமிட்ட இன அழிப்புப் படுகொலையாக சிறிலங்கா அரசின் கூலிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

சிறிலங்கா அரசின் இப் படுகொலைகள் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளன. அரச பயங்கரவாதத்திற்கு முன்னுதாரணமாக இவை விளங்குகின்றன. அத்தோடு சிறிலங்காவின் இராணுவப்படையும், பொலிஸ் படையும், பிற ஆயுதப் படைகளும் ஒடுக்கு முறையின் சின்னங்களாகவும், தமிழர்களை உயிர்ப் பலி எடுப்பதற்கென்றே உருவாக்கப் பட்டவையாகவும் அமைகின்றன. சீருடை தரித்த படையினரையும், காடையர்களையும் பயன்படுத்தி தமிழர்களின் நிலம் பறிப்புக் கொள்கையை சிறிலங்கா அரசு மீண்டும் மீண்டும், மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு அம்பாறை. மாவட்டங்களில் நூற்றுக்கு மேற்பட்ட படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. பல்லாயிக் கணக்கான தமிழ் உறவுகள் தமது உடன் பிறப்புக்களை, சொந்த பந்தங்களை உடமைகளை இழந்து நிர்க்கதியாகி நிலைகுலைந்து நிற்கின்றன. சிறிலங்காப் படையினரின் திட்டமிட்ட இன அழிப்பு, நிலப்பறிப்பின் நிமித்தம் காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட கண் மூடித்தனமான படு கொலைச் சம்பவங்கள் இவைகளாகும். இவையாவும் சிங்கள இராணுவத்தினராலும், அவர்களுக்குப் பக்க பலமாக நின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் காடையர்களும், தமிழ் தேசத் துரோக கும்பல்களும் இணைந்து செயற்படுத்தினர்.

இப்படி ஒவ்வொரு தமிழ் கிராமங்களிலும் ஒன்றும் அறியாத அப்பாவித் தமிழ் மக்களை வெட்டியும், சுட்டும் பொல்லால் அடித்தும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் என்ற பேதம் ஏதுவும் இல்லாமல் கொல்லப் பட்டனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு அநாகரிகமான முறையில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் குடும்பஸ்த்தர்கள் கைது செய்யப்பட்டும் அழைத்துச் செல்லப்பட்டும் அடையாளம் தெரியாத வகையில் கொல்லப்பட்டனர்.

தமிழ் உறவுகளின் உயிர்கள் வகை தொகையின்றிப் பறிக்கப்பட்டன. தமிழர் என்ற காரணத்தினால் பேரினவாதக் காடையர்களினால் திசைக்கொன்றாய்ப் பிரிந்து தவித்து அகதி முகாம்களில் அல்லல் பட்டார்கள். சொந்தமான நிலத்தை சுயமான தொழிலை, நிரந்தரமான வருமானத்தை இழந்து சீர்குலைந்த வாழ்வுடனும், சிதைவடைந்த உள்ளங்களுடனும் இருண்ட வாழ்வில் திணிக்கப்பட்டார்கள்.



விடுதலைப் போராட்டத்தில் தென் தமிழீழ மக்கள் கொடுத்த விலை மிகப் பெரியது. இந்த மக்களுக்கு நேர்ந்த அவலங்கள் துன்ப துயரங்கள் பற்றிய நினைவுகள் பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் மக்கள் மனங்களில் என்றுமே மாறாத வடுக்களாய் சொல்லொணாச் சோக உணர்வுகளாய் இருந்து வருகின்றன என்பதை நானும் ஒரு முறை மீட்டிப் பார்க்கின்றேன்.

மட்டக்களப்பிலிருந்து சுமார் 65கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது புல்லுமலை என்னும் அழகிய கிராமம். இது ஒரு எல்லைக்கிராமம். காடுகளினூடாக அமைக்கப்பட்டிருந்த அழகான தார்வீதி வாகனங்கள் உறுமிக் கொண்டு செல்லக் கூடிய நிலையில் காணப்பட்டிருந்தது. இக் கிராமத்துடன் இணைந்ததாக கோப்பாவெளி, 78ம் கொலனி போன்ற கிராமங்கள் அமையப் பெற்றன.

அன்றொருநாள் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் அதர்ம வெறிபிடித்த அரக்கன் அழிந்து ஒளி பிறந்த கார்த்திகை மாதம், அந்த மாதத்திலே புல்லுமலைக் கிராமத்திற்கு முதன் முதலாக காலடி எடுத்து வைத்தார்கள் இனவெறி பிடித்த சிங்கள இராணுவத்தினர். இவர்களைக் கண்ட மக்கள் அச்சம் நிறைந்து அங்கும் இங்கும் ஓடி சொந்த பந்தங்களை, அயலவர்களை அழைத்து கூட்டம் கூட்டமாய் வீடுகளில் கூடியிருந்தனர்.

கிராமத்தினைச் சுற்றி வளைத்துக் கொண்ட இராணுவ த்தினர் மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியேறாதவாறு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணமிருந்தனர். வீடுகளில் கூட்டம் கூட்டமாய்க் குழுமியிருந்த மக்களை வீடுகளுக்குப் பின்புறமாக அழைத்துச் சென்று தமது கோரத் தாண்டவத்தை அரங்கேற்றினர்.

சுட்டும் வெட்டியும் மக்களைக் கொன்று குவித்தனர். பாதகர்களின் நயவஞ்சகத்தை அறியாத அப்பாவிப் பொதுமக்கள் அல்லோல கல்லோலப்பட்டு கதறிஅழுதனர். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. ஒருசிலர் இறந்தவர்களோடு, இறந்தவர்களாய் இரத்த வெள்ளத்தில் தோய்ந்த நிலையில் கிடந்தார்கள் இவர்களும் இறந்து விட்டார்கள் என போட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

அன்று முதல் அந்தக் கிராமத்தின் அமைதி அழிக்கப்பட்டது. இயல்பு வாழ்க்கை இல்லாமல் போனது. கண்ணெதிரே நடந்த சம்பவங்கள் கதிகலங்க வைத்தன. மக்கள் சிலர் அன்று முதல் கிராமத்தை விட்டு வெளியேறத் தொடங்கினார்கள். இது ஒரு எல்லைக் கிராமம் என்பதனால் மிகவும் இலகுவான முறையில் திடீரென இராணுவ த்தினர் வந்து புகுந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது.

அடுப்புக்கல் மாதிரி இக்கிராமத்தைச் சுற்றி மூன்று பக்கமும் சிங்களவர்கள் வளைத்திருக்கின்றார்கள். கொஸ்கொல்ல, மங்கலோயா, தம்பட்டிய என்ற இராணுவ முகாமுள்ள கிராமமும் புல்லுமலையின் மூன்று பக்கமும் காணப்படுகின்றன.

**தருவது எம்.யுவராஜ்**

இதனால் முகாமிலிருந்து அடிக்கடி இராணுவம் ஊருக்குள் புகுவதும், மக்களை கைது செய்வதும் கொல்லப்படுவதும், பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதுமாய் இருந்தது. எல்லைக் கிராமம் என்பதனால் இராணுவத்தினர் கையில் பிடிபட்டவர்கள் உயிருடன் திரும்பி வந்ததே கிடையாது. இவ்வாறு இவர்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து காணப்பட்டிருந்தன.

1988ம் ஆண்டு மார்கழி மாதம் அக்கிராமத்திலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பா பூசை நடந்து கொண்டிருந்தது. ஆண்டவனின் சந்நிதானத்தில் அடியார்கள் திருவெம்பா நோன்பினை அனுஸ்டித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென கிராமத்தின் உட்புகுந்த ''புத்தர் வழியில் நித்தம் திகழும்'' புதல்வர்கள் இளைஞர் பலரைக் கைது செய்து இழுத்துச் சென்றனர். 21இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் சொந்த பந்தங்கள் கதறியழ கண்மூடித்தனமாக கட்டி இழுத்துச் செல்லப்பட்டனர்.



தொடரும்.....

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 24-01-2004 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-28**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -28

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ |
| | ■ | 5 | | | |
| 6 | 7 | | | | ■ |
| 8 | | | ■ | 9 | 10 |
| 11 | | | 12 | ■ | |
| | | ■ | 13 | 14 | |
| | ■ | 15 | | | |
| ■ | 16 | | | ■ | |

**இடமிருந்து வலம்**

01. கலைப்பிரிவு உயர்தர மாணவர்களுக்கு இது ஒரு பாடம். குறுக்கு வழியில் இலாபம் தேட இதனைப் பயன்படுத்துவோரும் உண்டு.
05. சோளனைப் போன்று பொத்தி தள்ளும் ஒரு தானியம் (குழம்பியுள்ளது)
06. 'அலுமாரி' என்பதற்குரிய சரியான தமிழ்ச் சொல். (குழம்பியுள்ளது)
08. கடவுள் (குழம்பியுள்ளது)
09. பலவீனத்தின் எதிரி. முதல் எழுத்தை இழந்துள்ளது.
11. வடபுலத்தில் மனிதப் புதைகுழி இருந்த இடம் (திரும்பியுள்ளது)
13. நாய்க்கு அனேகமானோர் வைக்கும் செல்லப் பெயர் (குழம்பியுள்ளது)
15. வஞ்சகம்
16. வாழை இனங்களில் ஒன்று. தான் விரும்பும் பெண்ணை சிலர் தவறாக இப்படியும் எழுத்துப் பிழைவிட்டு எழுதி விடுவர்.

**மேலிருந்து கீழ்**

01. குறித்த ஒரு காரியத்தில் அல்லது இலட்சியத்தில் தன்னை முழுதாக ஒப்புக் கொடுத்துப் பாடுபடும் தன்மையை இப்படிச் சொல்லாம்.
02. அழகை இப்படியும் சொல்லலாம்.
03. உடற்பயிற்சியில் ஈடுபடுவோர் காலையில் உண்ணும் தானியம். பொங்கலுக்கும் சேர்க்கப்படும் (குழம்பியுள்ளது)
04. வீடு. (குழம்பியுள்ளது)
07. இதுவும் ஒருவகை தோடு
10. அறையில் ஆடிய பின்தான் இதில் ஆட வேண்டும் என்பார்கள் (தலைகீழ்)
12. உப்பாற்றில் இருக்கும் மீன்வகை ஒன்று. செல்வன் மீனின் வடிவை உடையது. ஆனால் சற்றுப் பெரியது.
14. பின் கழுத்து. இறுதி எழுத்தை இழந்து நிற்கின்றது.
15. பூட்டிய இதனை உடைத்து திருடும் திருடரும் உண்டு. இறுதி எழுத்தை இழந்திருக்கின்றது.

## குறுக்கெழுத்துப் போட்டி 26ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தசாப்தம்
05. கலை.
06. கபடி
08. தானம்
09. கம்பம்
11. அப(லை)
12. திருமணம்
14. பொங்கு
16. பொதிகை
17. குடி

**மேலிருந்து கீழ்**

01. தலைக்கணம்
02. சாகரம்
03. தகனம்
04, தாபம்
07. படிகம்
10. பத்திரிகை
11. அணங்கு
13. மறதி
15. பொடி

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**வி.யசோதரன்**
**விளாவெட்டுவான்**
**நாவற்காடு.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. ந.ஜினோஜிகா, வீரபத்திரன் கோயில் வீதி, காரைதீவு- 03.
02. த.கோமதி, முருகன்ஆலய வீதி, செட்டிபாளையம்.
03. சி.சிவதர்சினி, வீ.சி.றோட், பழுகாமம்- 01
04. ச. பிருத்திகா, பழைய பொலிஸ் வீதி, எருவில்.
05. க. சந்திரகலா, பழைய கல்முனை வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.
06. நா. சிவலிங்கம், எம்.ஓ.எச்.விடுதி ஒழுங்கை, கல்முனை.
07. இ.சுவேதன், கடற்கரைவீதி, ஒந்தாச்சிமடம்.
08. கா.ஜெகதீஸ்வரன், புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
09. செ.ததீஸ்குமார், தரம்- 12கலை, மட்/அரசடித்தீவு.வி.ம.வி.
10. சா. விவேகானந்தன், ''ஸ்ரீரங்கம்'' கடற்கரை வீதி, திருக்கோவில்.

# தென்தமிழீழ அபிவிருத்தி நோக்கிய செப்பனிடல்கள்

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திற்கு தனி இடம் உண்டு. அது எப்படித் தெரியுமா? தமிழீழத்தில் அனைத்துச் சமர்களிலும் பங்கெடுத்த பெருமை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் போராளிகளை மட்டுமே சாரும். அது மட்டுமல்ல வன்னிச் சமரில் முக்கிய சண்டைகளில் ஒன்றாகக் கருதப்படும் ஜெயசிக்குறு சமரில் ஜெயந்தன் படையணியின் சாதனை அளப்பரியது. தேசியத் தலைவரின் தூர நோக்கு செயற்பாடுகளும், அவரின் ஆற்றல் மிகு போர்திறனும் இன்று சர்வதேசமே திகைக்கும் வண்ணம் வியாபித்துள்ளது.

தேசியத் தலைவரின் ஆணையை செவ்வனே செயல்வடிவம் கொடுத்த ஜெயந்தன் படையணியின் பங்கை எவரும் மறுக்க முடியாது,

''எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்"என்ற தாரக மந்திரத்தை நிரூபித்துக் காட்டிய ஜெயந்தன் படையணி இன்றும் வன்னி நிலப்பரப்பில் தேசியத்தலைவரின் ஆணையுடன் காலூன்றியுள்ளது.

ஜெயந்தன் படையணியின் தளபதி, போராளிகள் அனைவருமே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் போராளிகள் என்பதைக் கூறும் போது இந்த வீரம் விளைநிலம் பூரிப்படைகின்றது அல்லவா?


இந்த நிலத்தின் அவலங்களை இல்லாமல் செய்து அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டிய பணியில் பொறுப்போடு நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய தருணம் இதுதான்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் அபிவிருத்திப் பணியானது மந்த கதியில் ஒரு நிறைவான தூர நோக்குத் திட்டங்கள் இன்றி இருப்பதற்கு யார் காரணம்? இங்குள்ள புத்தி ஜீவிகள் அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் எல்லோருமே தமது மனச்சாட்சியைத் தொட்டு இதற்குப் பதில் கூற வேண்டும்,

ஆண்டுகள் கடக்கின்றன, ஆன தொன்றும் காணாத நிலையில்தான் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் காட்சியளிக்கின்றன.

இன்று யுத்தம் ஓய்ந்த வேளையில் கூட தென்தமிழீழம் அபிவிருத்தியால் தொட்டுப்பார்க்காத இடமாகவே உள்ளது.

பிறந்திருக்கும் 2004ம் ஆண்டில் தென்தமிழீழத்தில் அபிவிருத்திப் பணிகள் செம்மையாக இடம் பெற வேண்டுமானால் இங்குள்ள அரச அதிகாரிகள், மற்றும் துறைசார்ந்தவர்கள் அனைவருமே விழிப்புடனும் விவேகத்துடனும், திடசங்கற்பத்துடனும், திறந்த



மனதுடனும், பற்றுதலுடனும், ஒழுக்கம் மிக்க நிர்வாகத்துடனும், ஒற்றுமையுடனும் சகல காரியங்களையும் முன்னெடுக்கும் போதுதான் வெற்றி நிட்சயம்.

இதனைக் கருத்தில் கொண்டு கடந்த ஜனவரி 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறையினரால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள கூட்டுத்தாபன அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி அக்கறையாளர்கள் என சுமார் நாநூறு பேரைக் கரடியனாறு தேனகத்தில் அழைத்து ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கைப் பெறுமதி மிக்கதாய் நடத்தினர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலின் போது பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த சிறப்புத் தளபதி



த.ரமேஸ் பெறுமதிமிக்க உண்மைக்கருத்துக்களை உளப்பூர்வமாக ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முக்கிய துறைசார் பொறுப்பாளர்களான துணை அரசியல் பொறுப்பாளர் வே.கிருஷன், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கி.நிஷாம், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தளபதி பிரபா, நிதித்துறைப் பொறுப்பாளர் குகனேசன், குடும்பி மலைக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெயா, மாவடி முன்மாரிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் சுதா, நிதர்சனப் பொறுப்பாளர் ரஜீவன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வாவா துணைப்பொறுப்பாளர் குயிலின்பன், மட்டுநகர் அரசியல்ப் பொறுப்பாளர் சேனாதிராசா என முக்கியமானவர்கள் கலந்திருந்தமை இக் கலந்துரையாடலை மேலும் ஒருபடி உயர்த்தியது.

## அரியம்

எந்த ஒரு பிரச்சினையாகிலும் வெளிப்படையாக மனம் திறந்து கதைப்பதன் மூலம் அதற்குச் சிறந்த தீர்வைக் காணமுடியும் என்ற யதார்த்தத்தைச் சிறப்பு தளபதி த. ரமேஸ் எடுத்துக் கூறிய போது இதனைத் தாரக மந்திரமாக சகல அதிகாரிகளும் ஏற்றுக் கொண்டு இந்த வருடம் முதல் கடைப்பிடிக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி வேண்டுகோள் விடுத்தார்.

குறிப்பாக இங்குள்ள அதிகாரிகள் யாவருமே எந்தக் காரியத்தையும் பின்தள்ளிப் போடுதல் அவர்களின் குணநலமாகக் காணப்படுவதாகவும் மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி சுட்டிக் காட்டத் தவறவில்லை.

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில். அந்த வளத்தைப் பயன்படுத்தக் கூடிய உலக நோக்கிற்கு அமைவாகச் செயற்படுத்தக் கூடிய தூரநோக்குத் திட்டங்கள் எதையுமே இங்குள்ள புத்தி ஜீவிகள் ஏன்? கிழக்குப் பல்கலைக்கழக துறைசார் நிபுணர்கள் கூடத் தயாரிக்கவில்லையென்ற ஆதங்கத்தை மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஆணித்தரமாய்ச் சுட்டிக் காட்டிய போது அங்கிருந்த அதிகாரிகளின் மனச்சாட்சியைத் தொட்டுச் சென்றது.

சரியான தகவல்கள் இன்றி தீட்டப்படும் எந்தத் திட்டமும் வெற்றியளிக்காது. இது வரலாற்று உண்மை. எனவே சரியான தகவல்களுடன் நேர்மையான எண்ணங்களுடன், அடுத்த சந்ததியினரின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் ஆக்கபூர்வமான திட்டங்களைத் தயாரித்து அதற்கான செயல்வடிவங்களை வகுக்க வேண்டுமெனவும் அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தமது ஆழ்ந்த கருத்தைப் பறைசாற்றினார்.

நாங்கள் இன்றும் மாணவர்களாகவே உள்ளோம். போரியல் திறனில் மட்டுமே தற்போது வல்லவர்களாக இருக்கின்றோம். ஏனைய திறன்களை உங்களைப் போன்ற அறிஞர்களிடம் இருந்துதான் கற்கின்றோம். எங்களுக்கு வழிகாட்டியாக உள்ள நீங்கள் எமது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்தக் கூடிய செம்மையான ஆக்க பூர்வமான செயற்பாடுகளைச் செயலில் காட்டுங்கள் என சிறப்புத் தளபதி த.ரமேஸ் கூறியபோது கலந்து கொண்ட அதிகாரிகள் கட்டாயம் இந்த வருடம் முன்னேற்றமான பணிகளுக்கு விடுத்திடுவார்கள் என்ற நம்பிக்கை தோன்றியது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மூன்று விதமான நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்து தமிழர்களாகத் தலை நிமிர்த்து வாழ்வதாக திருக்கோயில் ஆசிரியரான எஸ்.விவேகானந்தராசா கண்ணீர் மல்க எடுத்துக் கூறினார்.

அவர் கூறிய மூன்று நெருக்குவாரமும் ஒன்று இராணுவக் கெடுபிடி, இரண்டாவது முஸ்லிம் சமூகத்தின் சில அரசியல்வாதிகளின் போக்கு, மூன்றாவது சிங்களக் குடியேற்ற ஆக்கிரமிப்பு.

இந்த மூன்று நெருங்குவாரங்களையும் தாங்கியுள்ள அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டிய கட்டாயக் கடமை அங்குள்ள அதிகாரிகளுக்கும் சமூகநல விரும்பிகளுக்கும் உள்ளது.

கருத்தரங்கில் கலந்து கொண்ட பெண் ஒருவர் போராட்ட காலத்தில் தமிழ் மாணவர்கள், பிள்ளைகள் நேர காலத்திற்கு வீட்டிற்கு வந்து விடுவார்கள், போர் ஓய்ந்த இவ்வேளையில் தனியார் கல்வி வகுப்பு, சினிமா, களியாட்டம் என அலைந்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன் சமூக சீர்கேடுகளும் இடம் பெறுகின்றன. குறிப்பாக தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நாடகங்களின் பாதிப்பு அவர்களைப் பாதிக்கவே செய்கின்றன என்று மனதில் உள்ளவைகளைப் புட்டு வைத்தார். அந்தப் பெண்ணின் கருத்துக்கள் உண்மையாகவே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது.

> **ஆண்டுகள் கடக்கின்றன, ஆன தொன்றும் காணாத நிலையில்தான் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் காட்சியளிக்கின்றன. இன்று யுத்தம் ஓய்ந்த வேளையில் கூட தென்தமிழீழம் அபிவிருத்தியால் தொட்டுப்பார்க்காத இடமாகவே உள்ளது.**

இவ்வாறு பல தரப்பட்டவர்களின் சொந்த அபிப்பிராயங்கள், மற்றும் அதிதிகளாய்க் கலந்து கொண்டவர்களின் புத்திமதிகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரச அதிகாரிகளின் மனங்களைச் சுத்தப்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

கலந்து கொண்ட அதிகாரிகள், கருத்தைக் கேட்டோம் சென்றோம் என்றில்லாமல் இங்கு கூறப்பட்ட ஆலோசனைகள் இந்த ஆண்டில் செயல்வடிவம் பெறும் போதுதான் இதன் உண்மையான தார்ப்பரியம் தெரியவரும்.

இந்த 2004ம் ஆண்டில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் விழிப்புடன், தூரநோக்கு சிந்தனையுடன், ஒழுக்க நெறியான செயற்பாடுகள் அமைவதற்குச் சகல அதிகாரிகளும் பற்றுதலுடன் சேவை மனப்பாங்குடன் செயலாற்ற வேண்டும் என்பதே எனது கருத்து.

''இங்குள்ள தமிழர் ஒற்றுமை கண்டே எங்கோ மறைவர் எம்பகைவர்"

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

### தந்தை செல்வாவுக்கு அஞ்சலி

(வேறு)

எண்பத்தி நாலுவரை வாழ்வேன்- எங்கள்
இனிய தமிழ் ஈழமதைக் காண்பேன் என்றே
புண்பட்டு நொந்திட்ட தமிழர் நெஞ்சம்
புத்துயிர் பெற்றெழுந்திடவே சொன்ன எந்தை
கண்பட்டு வீழ்ந்திட்டான் தமிழர் வேறு
கதியற்றார் துயருற்றார் கலங்கி நின்றார்
எண்பட்ட யாவரையும் கவருமிந்த
இழிகாலன் கொள்கையது என்னே! என்னே!

(வேறு)

தந்தை செல்வாவைத் தானைத்
தலைவனாய் ஏற்காதோரும்
சிந்தையில் துயரடைந்தார்.
சிங்களர் கூடச் சோர்ந்தார்
மந்திரச் சொல்லால் ஈழ
மக்களைத் தன்பால் ஈர்த்து
விந்தைகள் புரிந்த செம்மல்
விழிகளை மூடிக் கொண்டான்

ஓடியே ஒடுங்கிற்றம்மா
உயிரினைத் தமிழுக்காக
வாடியே கொடுத்த அன்னான்
வண்டமிழ்த் தென்றல் மூச்சு
பாடியே என்ன கண்டோம்
பாடையில் விழ்ந்த அந்த
நீடிய தமிழ் மரத்தின்
நிழலினிக் கிடைக்கப் போமோ?

தொடரும்....

## தவறுகள்!



அறியாத வயதில் நான்
செய்த தவறுகளை விட
அறிந்த வயதில் நான்
அறியாமல் செய்த
தவறுகளே அதிகம்!

நா. விஜயதாஸ்
கருவாஞ்சிகுடி.

## பசுமை காண வேண்டும்!

அமைதி வழியில் பேசி உரிமை
அடைதல் நன்று ஆயினும்
சுமைகளெனவே தோளை முறிக்கும்
சிலுவை இறக்க வேண்டுமே
நமது மண்ணை நாமே ஆளும்
நாளும் மலர வேண்டுமே
எமது தாயின் பசியும் இதனால்
இனிது தணிய வேண்டுமே!

காடு மேவி நிற்கும் ஊர்கள்
கனிந்து குலுங்க வேண்டுமே
வீடு, பள்ளி, கோயில், குளங்கள்
விரைவில் அமைய வேண்டுமே
பாடுபட்டு வாழும் மக்கள்
பசுமை காண வேண்டுமே
கூடித் தமிழர் ஒன்றுபட்டுக்
குறைகள் போக்க வேண்டுமே

நிலாதமிழின்தாசன்

## புத்தாண்டே வருக!



இனிய புத்தாண்டே
இன்னல்கள் தீர்க்க வா!
இன்பத் தமிழ்க் குலத்தை
இன்றே நீ காக்க வா!
இலங்கைத் தீவினிலே
இனி வேண்டாம் போராட்டம்!
கலங்காது மக்களெம்மைக்
காக்க வா புத்தாண்டே!

ப.சுரேஷ்
நாவற்குடா.

## புத்தாண்டே!



புது வாழ்வு
பூத்துக் குலுங்க
புத்தாண்டே வருக!
நித்தமும் வாழ்வில்
நிரந்தர குதூகலம்
நிலைத்திட வருக!
சித்தம் கலங்க வைக்கும்
சீர் கெட்ட யுத்தம்
நிரந்தரமாய் ஓய்வு பெற
நீ வருக புத்தாண்டே!

வி. ரூபினி

## புத்தாண்டில் இணைவோம்!



விடை பெற்ற பழைய ஆண்டை
வெறுப் போடு அனுப்பி வைத்தோம்!
மலர்ந்த இந்தப் புத்தாண்டை
மகிழ்வுடனே வரவேற்போம்!

இனமத பேதமின்றி
இன்பமாய் வாழ்ந்திடுவோம்!
கடந்த காலக் கசப்புணர்வை
கண்ணியமாய் மறந்திடுவோம்!



எல்லோரும் இலங்கைத் தீவில்
இணைந்தொன்று சேர்ந்திடுவோம்!
தொல்லைகளை மறந்து நாமே
சொர்க்கத்தைத் தோற்றுவிப்போம்!

ந.விஜிதா
அரசடித்தீவு

## ஏர்பூட்டி வாழும் மக்கள்!



தேன் சிந்தும் வாழை பலா
செந்நெல் வயல்கள் உண்டு
விருந்தோம்பி வாழவைக்கும்.
வெள்ளை மனம் நிறைய உண்டு
சோளன் குரக்கனுடன் சுவை
மிகுந்த உணவு முண்டு
பால் நெய் தயிருடனே
பண்பான விருந்துண்டு

படுவான் கரையென்னும்
பண்பாட்டுப் பெயருமுண்டு
ஏர்பூட்டி வாழும் மக்கள்
ஏராளம் அங்கே உண்டு

திருமதி.விமலாதேவி
இராமநாதன்
குறுமண்வெளி.

## தாங்கிக் கொள்ளும் தனிமை!

உறவுகள் தேடி ஊர்வலம் போக
இது ஒன்றும் தர்ம தேசம் அல்ல
தோழா!

உன்னைப் போல் நானும்- தேடித் தேடி,
இன்று ஊமையாகிப்
போனேன்!



பணத்திற்கு... பகட்டுக்குமாய்
பந்தம் கொள்ளும் பூமியில்
பாசம் கூட வெறும் வேஷமாய்த் தோன்றும்..

இன்னல்கள் வந்து -நாம்
இடரிடும் வேளை.....
வேதனைக்குள்ளே -நாம்

வேகிடும் போதும்.....
தனிமை தானே நமைத் தாங்கிக்
கொள்ளும்.

சு.சுதாகினி
கி.ப.கழகம்.



## சோர்ந்து போகிறது!



பூத்துக் குலுங்கிய
எங்கள் வாழ்வு
புயல் கொண்ட பூவாய்
சேற்றில் விழுந்து
செத்துப் போவதைப்
பார்க்கும் போதுதான் சோறுண்டும்
சோர்ந்து போகிறது
உடலும்.மனமும்!

லை.மேகராஜா
[illegible]ண்மடு.

# தேடலும் பகிர்வும் 21

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ஆவணப்படுத்தலின் முக்கியத்துவத்தைப் பல்வேறு இடங்களிலும், பல்வேறு வேளைகளிலும், பல் நோக்குக் கொண்டோர் உணர்த்தி வந்திருக்கிறார்கள். போராட்டக் களப்பதிவுகள் காத்திரமான முறையில் வெளிவந்தே இருக்கின்றன. தென் தமிழீழத்தில் இருந்து வெளியான இத்தகைய நூலொன்றை அண்மையில் படிக்கக் கிடைத்தது. சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற வரலாற்றுத் தாக்குதல் பற்றிய படைப்பே அது. மூத்த போராளி க.குலேந்திரன் (அங்கிள்) அவர்கள் எழுதிய ''மறவழித் திலகங்கள்" என்பதே அந்த நூலாகும். அதிலிருந்து சில கருத்துக்களை நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம்.

''புளுக்குணாவி முகாம் தாக்குதலானது தமிழீழ போராட்ட வரலாற்றில் பதியப்பட்ட ஒரு சமராகும். ஏனெனில், தமிழீழத்தில் இரண்டாவது முறை சிங்களப் படையின் முகாமை அழித்து ஆட்ரிலறி கைப்பற்றப்பட்ட முகாம் இது என்பதால் இச்சமர் பதியப்பட்டுள்ளது" என்று அகவுரையில் குறிப்பிடுகின்றார் மூத்த தளபதி கேணல் வி.கருணாஅம்மான் அவர்கள் ''போராட்டம் நிறைவு பெறலாம். போராளிகள் மண்ணில் உரமாகலாம் துயிலும் இல்லங்கள் அவர்களின் தூய வீரத்திற்கும், தியாகத்திற்கும் சாட்சியாகலாம். ஆனால் வரலாற்று ஏடுகள் காலத்தால் அழியாத காவியங்கள்" என்று ஆவணப்படுத்தலின் தேவைப்பாட்டைத் தெளிவாக்குகின்றார் சிறப்புத் தளபதி த.ரமேஸ் அவர்கள்.

மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் அவர்கள் ''மடிவதும் மறைவதும் இயற்கை. ஆனால் மடிகின்றவர்களை மனதிலே வைத்து மறையாமல் பார்க்கின்ற பெருமை நூல்களுக்கு உண்டு. அத்தகைய வரலாற்று நூலே இந்த மறவழித் திலகங்கள்" என்று வாழ்துரைத்துள்ளார்.

மாவடி முன்மாரிக் கோட்டத் தளபதி எ.ராம் அவர்கள், ''போராட்டங்கள் ஆயிரம் எழலாம். ஆனால், அந்தப் போராட்டங்களை எழுத்துருவில்நாளைய சந்ததி காணும் போது தான் அந்த வரலாற்றின் பெறுமானம் பெறுமதியாகும்" என்று இந் நூலில் கூறியிருக்கிறார்.

''இப் போராட்டத்தில் போராடிய போராளிகளின் நினைவுகள் நெஞ்சில் எழுகிறது. வாழ்வைத் துறந்து, கல்வியைத் துறந்து, கனதியான குடும்பங்களைத் துறந்து, அன்னைத் தமிழ் மண்ணை மீட்கும் பணியில் தன்னை அர்பணித்த வாழ்வு ஒன்றையே வசந்தமாக்கிக் கொண்ட அந்த உயர்ந்த ஜீவன்களை நெஞ்சார நினைத்து அவர்களுக்கு காலத்தால் அழியாத ஒரு பணியைச் செய்ய வேண்டும் என்ற உந்தலே இந்த மறவழித் திலகங்கள்" என்கிறார் இதன் ஆசிரியர் குலேந்திரன் அங்கிள். அவர்கள். இவரின் நல் முயற்சி தொடரவும், போராட்ட வெளியீடுகள் வெளிவரவும் வாழ்த்தி வரவேற்போம்.

விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் வெளியிடப்பட்ட ''போர்ப்பறை" ஒலிப்பதிவு நாடாவில் இடம் பெற்ற முல்லைச் செல்வனின் பாடல்களில் ஒன்றை நன்றியுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

''என் அன்னை பூமியே ஏனிந்தச் சோகம்
இதயங்கள் மாறவே யார் செய்த பாவம்
சமராடும் பூமியில் சில வேங்கைகள்
உயிராயுதங்களாய் உன் செல்வங்கள்
வேடிக்கை பார்க்குதே சில உள்ளங்கள்- இது
வாடிக்கை யானதால் துயர் கோலங்கள்
(என்...)

பாச மென்ற கூட்டுக்குள்ளே
பதுங்கி வாழலாமா
தேசம் என்ற செல்வம் காக்க
மறந்து போகலாமா
ஆசை இங்கு ஆருக்கில்லை
அனுபவிக்க தேசம் இல்லை
அழிக்கவந்த ராணுவத்தை
துரத்திடத்தான் மனசு வரலை
வேடிக்கை பார்க்குதே சில உள்ளங்கள் -இது
வாடிக்கையானதால் துயர் கோலங்கள்
(என்...)

எதிரி ஆடும் போரால் மண்ணில்
குருதி ஓடும் வேளை
எறிகணைகள் வீசி எங்கள்
உயிர் பறிக்கும் நாளை
பேதையாக வாழலாமா பாதை மாறிப் போகலாமா
பிறந்த மண்ணின் உரிமைகாக்கும் பெரும்பணியை மறக்கலாமா
வேடிக்கை பார்க்குதே சில உள்ளங்கள் -இது
வாடிக்கையானதால் துயர் கோலங்கள்
(என்...)

த.வசந்

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையில் இருந்து.

''தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே எமது பலம். அதர்மமும், பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம். ஏனெனில், என்றும் அழியாத தர்மம் எமக்குப் பக்க பலமாக இருக்கிறது." 1985 செம்டெம்பரில் தலைவர் அவர்கள், ''திம்பு பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தது ஏன்?" என்று தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையில் இருந்து நன்றியுடன் இக் கருத்து பகிரப்படுகின்றது.




# துணைப்படை வீரர் மேஜர் மயில்குஞ்சு

பதினாறு ஆண்டுகளுக்கு மேலாய், எமது விடுதலைப்பயணத்தில் விழிப்போடு இருந்து வழிகாட்டிய வீரன் விழி மூடிக் கொண்டான். மரணத்தின் பின் மாவீரனாய் எங்கள் தலைவனால் கௌரவிக்கப்பட்ட மாமனிதன் என்ற பெருமையோடு விழிமூடிக் கொண்ட குஞ்சண்ணனுக்கு மணலாற்று மண்ணில் பெரும் சரித்திரமொன்று உண்டு. அந்தப் பெரும் சரித்திரத்தில் சில துளிகளை மட்டுமே என் பேனாவுக்கு எழுத வலுவுண்டு.

வடதமிழீழத்திலிருந்து தென்தமிழீழத்துக்கும், தென் தமிழீழத்திலிருந்து வடதமிழீழத்திற்கும் எமது போராளிகளின் பெரும் படையணிகள் அவசர அவசரமாக நகர வேண்டிய காலங்களிலெல்லாம் ‘டேய் மயில்குஞ்ச ஏத்திவா’ என்று லெப்.கேணல். அன்பு சொல்லிய மறுகணமே அவருடைய மொட்டை ஜீப் வண்டி காற்றாய்ப் பறந்து வரும். இராஜ மரியாதையோடு ஏற்றி வரும் ஜீப் வண்டியின் முன் இருக்கையில், கம்பீரமாய் அமர்ந்திருந்து வரும் அன்றைய நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

அன்றென்ன இன்றுவரை இதே மரியாதை தானிருந்தது. வட தமிழீழத்துக்கும், தென்தமிழீழத்துக்கும் இடையிலே எத்தனை பெருங்காடுகள் இருக்கின்றனவோ அத்தனை காடுகளும் இவனுக்கு அத்துப்படி. திக்குத் தெரியாத இந்தக் காடுகளில் ஒவ்வொரு அங்குலமும் இவன் காலடி கண்டவைதான். மணலாற்றுக் காடுகளுக்கோ, திருமலை, மட்டக்களப்புக் காடுகளுக்கோ பேசும் சக்தி இருக்குமாயின் குஞ்சண்ணனின் கதையை கண்ணீர் சிந்தச் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

மயில்குஞ்சண்ணனின் இழப்பை ஈடுசெய்யமுடியாது. நூறு இருநூறில்லை. ஆயிரக்கணக்கான போராளிகளையும் ஆளின்ர கையில நம்பிக்கையோட ஒப்படைப்பம். போகவேண்டிய இடத்தை மட்டுமே சொல்லுவம். எதால்போனால் எப்பிடிப் போனால் பாதுகாப்பாய்ப் போய்ச் சேரலாம் என்பதெல்லாம் அவனுடைய திட்டந்தான். காட்டு மரங்களின் இனம், செறிவு, முதிர்வு இவற்றைக் கொண்டே எந்த இடத்தில் நிக்கிறம் என்று சொல்லுவான். இலை உதிரும் சத்தம், சுள்ளி முறியும் சத்தம், சருகு சரசரக்கும் சத்தம், பறவைகளின் பார்வை, அவை எழுப்பும் ஒலி, மிருகங்களின் அலறல், எல்லாவற்றுக்கும் அவன் சரியான காரணத்தைச் சொல்லுவான். எதிரியின் மூச்சு, அவன் மணம் எல்லாம் உடனே உணர்ந்து விடும் வல்லமை இவனிடமிருந்தது. படைப்பில் இவன் வித்தியாசமான பிறப்பாய் படைக்கப்பட்டிருக்கிறான். ‘காடு சம்பந்தமான முழு அறிவையும்ஆளை வச்சுக்கொண்டே எங்கடை பொடியன்களுக்குப் படிப்பிக்க வேணுமடாப்பா’ என்று தலைவர் கூடச் சொன்னவர். நாங்கள் தான் கவலையீனமாய் இருந்திட்டம். மணலாற்றுக் காட்டில ஆளில்லாம நாங்கள் இறங்கேல்ல. கூட்டிக் கொண்டு போக்கேக்க ‘இதில நில்லுங்கோ’ எண்டால் அதில நிப்பம். ‘இந்த இடத்தில பொய்சன் போடுங்கோ’ எண்டால் அதிலதான் போடுவம். போட்டால் போட்டதுதான். நம்பி இருக்கலாம். அதால ஆமி வருவானெண்டு ஒரு அபார அனுபவசக்தி இவனிட்ட இருக்குது.

றெக்கி எடுக்கிறதுக்கு இவனைப் போல இன்னுமொராள் புதிதாய்த்தான் பிறக்கோணும். ஆள் பதுங்கி இருந்தால் ஒரு சின்ன அசைவும் கூட இருக்காது. ஆமி அருகால வாறானெண்டால் அப்பிடியே ஒடுங்கி சுருண்டு சின்ன உருவமாய் வந்திடுவான். கடைசி வரையிலும் ஆமியால கண்டு பிடிக்க முடியாது. இப்பிடி ஒடுங்கி சுருளும் சக்தியை எவரிட்டேயும் நான் இதுவரை காணேல்லை. ஆள் ஒளிச்சா கண்டுபிடிக்கேலாது. அதாலதான் சின்னனிலே இருந்து மயில்குஞ்செண்டு எல்லாரும் அழைத்தார்கள். நெருக்கடியான நேரங்களில் இவரை இழக்காமலிருந்த நாங்கள் இப்ப ஆளை இழந்திருக்கவே கூடாது. மணலாற்றுச் சிங்களவரும், ஆமியும் கேள்விப்பட்டால் பாட்டி வைச்சுக் கூத்தாடுவாங்கள். பத்துப் பதினஞ்சு வருசமாய் முயற்சி செய்தும் கொல்லேலாமல் போன புலி வீரச்சாவடைஞ்சிட்டுதெனக் கேள்விப்பட்டதும் துள்ளிக் குதிச்சிருப்பாங்க.

எதைச் சொன்னாலும் மனம் ஆறாது. மயில்குஞ்சை இழந்தது பெரும் இழப்பு என்று மணலாற்றுக் காட்டில் முன்னர் தளபதியாக இருந்த பாண்டியன் என்ற போராளி சொல்லிக் கொண்டிருந்தபோது அவனது விழிகள் நிரம்பியிருந்தன.

குஞ்சண்ணனை இழந்தது பெரிய இழப்பு. குப்பி கட்டாட்டியும் அவனைப் பொதுமகனாய் எந்தப் போராளியும் பார்த்தது கிடையாது. எந்தப் போராளியைக் கேட்டாலும் மேஜர் தரத்துக்குக் கீழ் அவரைச் சொல்லமாட்டார்கள். எடுத்த எடுப்பிலேயே மேஜர் எனச் சொல்லத் தகுதியானவர். அண்ணை சரியான கௌரவத்தை கொடுத்திருந்தார். அவரின்ர மனதில இடம் பிடிச்ச மாபெரும் வீரன் என மூத்த தளபதி பால்ராஜ் அண்ணன் கூறும்போது அவனது குரல் தளதளத்தது.

‘மயில்குஞ்சுக்கு இரண்டு பக்கங்கள் இருக்குது மாஸ்ரர். ஒண்டு குடும்பப் பக்கம், மற்றது இயக்கப் பக்கம். குடும்பப் பக்கத்தில ஆளிட்ட நிறையப் பலவீனங்கள் கிடக்குது. இயக்கப் பக்கம் அதீத பலங் கொண்டது. பயிற்சி இல்லாமலே இயக்கக் கட்டுப்பாடுகளில்லாமலே இயக்கத்தில இருந்த பற்று என்ற உணர்வைப் பெரிசாய்த் தாக்கியது. புல் மோட்டைல ஒருதடவை ஒன்பது பேரோட றெக்கிக்குப் போயிருந்தான். றெக்கியெல்லாம் பாத்திட்டு ஒரு இடத்தில வந்து குளிச்சிருக்கினம். பதுங்கியிருந்த ஆமி சுடத்தொடங்கினான். மேஜர். கருணா அதில வீரச்சாவடைஞ்சிட்டான். குளிச்சிக் கொண்டிருந்த மயில்குஞ்சுக்கு கையில காயம். குளிச்ச உடுப்போட நீந்தி ஆத்தால ஆள் வந்து சேர்ந்தது. காயப்பட்டதுதான் ஆள் பயந்து போய் வீட்ட போய்ச் சேந்திடுமென நினைச்சன். ‘அண்ணை உவனை விடக்கூடா தண்ண. உவனுக்கு உடனேயே அடிக்கோ ணும்’ எண்டு ஆவேசத்தில நிண்டுது. உடனேயே குறூப்பொண்டு வெளிக்கிட்டுது. ரெண்டு மூண்டு நாளுக்குள்ளேயே புல்மோட்டை ரோட்டில வச்சு ரோந்து வந்த ஆமிக்கு அடி நடந்தது. அதில ஒரு ஆமிதான் தப்பி ஓடினான். மிச்சம் இருபத்தெட் டுப்பேரையும் அடிச்சு றைபிள்களையும் எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

இது மாதிரி இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. றெஜியைக் கேட்டால் விபரமாகச் சொல்வான். றெஜிக்கு ஆளெண்டால் போதும். ஆள் வீரச்சாவெண்டு கேள்விப்பட்டால் அழுவான். இவரோட அவனுக்கு நல்ல ஒட்டு. ஒருநாள் ஏழுபேரோட றெக்கிக்குப் போயிருந்தான். ஆமி பதுங்கியிருந்து அடிச்சு




ரெண்டு பேர் வீரச்சாவு. றைபிளும் பறி போட்டுது. றெஜியைப் பொடியள் பகிடி பண்ணினாங்கள். றெஜி அழுது போட்டான். மயில் குஞ்சுதான் அவனை ‘அழாதேடாப்பா ரெண்டு மூண்டு நாளைக்குள்ள வெண்டு தரலாம்’ எனத் தேற்றினான்.சொன்ன மாதிரியே ஆமிக்கு அடிச்சு பன்னிரெண்டு பேரைக் கொன்று றைபிளும் எடுத்துக் கொண்டு வந்தாங்கள். றெஜியோட இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு நாள் ஆமிக்கு அடிக்க ஒப்பிக்கு மரத்தில ரெண்டு பேரும் ஏறியிருக்கினம். இவையளுக்குத் தெரியாமல் ஆமி மரத்துக்குக் கீழால போயிருக்கிறான். போகேக்க கண்டு அடிக்க வெளிக்கிட்டுட்டான். உடனே றெஜி குண்டைக் கழட்டி கீழே போட்டிட்டு வெடிச்ச கையோட இறங்கி ஓடியிருக்கிறான். மரத்துக்குக் கீழே ரெண்டு றைபிள் கொழுவியிருந்தது. றைபிளுக்கும் மயில்குஞ்சுக்கும் என்ன நடந்தது என்பது தெரியாதென றெஜி நினைச்சிக் கொண்டு சென்றி போட்ட இடத்துக்குப் போய்ச்சேர அங்க ரெண்டு றைபிளோடையும் ஆள் நிக்குது. எவ்வளவு வேகமாய் எப்படி வந்து சேர்ந்ததெண்டு தெரியாது. என ஆச்சரியத்தோடு கூறினான். இப்படியெல்லாம் நிறைய நடந்திருக்குது, இன்னும் றெஜிக்கு தெரியப்படுத்தேல்ல. கேட்டல் தாங்கமாட்டான். என மூத்த தளபதி சொர்ணம் வேதனையோடு கூறினார்.

மட்டக்களப்பில இருந்து எங்கட ரீமைக் கொண்டு வாறதும், கொண்டு போறதும் ஆள்தான் மாஸ்ரர். ஆமியிலே மாட்டமாட்டான். ஆளை நம்பித்தான் எவ்வளவு பேரையும் அனுப்புறனான். மட்டு. அம்பாறை ரீமில ஆளைத் தெரியாதவர்களில்லை. பெரிய இழப்பு, நினைக்க மனதுக்கு கஸ்ரமாயிருக்கு’ என்று மூத்த தளபதி கருணா துயரத்துடன் கூறினார். மயில்குஞ்சு தனிய நடத்திய தாக்குதல்கள் சிலவற்றை நினைத்துப் பார்த்தேன். கோட்டைக் கேணியில உழவியந்திரத்தில வந்த ஆமிக்கு சக்கை அமத்தி பதினேழுக்கு மேல் ஆமியைக் கொன்றான். இன்னொருநாள் ஆத்தைக் கடக்க வந்த அஞ்சு ஆமியைச் சுட்டுப் போட்டு றைபிளையும் எடுத்துக் கொண்டு வந்தான். தான் தனிய என்ற பயம் அவனிடம் ஒரு போதுமே இருந்ததில்லை.

மண்கிண்டி இராணுவ முகாம் அழிப்புக்காக பிரதான கர்த்தா இவன் தான். முகாமுக்குள் ஒவ்வொருநாளும். புகுந்து அங்குள்ள நிலைகளை அக்கு வேறு ஆணி வேறாய் அறிந்து வந்தான். மணலாற்றக் காட்டிலுள்ள முகாமொன்றினுள் புகுந்து அவனது சமையலறைக்குள்ளே சாப்பாடு போட்டுச் சாப்பிட்டு விட்டு வந்தநாள் ஒன்று கூட உண்டு. நம்ப முடியுமா? நம்ப முடியாத சாதனைகளைத்தான் நாள் முழுவதும் செய்தான்.

1995ம் ஆண்டு மணலாற்றில் மூன்று இராணுவ முகாம்களைத் தாக்கச் சென்று காட்டிக் கொடுத்த துரோகிகளால் எம் போராளிகளை இழந்து தாங்க முடியாது அழுத அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். எமது வேவுப்புலி வீரர்களை அந்த முகாமுக்குள் அழைத்துச் சென்று சல்லடைபோட்டு முழுமையான வெற்றிக்கு வழிகாட்டிவிட்டு சண்டைக்காக எமது போராளிகளை அழைத்துச் சென்றவன். துரோகிகளின் காட்டிக் கொடுப்பில் தாக்குதல் வெற்றியடையாமல் போனபோது எமது மகளிர் படைப் பிரிவின் ஓரணி வழிமாறி சிங்களக் குடியேற்றங்களுக்கு நடுவே சிறிய காட்டுத் துண்டொன்றுக்குள் பதுங்கியிருந்தனர். வாக்கி டோக்கி தொடர்பிருந்தும் அவர்கள் இருக்கின்ற இடத்தை எவராலும் புரிய முடியவில்லை.

*தொடர்ச்சி19ம் பக்கம்.....*



(✍ து.கோமளமைந்தன்)

## “தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்”

318.தமிழீழக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் மகளிர் படையணி எப்போது தோற்றம் பெற்றது?
1993.03.01

319. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தன்னுடைய முதலாவது ஊடக நேர்காணலில் புலிச்சின்னமானது கெரில்லா யுத்த முறையைக் குறித்து நிற்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அதில் புலிச்சின்னமானது எதனை உருவகப்படுத்துவதாகக் கூறியிருந்தார்?
தமிழ்த் தேசியத்தின் புத்தெழுச்சியை

320. 1991ஆகஸ்ட் பிற்பகுதியில் ‘‘விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்” என்ற பெயருடன் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கடற் போர்ச் சேனை தேசியத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டது. கடற்புலிகளின் மகுட வாக்கியம்” என்ன?
‘‘கடலிலே காவியம் படைப்போம்.”

321. இலங்கைத்தீவின் மொத்தக் கரையோர நீளம் தீவுகள், குடாக்கள் உட்பட 1,920 கிலோமீற்றர்களாகும். இதில் தமிழீழத் தாயக ஆள்புலத்தின் கரையோரம் அண்ணளவாக எவ்வளவு என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்?
1,200 கிலோ மீற்றர்

322. 1993இல் பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் ‘‘தவளை நடவடிக்கை”யில் சிங்களக் கடற்படையினரின் நவீன நீரூந்து விசைப்படகு (வோட்டர் ஜெற்) ஒன்றைக் கைப்பற்றி ஓடிவந்து சாதனை படைத்த கடற்புலிகளின் மகளிர் படையணித் துணைத் தளபதி யார்?
லெப்.கேணல். பாமா (சியாமளா சண்முகசுந்தரம்), அல்வாய், யாழ். (12.11.1993இல் வீரச்சாவு)

323. 2002 செப்டெம்பர் 28, 29, 30களில் கிளிநொச்சியில் ‘‘தமிழீழப் பெண்கள் எழுச்சி மாநாடு” ஒன்று நிகழ்த்தப்பட்டது. மட்டக்களப்பில் ‘‘தேசியப் பெண்கள் மாநாடு” மட்டு- அம்பாறை மாவட்டப் பெண்கள் சமூக மேம்பாட்டு அமைப்பால் எப்போது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது?
2003ஏப்ரல் 27, 28, 29களில்

324. பன்னிரெண்டு தமிழீழப் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகளின் தொகுப்பொன்று கப்டன் வானதி வெளியீட்டகத்தின் 2வது வெளியீடாக 2002 பங்குனியில் வெளியிடப்பட்டது. கப்டன் கஸ்தூரிக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்ட தமிழீழப் பெண்களின் சிறுகதைத் தொகுப்பின் பெயர் என்ன?
‘‘கனவுக்கு வெளியேயான உலகு”

325. யாழ். குடாநாட்டை முற்றுகையிடும் நோக்கில், 1991.10.17 அன்று, காரைநகரிலிருந்து பூநகரி வரையான கரையோரப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட சிங்களப்படையினரின் படை நடவடிக்கை எது?
வலம்புரி நடவடிக்கை

தொடரும்...

# காத்திரன் பதில்

✎. **காத்திரனே! பொலிசாரை மனித நேயம் உள்ளவராக மாற்றப் போவதாக புதிய பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். அப்படியானால் இவ்வளவு காலமும் சிறிலங்கா பொலிசார் என்ன நேயத்துடன் கடமை புரிந்தனர்?**

*ந.நிரஞ்சன், அரசடித்தீவு*

✍. சிறிலங்கா அரசியல் வாதிகளுக்கு நரி நேயமும் பொலிசாருக்கு குரங்கு நேயமும் இருக்கும் போது எப்படி மனித நேயம் இனியும் வரும்.

☆☆☆☆

✎. **காத்திரனே! இலக்கிய காதலுக்கும் இன்றைய காதலுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை என்ன?**

*க.சுதர்சன், செங்கலடி.*

✍. இரண்டு காதலுக்கும் இடைத்தரகர்கள் இடையில் இருப்பது தான் ஒற்றுமை.

☆☆☆☆

✎. **காத்திரனே! உங்களிடம் கணவர்மார்களைப் பற்றிக் கேள்வி கேட்கும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*என்.கண்ணன், அரசையூர்*

✍. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புரிஷன் என்று நினையாத இறைவன் கொடுத்த வரத்தில் அமைந்த பெண்கள்.

☆☆☆☆

✎. **காத்திரனே! தற்போது பெண்களைப் பார்த்தால் பெரிய நாகரிக உடையில் கலக்குகிறார்கள். இவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?**

*கா.தயாழினி -*
*மட்டக்களப்பு*

✍. உடை தான் நாகரிகம் என எண்ணும் இவ்வாறான பெண்களின் நடை தவறாமல் இருந்தால் சரி.

☆☆☆☆

✎. **காத்திரனே! பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறுவது போன்று வவுனதீவு சோதனைச் சாவடியில் மீண்டும் கெடுபிடிகள் உள்ளதே?**

*வி.கேதீஸ், கன்னன்குடா-02*

✍. இதற்கு வழி பலத்தைக் கூட்டி, வளத்தைப் பெருக்கி நிலத்தை ஆழ்வது தான்.

☆☆☆☆

✎. **என் இனிய காத்திரனே! நகர்ப்புறங்களில் வாழும் சில மக்கள் தங்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் சம்பந்தம் இல்லாதது போல் நடந்து கொள்கிறார்களே ஏன்?**

*தங்கராசா-நாகேந்திரன் பாரதி வீதி*
*கோயில் போரதீவு*

✍. தமிழனாய்ப் பிறந்த அனைவரும் விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தமாகும் போது தான் உண்மையான சமாதானம் வரும் என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

☆☆☆☆

✎. **பெண்களுக்கு மீசை முளைக்காதது ஏன் காத்திரனே?**

*ஜெ.குமார், மட்டுநகர்*

✍. மீசை முளைத்தால் ஆசை இல்லாமல் போய் விடும் அது தான்.

☆☆☆☆

✎. **எமது மண்ணில் கூலிக்கு கொலைசெய்யும் தமிழ் துரோகிகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர் காத்திரனே?**

*க.கேசன், கலுவன்கேணி -2*

✍. இவர்களை நினைப்பதே நாம் செய்யும் துரோகம். எதிரிகளை மன்னிக்கலாம். துரோகிகளை மன்னிப்பது பாவம் அல்லவா.

☆☆☆☆

✎. **ஆபத்திற்கு உதவாத நண்பர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர் காத்திரனே?**

*நா. வாமதேவன், கன்னன்குடா*

✍. ஆபத்திற்கு உதவாத நண்பன் சமூகத்திற்கு உதவாத வம்பன் இவர்களை நண்பன் என அழைக்காமல் சந்தர்பவாதி என அழைக்கலாம்.

☆☆☆☆

✎. **இந்தப் பருப்பு இனியும் வேகாது என அமைச்சர் றவுப்ஹக்கீம் கூறியதைப் பற்றி உமது கருத்து?**

*க.மதிவதனி, காரைதீவு-4*

✍. இந்தியாவிற்கு போய் அமைச்சர் ஹக்கீம் வாங்கிய பருப்பு ஈழமண்ணில் ஒரு போதும் வேகாது என்பதை அவர் புரிந்தால் சரி தான்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

# வறுமை நிவாரணத்திலும்.....

6ம் பக்கத் தொடர்ச்சி....

சேற்றில் நட்ட தடி போல் இருக்கும் மக்கள் கூட்டம் குறுகியளவினர் என்று தொகையைக் குறைத்தாலும் ஒட்டுமொத்தமான மக்கள் சிந்தனையைப் புதைத்து விடுமளவிற்கான வழிமுறையினையே அரசு இவர்களினூடாகச் சாதித்து விடும். நீந்தத் தெரியாத மனிதன் ஆழமான நீர் நிலையில் வீழ்ந்து தத்தளிக்கும் போது அவனை மேலே தூக்கியெடுக்காமால் நீர் நிலையின் ஆழம், தேடி நீந்தக் கற்றுக் கொடுக்கத் திட்டம் போட நினைக்கும் முன்னே.... அந்த நீர்நிலையில் தத்தளிக்கும் மனிதன் மரணித்து விடுவான். ஆகவே.. குறிப்பிடப்படும் விடயம் சம்மந்தமாகப பாகுபாடில்லாமல் எவ்வாறு செயல்படுவது என்பது அவசியம். குறைகள் பிழைகள் சுட்டிக்காட்டப்படும் போது அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களே ஏராளமாக உளர். அது தெரிந்த விடயம் தான். சிலவேளை முழுமையாக சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுபவர்கள் தமக்குக் கூறுவதாக இந்தப் பத்தியில் குறிப்பிட்ட விடயங்களை எடுப்பாகளாக இருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல...

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுச் சொல்லியவற்றில் சில விடயங்களைப் பார்ப்போமானால்.

*. மீள் குடியமர்த்தப்பட்டு நிவாரணம் வெட்டப்பட்டவர்களை அரசு சமூர்த்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கவில்லை.

* ஏனைய மாவட்டங்களில் உள்ள சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வன்னி மாவட்டங்களிற்கு இடமாற்றும் ஏற்பாடு ஒன்று உள்ளதாக நான் அறிகின்றேன். அண்மையில் கூட இதன் ஆரம்ப நடவடிக்கையாக இரண்டு உத்தியோகத்தர்கள் வவுனியா மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத் தக்கவொன்றாகும்.

*. போரால் வறுமையாக்கப்பட்ட மக்களிற்கு சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல புதிய திட்டங்களை அமைச்சு அறிமுகப்படுத்தலாம்.

*. சமூர்த்தி அதிகார சபையின் ஆவணங்களில் ''வறுமை குறைந்த சுபீட்சமிகு இலங்கை'' எனக் கூறப்பட்டுள்ளது இதிலேன் பாகுபாடு?

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் நிலை வன்னி நாடாளுமன்ற உறுப்பினரால் பேசப்பட்டுள்ளது. இதில் பயனேதும் கிட்டுமா? அல்லது அரசியல் போன்று சமூர்த்தியிலும் ஏமாற்றுதானா? மக்கள் கேட்கின்றனர். பதில் என்ன? சம்மந்தப்பட்டவர்களே பதிலளியுங்கள்...

# துணைப்படை வீரர்....

18ம் பக்கத் தொடர்ச்சி....

காயமடைந்த போராளிகளோடு ஒருவாரமாகப் பசியோடிருந்த அவர்களை மீட்க முடியுமென்ற நம்பிக்கை குறைந்து கொண்டே சென்றது. திசை மாறிய ஏனைய அணிகளை ஒழுங்கமைத்து உரிய இடங்களுக்குக் கொண்டு வந்த மயில்க்குஞ்சண்ணனிடமே இறுதியாக இதுவும் ஒப்படைக்க ப்பட்டது. அவர்கள் இருக்குமிடத்தின் அமைப்பை வாக்கிடோக்கியில் கேட்டறிந்து கொண்டே குஞ்சண்ணன் இடத்தை இனங்கண்டு கொண்டான். பகலில் செல்ல முடியாததால் இரவுக்காய் காத்திருந்த குஞ்சண்ணன் அன்றிரவே குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்து அவ்வணியை அழைத்து வந்தார். அந்த நாளை நினைத்தால் இன்னும் வாய்விட்டு அழ வேண்டும். எங்கள் போராளிகளின் உயிர்களைத் தன் உயிரிலும் மேலாய் சுமந்து காத்தவன். எழுத்தில் இவனது போர்ப் பயணங்களை எழுதிக் காட்டுவது இயலாது.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் நாளில் என்னுடன் பேசிக் கொண்டதை நினைத்துப் பார்க்கிறேன். 'எங்க குஞ்சண்ணை ஊர்ப்பக்கம் போறியளோ' எனக் கேட்டேன் 'வேற எங்க மாஸ்ரர், என்ர வழமையான வேலைக்குத்தான்' எனக்கூறி விட்டு சைக்கிளை வேகமாக உழக்கினான். தான் பிறந்த கொக்குத் தொடுவாய் மண் பறிபோனது. அவனது மனதில் ஆறாத வடுவாயிருந்தது. அவனுடைய இறுதிப் பயணமாய் இருக்குமென நான் கனவிலும் நினைத்ததில்லை.

மயில்குஞ்சண்ணனின் வீர உடலில் கால்வருடி, முகம் வருடி அழுது கொண்டிருந்த அவனது மனைவி சொல்லியழுத சில வார்த்தைகளை நான் நினைக்கிறேன்.

''காடெண்டாலே பயமில்லாத நீங்கள், நேற்று மட்டும் இண்டைக்குக் காட்டுக்குப் போறதெண்டு நினைக்கப் பயமாய்க் கிடக்குதப்பா என்று சொன்னியளே, சாவுவரப்போவதைத் தெரிஞ்சுதான் சொன்னீங்களோ. அக்கா, ஆள்வர ரெண்டு மூண்டு நாளாகும் என்று சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார்கள். ஒவ்வொரு தடவையும் இப்பிடித் தான் கூட்டிக் கொண்டு போய் கூட்டிக் கொண்டு வந்து விடுவார்கள். வீட்டில நீங்கள் நிண்ட நாட்களை எண்ணிப் பார்க்கலாமே. எல்லாநாளும் போராளிகளோட காட்டில் தான் நிண்டநீங்கள். நீங்கள் மட்டக்களப்புவரை போராளிகளைக் கூட்டிக்கொண்டு போய்வர, மாதக்கணக்கில் கூட தனியத்தான் இருந்தனான். இண்டைக்கு நிரந்தரமாய்ப் போட்டியளே'' என்று சொல்லி அழுதாள். அந்த வீரனின் காலடியில் நின்று கண்ணீரால் மட்டுமே காணிக்கை செலுத்த முடிந்தது. அவனுக்காக சிலவரிகளை உடன் எழுத வேண்டும் என்ற வேகத்தில் சில நிமிடங்கள் எழுத்துருவாய் அவனோடு பேசிக் கொண்டேன்.

# தமிழ்அலை ஓராண்டு வெற்றிக் கிண்ணம்

*கிழக்கு மாகாணத்தின் ஒரே பத்திரிகையான தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறையினரால் மட்டு. அம்பாறை மாவட்ட உதை பந்தாட்ட சங்கங்களினால் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி*

☯. இச்சுற்றுப் போட்டியில் கலந்து சிறப்பிக்கவுள்ள மட்டு.அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இல. 46, பயனியர் வீதியில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்துடன் தொடர்வு கொள்ளவும்.

☯. போட்டி நுழைவு விண்ணப்பப் படிவங்களை 15.03.2004 முதல் அனுப்பி வைக்கவும்.

☯. இடம்:- மட்/இந்துக் கல்லூரி மைதானம்.

☯. காலம்:- (01.04.2004 முதல் 05.04.2004) வரை

☯. போட்டிகள் யாவும் விலகல் முறையில் (Knock out) இடம்பெறும்.

☯. போட்டிகள் யாவும் உதைபந்தாட்ட சட்ட விதிகளுக்கு அமைவாக நடாத்தப்படும். (சீருடை, காலுறை என்பன கண்டிப்பாக ஒரே நிறத்தினையுடையதாக இருக்க வேண்டும். இலக்கம் தெளிவாக இருக்க வேண்டும்.

☯. இச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறுகின்ற அணிகளுக்கு

- ❖. முதலாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம்ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖. இரண்டாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖. மூன்றாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖. நான்காம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖. நன் நடத்தை அணிக்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
- ❖. இது தவிர சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், சிறந்த தொடர் வீரர் ஆகியோருக்கு விசேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படும்.

☯. போட்டி நுழைவுக் கட்டணமாக 250 ரூபா அறவிடப்படும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2004)






தமிழ் அலை பிராந்திய பணிமனை கடந்த ஜனவரி மாதம் 14ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். தயாபரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார். தமிழ் அலை முகாமைத்துவப் பணிப்பாளர் பி.அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை, ரெலோ இயக்க செயலாளர் நாயகம் இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் எஸ்.பத்மநாதன், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் இரா.துரைரெட்ணம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக தமிழ் அலை வினியோக முகாமையாளர் து.நாகேந்திரராஜா நன்றி உரையாற்றினார்.


# இதோ மகிழ்ச்சியான செய்தி

மிகக்குறைந்த கட்டணங்களில் உங்கள் விளம்பரங்களை தமிழ்அலையில் பிரசுரியுங்கள்

## புதிய விளம்பரக் கட்டண விபரம்

| | வார இதழ் | | நாள் இதழ் |
|---|---|---|---|
| | க.வெ | கலர் | கறுப்பு,வெள்ளை |
| முழுப்பக்கம் | 5000 ரூபா | 10000 ரூபா | 4500 ரூபா |
| அரைப்பக்கம் | 2500 ரூபா | 5000 ரூபா | 2000 ரூபா |
| காற்பக்கம் | 1250 ரூபா | 2500 ரூபா | 1000 ரூபா |
| ஒரு கொலம்(CM) | 25 ரூபா | 50 ரூபா | 20 ரூபா |

* மரண அறிவித்தல், பிறந்தநாள் விளம்பரங்களுக்கு 10 வீதம் கழிவு
* மாவீரர்களுக்கு 20 வீதம் கழிவு

## தொடர்புகளுக்கு

விளம்பர முகாமையாளர்,
தமிழ் அலை,
பிரதான வீதி ,
கொக்கட்டிச்சோலை.
தொ.பேசி:-065-2226110

மட்டக்களப்பு நகரில்
பிராந்திய பணிமனை,
தமிழ் அலை,
இல:240,திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ.பேசி:-065-2226489

# வீரம் விளை நிலம், வெற்றிப்பெரும் தளம்

# மட்டக்களப்பில்



## மாபெரும்

# 'பொங்கு தமிழ்'

## கிழக்குப் பல்கலைக்கழக விளையாட்டு முற்றத்தில்

## 21.01.2004

புதன் காலை 10 மணிக்கு

சங்கத் தமிழினமே வங்கக் கடல் போல்
சங்கமிப்போம் வாரீர்!
எங்கள் உரிமைக்குரலால் உலகத்தை விழிக்கவைப்போம்
உணர்வுகளைத் தாரீர்!


இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள நித்திபதிப்பகத்தில் அச்சிட்டு 18-01-2004 அன்று வெளியிடப்பட்டது.